# செம்மணி

நிலம் 2 துகள் 81 வள்ளுவர் ஆண்டு 2052, 05 - 11 மாசி 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-

## சுதந்திர நாளை புறக்கணித்தார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

இலங்கையின் 74 ஆவது சுந்திர நாளைக் குறிக்கும் அரச நிகழ்வுகளைப் புறக் கணித்து தனியாக சமய நிகழ்வு களை நடத்தினார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

சுந்திர சதுக்கத்தில் நடந்த அரச நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் அந்த நிகழ்வுகளை முற்றாகப் புறக்கணித்தார்.

பதிலாக கொழும்பு விகாரையொன்றில் நடத்தப்பட்ட சுதந்திர நாள் சமய நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டார். எதிர்க் கட்சித் தலைவருடன் சேர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும்கூட சுதந்திர நாள் அரச நிகழ்வுகளைப் புறக்கணித்திருந்தனர்.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும்கூட சுதந்திர நாள் கொண்டாட்டங்களைப் புறக்கணித்தனர்.




# நாட்டின் சுதந்திர நாள் வடக்கில் முழு கரிநாள்

### எதிர்ப்புப் போராட்டங்கள், ஊர்வலங்கள் மூலம் எதிர்ப்பலை பதிவு

இலங்கையின் 74ஆவது சுதந்திர நாள் கொண்டாட்டங்கள் நேற்று கொழும்பில் முழு அளவில் இடம்பெற்றன. அதேநேரம் வடக்கில் தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை கரி நாளாக அறிவித்து ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தினர். தமிழர்களின் இந்த எதிர்ப்புக்கு மத்தியிலும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாண சுதந்திர நாள் கொண்டாட்டங்கள் என்கிற பெயரில் நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

'சவால்களை வெற்றி கொண்ட வளமான நாள் - சுபீட்சமான தாய் நாடு' என்ற தொனிப் பொருளில் இவ்வருட தேசிய சுதந்திர தின கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

சுகாதார அணிவகுப்புகள், ஆயுதப் படைகளின் வணக்கங்கள் மற்றும் ஆயுதப்படைகள், காவல்துறை, சிவில் பாதுகாப்புத் துறைகள் மற்றும் கேடட்களின் கிட்டத்தட்ட 6,500 உறுப்பினர்களின் அழகிய கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

சுதந்திர நாள் அணி வகுப்புகளில் 3,463 தரைப் படையினரும் 919 கடற்படையினரும் 804 வான் படையினரும் 336 காவல்துறையினரும் 282 சிறப்பு அதிரடிப் படையினரும் 437 சிவில் பாதுகாப்புப் படையினருமாக மொத்தமாக 6,500 படையினர் அணி வகுப்புக்களில் கலந்துகொண்டனர்.

தலைமை அமைச்சர் மஹிந்த ராஜபக்ச மற்றும் ஏனைய தூதுவர்கள்,

பக்கம் 02

## நாணய நிதிய ஆலோசனைகளை உண்மையில் நாடியதா இலங்கை?

கொரோனா பாதிப்பைத் தொடர்ந்து மிக மோசமான பாதிப்பை எதிர்கொண்டுள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக பன்னாட்டு நாணய நிதியத்தின் (ஐஎம் எவ்) ஆதரவைப் பெறுவதற்கான சமிக்ஞையை கொழும்பு ஆட்சியாளர்கள் வெளிப்படுத்தியுள்ள நிலையில், அத்தகைய கோரிக்கைகள் எவையும் தமக்குக் கிடைக்கவில்லை என்று நிதியத்தின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி கையை விரித்துள்ளார்.


நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஆலோசனைகளையும் நிதி உதவிகளையும் பெறுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியை நாடுமாறு எதிர்க் கட்சிகளின் தலைவர்களும் துறைசார் வல்லுநர்களும் ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தி வந்தனர். ஆனால், ஒருபோதும் நிதியத்தின் உதவியை நாடப்போவதில்லை என்று ஆட்சியாளர்கள் மறுதலித்து வந்தனர்.

கடனுதவிக்காக சென்றால் மனித உரிமைகள் விவகாரம் உள்ளிட்ட அரசியல் தலையீடுகளை நாணய நிதியம் நிர்ப்பந்திக்கும் என்கிற காரணத்தாலேயே அதன் உதவியை நாடுவதில்லை என்கிற பிடிவாதத்தோடு ஆட்சியாளர்கள் இருந்தனர். எனினும் நிலமை சமாளிக்க முடியாத நிலையை அடைந்தை அடுத்து, நாணய நிதியத்திடம் இருந்து ஆலோசனைகளை பெறப்போவதாக நிதி அமைச்சர் ஓரிரு தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

அதற்கான உத்தியோக பூர்வ கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்றும் நாணய நிதியத்தின் அதிகாரிகள் விரைவில் ஆட்சியாளர்களுடன் இதுபற்றிப் பேசுவார்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தார். நிதி அமைச்சரின் இந்தச் செய்தி புதன்கிழமை வெளியாகிய நிலையில் வியாழக்கிழமை ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்திடம் பேசிய நாணய நிதியத்தின் இலங்கக்கான வதிவிடப்பிரதிநிதி அத்தகைய கோரிக்கைகள் எவையும் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

"அத்தகைய

பக்கம் 02



## பிரச்சினையை இன்னுமின்னும் பெரிதாக்கப் போகிறீர்களா?

### செய்தியாளரிடம் கேட்ட நிதி அமைச்சர்

கொழும்பு புறக்கோட்டை சந்தையில் புழங்கும் கறுப்பு டொலர் பணத்தைப் பயன்படுத்தி வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது தொடர்பாக மேலதிக விளக்கத்தைக் கேட்ட செய்தியாளரைப் பார்த்து "நீங்கள் மேலும் பிரச்சினையை உருவாக்கப் போகிறீர்களா?" என்றார் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச.



முன்னதாக, ஞாயிறு சிங்கள வாரப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி வடகொரியாவிடமிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்த விவரத்தைத் தெரிவித்திருந்தார். இந்த விடயம் வெளியானதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களை வாங்கியது, அதிலும் கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி வாங்கியது தொடர்பாக நிதி அமைச்சர் தெரிவித்த கருத்து நிரூபிக்கப்பட்டால் அமெரிக்கா இலங்கையின் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கான ஏது நிலை உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுகின்றது.

இந்த நிலையிலேயே புதன்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த நிதி அமைச்சரிடம் செய்தியாளர் ஒருவர் மீண்டும் மீண்டும் இது தொடர்பில் கேள்வி எழுப்பினார். அப்போதே அமைச்சர் மேலும் பிரச்சினையை வளர்க்கப் போகிறீர்களா என்று கேட்டார்.

இதேவேளை நிதி அமைச்சரின் கருத்தை அயல் உறவுத் துறை அமைச்சு அவசர அவசரமாக மறுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## முழு தடுப்பூசி போட்டவர்களுக்கு இந்த வருடத்தில் இறப்பு இல்லை

### கொழும்பு மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

கொரோனா பெருந் தொற்றுக் காரணமாக இந்த வருடத்தில் கொழும்பில் உயிரிழந்தவர்கள் முன்றாம் கட்டத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதவர்கள் என்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இந்த ஆண்டில் இதுவரையில் நிகழ்ந்திருக்கக்கூடிய கொரோனா இறப்புக்கள் அனைத்தும் ஒன்றில் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதவர்களுடையது அல்லது இரண்டாவது தடுப்பூசி ஏற்றப்பட்டு 8 மாதங்கள் கடந்த நிலையிலும் மூன்றாம் கட்டத் தடுப்பூசியைப் போடத் தவறியவர்களுடையது என்று கொழும்பு மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ருவான் விஜயமுனி தெரிவித்தார்.

இந்த ஆண்டில்

பக்கம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**


## அர்த்தமற்ற உரை

நாடு பற்றியெரிந்துகொண்டிருந்தபோது பிடில் வாசித்துக் கொண்டிருந்தார் நீரோ மன்னர் என்றொரு கதையுண்டு. அதைப் போன்று இருக்கின்றது இலங்கையின் 74ஆவது சுதந்திர நாள் நிகழ்வில் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச ஆற்றிய உரையும்.

அண்மைக் காலத்தில் அரச தலைவர் நாட்டுக் மக்களுக்கு உரையாற்றும் இரண்டாவது சந்தர்ப்பம் இது. முதலாவது சந்தர்ப்பம் இந்த ஆண்டுக்கான நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்கியபோது வாய்த்தது. இரண்டு வாய்ப்புக்களிலும் பொருளற்ற உரைகளையே அரச தலைவரால் ஆற்ற முடிந்திருக்கிறது என்பது கவலைக்குரியது.

நாடு மிகப் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது, அதிலிருந்து மீள்வதற்கு ஆட்சியாளர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்கு மக்களும் மற்றைய நாடுகளும் ஆவலுடன் உள்ளன. பொருளாதாரச் சரிவு காரணமாக நாடு திவாலாகி விடுமா என்கிற அச்சத்தில் மக்கள் மூழ்கியுள்ளனர். இத்தகை நிலையில் நாட்டின் தலைவர் அவர் ஆற்றிய இரண்டாவது பகிரங்க உரையிலும் நாடு இந்தச் சிக்கலை எப்படி எதிர்கொள்ளப் போகிறது என்பது பற்றி விளக்கவே இல்லை என்பது மிகப் பெரிய அபத்தம்.

வெள்ளிக்கிழமை அரச தலைவர் ஆற்றிய உரை முழுக்க முழுக்க தற்புகழ்ச்சி மற்றும் அறிவுரைகளால் நிரம்பிக் கிடந்தது. நாடு நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் நிலையில் கடந்த காலங்களின் வீரப் பிரதாபங்களும் அடுத்தவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்கிற அறிவுரைகளும் எந்த விதத்திலும் உதவப் போவதில்லை. நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஆட்சியாளர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை அறிந்துகொள்வதிலும் அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய பாதை சரியானதா இல்லையா என்கிற விவாதத்தில் ஈடுபடுவதிலுமே மக்களும் மற்றைய நாடுகளும் ஆர்வம் காட்டிவரும் நிலையில் அரச தலைவரின் உரை வெற்று முழக்கங்களால் கட்டியமைக்கப்பட்டமை பெரும் துன்பியல்.

"நாங்கள் முன்வைத்த சுபீட்சத்தின் நோக்கு எனும் கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப் படுத்துவதற்காகவே மக்கள் தற்போதைய ஆட்சிக்கு ஆதரவு வழங்கினார்கள். நாங்கள் முன்வைத்த கொள்கைப் பிரகடனத்தில், பசுமைக் கைத்தொழில், புதுப்பிக்கத்தக்க சக்திப் பயன்பாட்டு மேம்பாடு, புதிய உலகத்துக்கு ஏற்ற கல்வித் திருத்தங்கள், தேசிய தொழில் முயற்சியாண்மையை ஊக்குவித்தல், ஏற்றுமதி பல்வகைத்தன்மை, மற்றும் பெறுமானத்தை அதிகரித்தல், பொருளாதாரத்தின் புதியதொரு பாய்ச்சலுக்காகத் தொழில்நுட்பப் பாவனையைப் பரவலாக்கல் போன்ற நாம் அடையாளம் கண்டுகொண்ட முன்னுரிமைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை" என்று அரச தலைவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

ஆனால், இன்றைய நிலையில் இவற்றை அடைவதற்காக அரசு கொண்டுள்ள திட்டம் குறித்து மட்டும் விளக்க அவரிடம் எந்த விடயமும் இருக்கவில்லை.

மேலும், இலங்கையின் சுதந்திர நாளை நாட்டின் ஒரு பகுதி மக்கள் கரிநாளாக அறிவித்து ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்திக்கொண்டிருந்தார்கள். தெற்கில் அரச தலைவர் சுதந்திர நாள் உரையை ஆற்றிக் கொண்டிருக்கும்போது வடக்கில் இந்தப் போராட்டங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. இவற்றில் கலந்துகொண்டிருந்தவர்களில் அனேகம்பேர் நீண்ட காலமாக நீதிவேண்டிப் போராடிக் கொண்டிருக்கின்றவர்கள்.

இவர்களின் பிரச்சினைக்கான தீர்வு குறித்தோ, நாட்டின் இனப் பிரச்சினைக்கான தீர்வு அதற்கான வழிவகைகள் குறித்தோகூட அரச தலைவரின் உரையில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை என்பது பெரும் ஏமாற்றம். அவரது கடந்த நாடாளுமன்ற உரையிலும் இது பற்றி எதுவும் குறிப்பிடப்படாதது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்திருந்த நிலையிலும் சுதந்திர நாள் உரையிலும் அது பற்றி எந்தக் கருத்தும் தெரிவிக்கப் படவில்லை.

தற்பெருமை, அறிவுரைகள் என்பவற்றுக்கு மேலாக வாக்குறுதிகள் சிலவற்றால் கட்டமைக்கப்பட்ட இந்த சுதந்திர நாள் உரை எந்தப் பெறுமதியும் இல்லாத ஒன்று. அர்த்தமற்ற ஒன்று.

## நாட்டின்...

உயர் ஆணையர்கள், இராஜதந்திரிகள் மற்றும் அமைச்சர்கள், அரச தலைவரின் செயலாளர், அரச நிறுவனங்களின் தலைவர்கள், பாதுகாப்புப் படைகளின் பிரதானிகள் மற்றும் படைத் தளபதிகள், காவல் மா அதிபர் மற்றும் பல படையினரின் குடும்ப உறுப்பினர்களும் சுதந்திர நாள் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டனர்.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச மற்றும் அவரது பாரியார் அயோமா ராஜபக்ச ஆகியோர் நிகழ்விடத்துக்கு வருகை தருவதை அறிவிக்கும் வகையில் இசைக் கருவிகள் இசைக்கப்பட்டன. அதன் பின்னர், அரச தலைவர் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். பாடசாலை மாணவ, மாணவியரினால் தேசிய கீதம் பாடப்பட்டது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி, கடற்படை, வான்படைத் தளபதிகள் மற்றும் காவல் மா அதிபர் ஆகியோர், அரச தலைவரை சிறப்பு மேடைக்கு அழைத்துச் சென்றனர். தொடர்ந்து, பாடசாலை மாணவிகளால் 'ஜயமங்கள கீதம்' மற்றும் 'தேவோ வஸ்ஸது காலேன' கீதங்கள் பாடப்பட்டன. இலங்கையின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த அனைத்து இலங்கையர்களையும் நினைவேந்தும் வகையில் 02 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து அரச தலைவரின் உரை இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து அணிவகுப்புகள் இடம்பெற்றன.

அதேநேரம் வடக்கில் பல இடங்களிலும் சுதந்திர நாளை கரிநாளாக அறிவித்து ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெற்றன. முதன்மை நிகழ்வு இறுதிப் போர் நடந்த, மனிதப் பேரவலங்கள் நிகழ்த்தப்பட்ட முள்ளிவாய்க்காலில் நடந்தது.

இறுதிப் போரில் உயிரிழந்த தமிழ் மக்களின் நினைவாக உருவாக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் கூடிய நூற்றுக்ணக்கானவர்கள் அங்கு பொதுச் சுடர் ஏற்றி கரிநாள் அறிவிப்பை வெளியிட்டனர். அங்கிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு முல்லைத்தீவு நோக்கிச் சென்றனர்.

இறுதிப் போரில் மிக முக்கிய பகுதியாக செய்திகளில் அடிபட்ட வட்டுவாகல் பலம் அருகே உள்ள கோட்டாபய கடற்படை முகாம் முன்பாக ஊர்வலம் சென்றபோது எதிர்ப்புக் குரல்கள் பலமாக ஒலித்தன.

இறுதிப் போரில் புலிகளின் கடைசிக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மக்கள் கடந்துவந்த மிக ஒடுக்கமான வட்டுவாகல் பாலத்தில் தீப்பந்தங்களையும் கறுப்புக்கொடிகளையும் ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் சிறிது நேரம் நின்று கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இறுதியில் செல்வபுரம் புனித யூதா தேவாலயம் வரை சென்ற ஊர்வலம் அங்கு நிறைவுற்றது. அரசியல்வாதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மதத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டிருந்தார்கள்.

வடக்கின் பல மாவட்டங்களிலுமிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட பேருந்துகளின் மூலம் போராட்டக்காரர்கள் முல்லைத்தீவை வந்தடைந்திருந்தார்கள்.

இதேவேளை இலங்கையின் சுதந்திர நாளை கரிநாளாக அறிவித்து யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்திலும் வெள்ளிக்கிழமை போராட்டம் இடம்பெற்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

காலை 10 மணியளவில் பேருந்து நிலையத்திற்கு முன்பாக நடந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் யாழ். முனியப்பர் ஆலயம் வரை ஊர்வலமாகவும் சென்றார்கள்.

தமிழ் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி விசாரணையை நடத்து, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, அரசியல் கைதிகளை நிபந்தனை இல்லாமல் விடுதலை செய், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு போன்ற கோரிக்கைகளும் இந்தப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

வடக்கு, கிழக்கு தமிழரின் பூர்வீக தேசம், ஸ்ரீலங்காவின் சுதந்திரநாள் தமிழரின் கரிநாள், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை மறக்கமாட்டோம், காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி வழங்கு போன்ற முழக்கங்களும் எழுப்பப்பட்டன.

இதற்கிடையே சுதந்திர நாள் கொண்டாட்டத்தையொட்டி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பேருந்துகளில் அழைத்து வரப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வுகள் தொடங்குவதற்கு முன்பாக இலங்கையின் தேசியக்கொடிகளைத் தாங்கியபடி நூற்றுக்கும் அதிகமான உந்துருளிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் யாழ். நகரை வலம் வரவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டங்கள் தவிர வடக்கில் இயல்பு நிலையில் பெரியளவில் மாற்றங்கள் எவையுமிருக்கவில்லை. பெரும்பாலும் கடைகள் திறந்திருந்தன. மக்கள் வழக்கம்போல் தமது அன்றாட அலுவல்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

## முழு தடுப்பூசி...

கொரோனாவிற்கு அடிபணிந்தவர்கள் எல்லோருமே ஒன்றில் தடுப்பூசியே போட்டுக் கொள்ளாதவர்கள் அல்லது இரண்டாவது தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதவர்கள் சிலர் மூன்றாம் கட்டத்தை எடுத்துக் கொள்ளாதவர்கள் என்றார் அவர்.

இந்த வருடத்தில் உயிரிழந்தவர்களில் யாரும் மூன்று கட்டத் தடுப்பூசியையும் ஏற்றிக்கொண்டவர்களாக இல்லை என்பதை அவர் ஆணித்தரமாக உறுதிப்படுத்தினார்.

இலங்கையில் கடந்த ஆடி மாதம் முதல் மூன்றாம் கட்டத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் தொடங்கியிருக்கின்றன. எனினும் அதனைப் பெறுவதில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. இதுவரையில் நாட்டில் 30 சதவீதமானவர்கள் மட்டுமே மூன்றாம் கட்டத் தடுப்பூசியை எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்கின்றன புள்ளிவிவரங்கள்.

கடந்த 6 மாதங்களில் 40 லட்சத்து 52 ஆயிரம் பேர் மட்டுமே மூன்றாம் கட்டத் தடுப்பூசியை எடுத்துள்ளனர். இதற்கிடையில் ஒமிக்ரோன் திரிபு பரவல் தீவிரம் காரணமாக தை மாத நடுப்பகுதியில் இருந்து மூன்றாம் கட்டத் தடுப்பூசியை ஏற்றிக் கொள்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது என்கிறார்கள் சுகாதார அதிகாரிகள்.

புதன்கிழமை புள்ளிவிவரங்களன்படி ஆயிரத்து 156 பேருக்குத் தொற்று கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. 19 பேர் அன்றைய தினம் உயிரிழந்திருந்தனர்.

## நாணய நிதிய...

கோரிக்கைகள் எவையும் முன்வைக்கப்படவில்லை, அப்படி முன்வைக்கப்பட்டால் அதற்கான வாய்ப்புக்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு எமது அலுவலர்கள் தயார் நிலையில் இருக்கிறார்கள்" என்றார் நாணய நிதியத்தின் விதிவிடப் பிரதிநிதி மசாகிரோ நொசாக்கி.

இலங்கையின் பொருளாதார நிலமை குறித்து பன்னாட்டு நிதியம் தொடர்ந்து உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே நாணய நிதியத்தின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு ஒன்று தற்போது இலங்கையில் இருக்கிறது. அதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக வந்திருக்கக்கூடிய இந்தக் குழுவிற்கு இலங்கை நாணய நிதியத்தை நாடலாம் என்கிற தகவல் பகிரப்பட்டிருப்பதாகவும் நொசாக்கி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரையும் திருப்திப்படுத்துவது எமது நோக்கம் அல்ல - அரச தலைவர்

## சுதந்திர தின உரையில் தெரிவிப்பு



மாற்றமடையாதோருக்காகக் காத்திருந்து நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்காக நாம் திட்டமிட்டுள்ளவற்றைக் கைவிட நாம் தயாரில்லை. எமது நோக்கமானது நாடு சார்பில் சரியானதைச் செய்வதே தவிர எல்லோரையும் திருப்திப்படுத்துவதல்ல - என்று தெரிவித்தார் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச.

இலங்கையின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வில் வெள்ளிக்கிழமை அவர் ஆற்றிய உரையின் தமிழ் மொழி வடிவம் அப்படியே இங்கு தரப்படுகின்றது.

சுதந்திரமான ஒரு நாட்டின் கௌரவம்மிக்க ஒரு பிரஜையாக வாழ்வதற்குள்ள உரிமையை முன்னிட்டு, வரலாறு முழுவதும் பல நாடுகளின் மக்கள் கலவரங்களை நடத்தியுள்ளார்கள். போர்களை முன்னெடுத்துள்ளார்கள். பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளார்கள்.

இலங்கையிலும், 2,500 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றின் பல காலப்பகுதிகளில், வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடிய துட்டகைமுனு, வலகம்பா, மஹா பராக்கிரமபாகு, விஜயபாகு, ஆறாவது பராக்கிரமபாகு போன்ற சிறந்த மன்னர்கள் வெளிநாட்டவர்களிடமிருந்து நாட்டை மீட்டு நாட்டை ஒன்றுபடுத்தினார்கள்.

இறுதியாக, ஏறத்தாழ 450 ஆண்டு காலமாக இருந்து வந்த ஐரோப்பிய காலனித்துவ ஆட்சிகளிலிருந்து எமது நாடு சுதந்திரம் பெற்று தற் போது 74 ஆண்டுகள் கடந்துள்ளன.

சுதந்திரத்தின் பின்னரும்கூட அண்ணளவாக 3 தசாப்தங்களுக்கு நாட்டைத் துண்டாட முயன்ற பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராட நேர்ந்து விட்டது.

இன்று இலங்கையானது ஒரு சுதந்திரமான இறைமை பொருந்திய ஜனநாயக நாடாகும். நாம் அதன் அபிமானம் கொண்ட குடிமக்கள்.

வரலாறு முழுவதும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு எமது நாட்டுக்கு முழுச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், அர்ப்பணிப்புடன் முன்னின்ற நாட்டுப் பற்றுடையவர்கள் எல்லோருக்கும் நான் இவ்வேளையில் எனது மரியாதையைச் செலுத்துகின்றேன்.

இனம், மதம் என்ற எவ்வித பேதங்களுமின்றி ஒவ்வோர் இலங்கைக் குடிகளுக்கும் இன்று நாட்டின் எப்பிரதேசத்திலும் சுதந்திரமாகவும் பாதுகாப்புடன் வாழும் உரிமையுண்டு. தாம் விரும்பும் மதத்தை வழிபடுவதற்கான சுதந்திரமும் உள்ளது. அபிப்பிராயங்களைச் சுயாதீனமாக முன்வைப்பதற்கும் கருத்துக்களை வெளியிடுவதற்கும் சுதந்திரம் இருக்கின்றது.

நாட்டினுள் முழுமையாக ஊடகச் சுதந்திரம் இருக்கின்றது. இலங்கைப் மக்கள் பரிபூரணமாக ஜனநாயக முறைமையொன்றினூடாகத் தத்தமது மக்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதற்கும் விரும்பியவர்கள் அரசியல் செயற்பாட்டினூடாக அரச ஆட்சியில் சம்பந்தப்படுவதற்கும் சுதந்திரம் இருக்கின்றது. இது, எம் அனைவரது மகிழ்ச்சிக்கும் அபிமானத்துக்கும் உரியதொரு காரணமாகும்.

சுதந்திரமிக்க ஜனநாயக ரீதியிலான நாடொன்றின் மக்கள் என்ற வகையில், எல்லோருக்கும் சிறப்புரிமைகள் இருப்பதுபோன்று பொறுப்புகளும் இருக்கின்றன. எல்லோரும் நாட்டுக்காகத் தமது பொறுப்புகளை நிறைவேற்றும்போதுதான் கிடைத்த சுதந்திரத்தின் உச்சகட்டப் பயன் கிடைக்கும். பொறுப்புகளை மறந்துவிட்டு உரிமைகளைப் பற்றி மட்டும் பேசுவது பொருத்தமாக இருக்காது.

ஒரு நாடானது, சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய சகல அம்சங்களினாலும் வலுவடையும் போதே, அந்நாட்டின் சுதந்திரமானது மிக அர்த்தமுள்ளதாக அமைகிறது. அதற்காக முனைப்பாகப் பங்களிக்கும் சந்தர்ப்பம் அரசைப் போன்று மக்களுக்கும் உள்ளது. ஒரு நாட்டை உரிய திசையை நோக்கிக் கொண்டுசெல்லும்போது, அதற்காக நாட்டின் அனைவரது உதவியையும் எதிர்பார்க்க முடியாது என்பதை நாம் அறிவோம்.

மாற்றமடையாதோருக்காகக் காத்திருந்து நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்காக நாம் திட்டமிட்டுள்ளவற்றைக் கைவிட நாம் தயாரில்லை. எமது நோக்கமானது நாடு சார்பில் சரியானதைச் செய்வதே தவிர எல்லோரையும் திருப்திப்படுத்துவதல்ல.

எதிர்காலத்தை நற்சிந்தனையுடன் நோக்கும் ஆக்கமுறையான சிந்தனையின் மூலம் மட்டும்தான், நாம் எமது வருங்காலப் பயணத்தில் வெற்றி பெற முடியும். வெற்றிகரமானதொரு பயணத்துக்கு வேண்டிய அர்ப்பணிப்புகளைச் செய்தால் மட்டும்தான், நாம் எதிர்கொள்கின்ற சவால்களை வெல்ல முடியும்.

எதிர்மறையான சிந்தனையுடையவர்கள் உலகை மாற்றிவிட மாட்டார்கள். அவர்களுக்கு அதற்கான ஆற்றலும் இல்லை. ஒரு பிரச்சினைக்குத் தீர்வொன்றை முன்வைக்காமல் விமர்சனம் மட்டும் செய்யும் பழக்கம் உள்ளவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய நோக்கு இல்லை.

ஒரு நாட்டின் தலைவர், அநேகமான கஸ்டங்கள், அனர்த்தங்கள், பிரச்சினைகள் மற்றும் சவால்களைத் தொடர்ந்து எதிர்கொள்ள நேரிடுகிறது. ஒரே நோக்கை நோக்கிக் குழுவொன்றை வழிநடத்துவது இலகுவானதல்ல. எவ்வளவு நல்ல நோக்கமாக இருப்பினும், நடைமுறையில் இருக்கின்ற முறைமைகளை மாற்றுவது இலகுவானதல்ல. சில விடயங்களில், உள்நாட்டைப் போன்று அந்நிய சக்திகளும் எம்மை எதிர்த்து ஒன்றுகூடுகின்றன. சிலவேளை உங்களது பக்கத்தில் நிகழும் செயல்கள் எல்லாம் உங்களுக்கு எதிராக நடக்கும் சதியாகத் தோன்றும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

மக்கள் தலைவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது இவ்வனைத்துப் பிரச்சினைகளையும் முகாமைத்துவம் செய்துகொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதே தவிர பிரச்சினைகளிலிருந்து தப்பி ஓடுவதல்ல. அதற்குத் தேவையான ஆக்கமுறையான உளப்பாங்கு எம்முள் இருக்கின்றது. நாடு எதிர்கொள்கின்ற எந்தவொரு சவாலையும் வெற்றிகாண்பதற்காகத் தலைமைதாங்க நான் எப்பொழுதும் தயாராக இருக்கின்றேன்.

ஆக்கமுறையான கருத்துகளைக் கொண்டுள்ள, எதிர்காலம் பற்றிய நல்ல கனவுகளைக் கண்டு அவற்றை அடைய முயன்றவர்கள் தான் உலகை மாற்றியிருக்கிறார்கள். வரலாறு முழுவதிலிருந்தும் இது நமக்குத் தென்படுகிறது.

நாட்டுத் தலைவருக்கும் மக்களுக்கும் இருக்கும் ஆக்கமுறையான சிந்தனையே, முன்னேறிய ஒவ்வொரு நாட்டினதும் உயர்வுக்குக் காரணமாகியுள்ளது.

புராதன காலத்திலிருந்த எமது மன்னர்கள், ருவன்வெலிசாய, ஜேத்தவனாராமய மற்றும் அபயகிரி போன்ற விசாலமான நிர்மாணங்களை, ஆக்கமுறையான சிந்தனைகளின் மூலம் தான் செய்தார்கள். மின்னேரியா குளம், கலா வாவி, பராக்கிரம சமுத்திரம் மற்றும் யோத எல போன்ற நிர்மாணங்களைச் செய்த தலைசிறந்த நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் அன்று எமக்கு இருந்தது. சீகிரியா போன்ற நகர நிர்மாணிப்புகள் இன்றும் உலகை ஆச்சரியப்படுத்துகின்றன.

இலங்கையானது, பண்டைய கால உலகின் பகிரங்கமானதொரு கப்பல் மையமாக இருந்தது. அன்று எமக்கு அப்படியானவற்றைச் செய்யும் இயலுமை இருந்திருந்தால் வருங்காலத்திலும் உலகுடன் போட்டியிடும் ஆற்றல் நமக்கு இருக்க வேண்டும்.

அதற்கு இன்றியமையாத காரணியாக அமைவது நாம் எம் மீது கொண்டுள்ள நம்பிக்கைதான். கஸ்ட காலங்கள் நீண்டு நிலைத்திருக்கப் போவதில்லை. கஸ்ட காலங்களை எதிர்கொள்ள, சக்தி வாய்ந்த மனிதர்கள் தேவைப்படுவார்கள். அதனால், மற்றவர்களை உளரீதியாக வீழ்த்துகின்ற ஒவ்வொருவரும் இவ்வேளையில் சமூகத்துக்காகச் செய்வது உதவியல்ல.

அதனால் இப்பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தேவைப்படும் ஆக்கமுறையான சிந்தனையை நாட்டில் ஏற்படுத்துவதற்கு நாம் எல்லோரும் பெரும் பொறுப்புடையவர்களாக உள்ளோம்.

அண்மைக்கால வரலாற்றில் நாம் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டுள்ளோம். பயங்கரவாதத்தை ஒருபோதும் போரினால் தோற்கடிக்க முடியாதென்று அன்று பூரண எதிர்மறைச் சிந்தனையை கொண்டுள்ளவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தபோது, ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, ஜெனரல் விஜய விமலரத்ன போன்ற இராணுவத் தலைவர்கள், பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முடியுமென்ற ஆக்கமுறையான சிந்தனையை அவர்களின் கீழ் போராடிக் கொண்டிருந்த இராணுவ உத்தியோகத்தருக்குள் ஊடுருவச் செய்தனர்.

பிற்காலத்தில் சீரான அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் சுமார் மூன்றரை ஆண்டளவான குறுகிய காலத்தினுள் பயங்கரவாதத்தை முற்றுமுழுதாகத் தோற்கடிப்பதற்காக எமது ஆற்றல்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையே காரணமானது.

நாம் தற்காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவையும் நீண்டகாலப் பிரச்சினைகள் அல்ல. ஆக்கமுறையுடன் கூடிய ஓர் அணுகுமுறையினூடாக எமக்கு இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடிக்கொள்ள முடியும். ஆயினும், அந்த வேலைத் திட்டத்தைத் துரிதப்படுத்திக் கொள்வதற்காக நாம் அனைவரும் செய்ய வேண்டிய வேலைப்பகுதி உள்ளது. தத்தமது பொறுப்பை உரியவாறு நிறைவேற்றுவதன் மூலம் நாம் அனைவரும் நாடு சார்பாக எமது உச்சகட்டப் பங்களிப்பை வழங்க முயலவேண்டும்.

கொவிட்- 19 தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கான ஒரே தீர்வு தடுப்பூசி ஏற்றுதல் என்பதை நாங்கள் நேர காலத்தில் புரிந்துகொண்டோம். அதற்கமைய இலக்கிடப்பட்ட சனத்தொகையின் 85 சதவீதத்துக்கும் மேலான எண்ணிக்கையினருக்கு 1ஆம், 2ஆம் அலகுத் தடுப்பூசிகளை ஏற்றி நோய் நிலைமையைக் கட்டுப்படுத்தி, வழமையான மக்கள் வாழ்வை மீண்டும் தொடங்க எம்மால் முடிந்தது. இவ்வேளை ஆகும் போது, மக்களுக்கு மூன்றாம் தடுப்பூசியையும் வழங்குவதற்குத் தேவையான தடுப்பூசி மருந்துகள் இலங்கைக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரப்பட்டுள்ளன.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான காரணங்களைத் தேடிக்கொண்டு பல வருடங்கள் பின்னோக்கிச் செல்வதைவிட, அதற்கான குறுகியகால மற்றும் நீண்டகாலத் தீர்வுகளைக் கண்டறிவதே காலோசிதமானதாகும். ஓர் அரசு என்ற வகையில் நாம் அதன்மீது கவனத்தைச் செலுத்தியுள்ளோம்.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது என்றால், நாம் கமத்தொழில், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய மூன்று பிரிவுகளைவும் முன்னேற்றவேண்டும். உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் அதேவேளை, ஏற்றுமதி வருமானத்தைக் கூட்டிக் கொள்ளக்கூடிய வழிகளின் மீது விசேட கவனம் செலுத்தவேண்டும். இது தொடர்பான எமது தேசிய கொள்கைகள் மிகவும் தெளிவானவையாக இருப்பினும், அவற்றைச் செயற்படுத்தும்போது இதைவிடச் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பு ஒவ்வொரு துறையிலும் இருத்தல் வேண்டும்.

எமது நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது முதலீடுகள் முக்கிய காரணியாக அமைந்திருக்கின்றன. முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு அரசு எப்பொழுதும் நடவடிக்கை எடுப்பதுடன், உள்நாட்டு முதலீடுகளைப் போல சர்வதேச முதலீடுகளும் அவசியமாகின்றன. குறிப்பாகப் பெருமெடுப்பிலான கருத்திட்டங்கள், நவீன தொழில்நுட்ப அறிவு தேவைப்படும் கைத்தொழில்கள், உலகச் சந்தைக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும் புதிய வியாபாரங்களுக்கு சர்வதேச முதலீடுகள் தேவைப்படுகின்றன. அதற்காக, அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிராகத் தவறான அபிப்பிராயங்களை மக்களிடம் கொண்டு செல்லும் தரப்பினர் பற்றி மக்கள் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

தொழில் முயற்சியை ஊக்குவிக்காது, தொழில் முயற்சியாளர்களுக்கு உள்ள தடைகளை அகற்றாது, எம்மால் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்த முடியாது. பல ஆபத்துகளின் மத்தியில் தன்னுடையதே என்று தொழிலொன்றை ஆரம்பித்து, பிறருக்கு தொழில்களையும் வருமானம் ஈட்டும் வாய்ப்பையும் அளிக்கின்ற தொழில் முயற்சியாளர்களை இதைவிட மதிப்புடனும், நட்புறவோடும் கவனிக்கும் பொறுப்பு எம்மைச் சார்ந்துள்ளது.


நாட்டினது அபிவிருத்தியில் உள்ள தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்பை நன்கு உணர்ந்துகொண்டு இருக்கின்ற சட்டரீதியான சட்டடத்துக்குட்பட்டு அவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் துரிதமாக வழங்க அரச உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தொழில்களைப் பதிவு செய்யும் போதும் முதலீடுகளுக்கான அங்கீகாரங்களை வழங்கும் போதும் ஏற்படும் பெரும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதனூடாக நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரச் செயற்பாட்டைச் செயற்படுத்த முடியும்.

மிகவும் பயனுறுதியான ஒரு குடிமகனை உருவாக்குவதற்காகப் பல முறையான கல்வித் திருத்தங்கள் இப்போது நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பாடசாலைக் கல்வியை முடித்துவிடும் ஒவ்வொரு பிள்ளையும், நாட்டின் பொருளாதாரச் செயற்பாட்டில் பங்களிக்கக்கூடிய தொழிலையோ அல்லது கைத்தொழிலையோ பயிலவேண்டும். தாம் தெரிந்துகொண்ட துறையில் தனது அறிவைக் கூட்டிக்கொள்வது போன்று, முடியுமானால் தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் முயற்சிக்கவேண்டும். அதனூடாக நாட்டின் பொருளாதாரச் செயற்பாட்டில் நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கின்றது.

விவசாயப் பண்ணையில், தொழிற்சாலையில், வேலைத்தளமொன்றில் வியர்வை சிந்தி வேலை செய்யும் மக்கள், நாட்டின் பொருளாதாரத்தில் நேரடிப் பங்களிப்பை வழங்குகின்றனர். அவர்கள் எல்லோரையும் நான் கௌரவிக்கின்றேன்.

நாட்டுக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் எமக்குப் பெரிய வளமாக இருக்கின்றார்கள். கடந்த காலத்தில் அவர்கள் நாட்டுக்காக முன்வந்து பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்து எமக்கு ஒத்துழைப்பு நல்கியதை நாம் மறக்கவில்லை. அவர்கள் தொடர்ந்தும் எமது பொருளாதாரதுக்காகத் தொடர்ந்து

**எனது எஞ்சிய பதவிக் காலத்தினுள் நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களெல்லாம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எந்தளவு தடைகள் வந்தாலும் எமது நாட்டின் பெரும்பான்மை மக்கள் எதிர்காலத்துக்கான பங்களிப்பை வழங்கினால், எம்மால் அந்நோக்கங்களை நிறைவேற்ற முடியும்**



வழங்கும் பலம் மிகவும் பாராட்டத்தக்கதாகும். வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்கள் எல்லோரையும் பிறந்த நாட்டில் முதலீடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அதன் மூலம், நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குவதற்காக மேலும் செயலாக்க முறையில் பங்களிக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கிறது. எம் முன்னிலையில் உள்ள சவால்களை வெற்றி கொண்டு, எமது வருங்காலக் குறிக்கோள்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதாயின், நாம் எல்லோரும் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது.

நம் எல்லோருக்கும் அதற்காகச் சில அர்ப்பணிப்புகளைச் செய்ய நேரிடலாம். அதற்குத் தேவையான எடுத்துக்காட்டுதலைத் தருவதற்கு நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் நான் தயாராக இருக்கின்றேன். தற்போதும் நான் அதனை உச்சக்கட்டத்தில் செய்து கொண்டிருக்கின்றேன். எல்லா அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரசியல்வாதிகள் ஆகிய அனைவரும் நாட்டுக்கு முன்மாதிரியாக எப்போதும் செயற்பட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நீங்கள் மக்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்வீர்களாயின், நாட்டின் பெரும்பாலான மக்களும் உங்களைப் பின்பற்றுவார்கள். தேசிய தலைமைத்துவத்துக்கு எதிரான சக்திகள் மிகச் சூட்சுமமான பல பொய்ப் பிரசாரங்களினூடாக மக்களைத் தவறான பாதையில் எடுத்துச் செல்ல முயல்கின்றன.

[illegible] கொள்ளுமாறு [illegible] கேட்டுக் கொள்கின்றேன். தரவுகளின் அடிப்படையில் விடயங்களை ஆராய்ந்துப் பார்த்து உண்மையை அறிந்து கொண்டு தீர்மானங்களை எடுப்பதாயின், ஒருவராலும் மக்களைத் தவறான பாதையில் கொண்டுசெல்ல முடியாது.

எதிர்காலச் சந்ததிக்காக வென்றெடுத்த சுதந்திரத்தை எப்பொழுதும் பாதுகாப்பேன் என்றும் எமது நாட்டின் ஒற்றையாட்சி, ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமையைப் பாதுகாப்பேன் என்றும் அரச தலைவர் என்ற வகையில் நான் உறுதியளித்துள்ளேன். நாங்கள் எப்பொழுதும் அந்த உறுதியுரையைப் பாதுகாப்போம்.

கலாசாரச சுதந்திரம் ஒவ்வோர் இனத்துக்கும் முக்கியமானது. ஆயிரம் வருடகால வரலாற்றைக் கொண்ட பாரம்பரிய சம்பிரதாயங்கள், விழுமியங்கள் மற்றும் எமது பண்புகளைப் பாதுகாத்தல் என்பவற்றை எமது அடிப்படைப் பொறுப்பாகக் கருதுகின்றோம். கடந்த காலத்தில் பல அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி அழிந்து கொண்டிருந்த தொல்பொருள் பெறுமதிமிக்க இடங்களைப் பாதுகாத்து அவற்றை மேம்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

எமது நாடு சட்ட ஆதிக்கத்தைப் பாதுகாக்கும், சர்வதேச சமவாயங்களை மதிக்கும் நடொன்றாகும். குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்குப் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சார்த்துவதற்கு ஏதேனுமொரு தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்ட போதும், எவ்விதத்திலும் மனித உரிமை மீறல்களுக்கு அரசு உடந்தையாக இருக்கவில்லை என்பதுடன், எதிர்காலத்திலும் அத்தகைய நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு இடமளிக்கவும் மாட்டாது.

எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் இந் நாட்டில் அடிப்படைவாதம் தலை தூக்க நாம் இடமளிக்க மாட்டோம். இந்த அரசாங்கம் மக்களுக்கு உறுதியளித்த அதே விதத்தில் தேசிய பாதுகாப்பை உறுதி செய்துள்ளது.

நாங்கள் முன்வைத்த சுபீட்சத்தின் நோக்கு எனும் கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவே மக்கள் தற்போதைய ஆட்சிக்கு ஆதரவு வழங்கினார்கள். நாங்கள் முன்வைத்த கொள்கைப் பிரகடனத்தில், பசுமைக் கைத்தொழில், புதுப்பிக்கத்தக்க சக்திப் பயன்பாட்டு மேம்பாடு, புதிய உலகத்துக்கு ஏற்ற கல்வித் திருத்தங்கள், தேசிய தொழில் முயற்சியாண்மையை ஊக்குவித்தல், ஏற்றுமதி பல்வகைத்தன்மை, மற்றும் பெறுமானத்தை அதிகரித்தல், பொருளாதாரத்தின் புதியதொரு பாய்ச்சலுக்காகத் தொழில்நுட்பப் பாவனை யைப் பரவலாக்கல் போன்ற நாம் அடையாளம் கண்டு கொண்ட முன் னுரிமைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

பயன்மிக்க பிரஜை, மகிழ்ச்சியுடன் வாழும் குடும்பம், ஒழுக்கமான குணநெறிகளைக் கொண்ட சமூகம் மற்றும் சுபீட்சத்தின் நோக்கு ஆகிய ஆரம்பகட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நாம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்.

மிகவும் கஸ்டமானதொரு சந்தர்ப்பத்தில் தான் எனக்கு நாட்டின் தலைமைத்துவம் அளிக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளினுள், எதிர்பாராத பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண நேரிட்டது. அவ்வனைத்துக் கஸ்டங்களுக்கும் மத்தியில் பல அபிவிருத்தித் திட்டங்கள் எமது அரசினால் மேற்கொள்ளப்பட்டன.

எனது எஞ்சிய பதவிக் காலத்தினுள் நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களெல்லாம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எந்தளவு தடைகள் வந்தாலும் எமது நாட்டின் பெரும்பான்மை மக்கள் எதிர்காலத்துக்கான பங்களிப்பை வழங்கினால், எம்மால் அந்நோக்கங்களை நிறைவேற்ற முடியும்.

சுதந்திரத்தின் உண்மையான அர்த்தத்தை எய்திய அபிமானமிக்க தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றுசேருமாறு அனைத்து நாட்டுப் பற்றுள்ள இலங்கையர்களுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்.


இவ்வாறு அவர் தனதுரையை முடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனுக்கே வரைபடம் தயாரித்த ஹெவிலியஸ்

மோகனா

ஜோஹன்னஸ் ஹெவிலியஸ் (JOHANNES HEVELIUS) சுமார் 410 ஆண்டுகளுக்கு முன்னர் போலந்தில் வாழ்ந்த ஒரு வானவியலாளர் மற்றும் வானவியலுக்கான கருவிகள் செய்தவர். சந்திரனின் முதல் அட்லஸை உருவாக்கித் தொகுத்த வானியலாளர். அது செலினோகிராஃபியா ( SELENOGRAPHIA) என்ற பெயரில் 1647-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன் மேற்பரப்பின் ஆரம்பகால விரிவான வரைபடங்களில் ஒன்றையும் அதன் பல அம்சங்களுக்கான பெயர்களையும் கொண்டுள்ளது. சந்திரனில் உள்ள மலைகளுக்கான அவரது சூட்டிய பெயர்களில் இன்னும் சில (எ.கா. ஆல்ப்ஸ்) இன்னும் பயன்பாட்டில் உள்ளன.



மேலும், அவருக்கு மரியாதை செய்யும் பொருட்டு, அவரின் நினைவாக சந்திரனில் உள்ள பள்ளத்துக்கு ஹெவிலியஸ் பள்ளம் (HEVELIUS CRATER) என்றும் பெயரிடப்பட்டது. ஒரு வானியலாளராக, ஜோஹன்னஸ் ஹெவிலியஸ் "சந்திர நிலப் பரப்பின் நிறுவனர்" என்ற நற்பெயரைப் பெற்றார். மேலும், பத்து புதிய விண்மீன் தொகுதிகளைக் கண்டுபிடித்து, அவைகளுக்கும் அவரே பெயர் சூட்டினார். அவற்றில் ஏழு விண்மீன் தொகுதிகளின் பெயர்கள் இன்றும்கூட வானியலாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

**பெயரும் இளமை வாழ்க்கையும்**

ஜோஹன்னஸ் ஹெவிலியஸின் தந்தை ஆபிரகாம் ஹோவெல்கே (1576-1649). அவரது தாயார்



கோர்டெலியா ஹெக்கர் (1576-1655). அவர்கள் ஜெர்மன் மொழி பேசும் லூதரன்கள். போஹேமியன் வம்சாவளியைச் சேர்ந்த பணக்கார பீர் பானம் காய்ச்சும் வணிகர்கள். ஆபிரகாம் ஓர் லாபகரமான மதுபான ஆலையை வைத்திருந்தார் மற்றும் அவர் பல வீடுகளின் உரிமையாளராகவும் இருந்தார். ஜோஹன்னஸ் ஆபிரகாமின் பணக்கார குடும்பத்தில், கோண்டெக்ஸில்,1611ம் ஆண்டு, ஜனவரி மாதம் 28ம் நாள் பிறந்தார். அவருக்கு மூன்று சகோதரர்கள் மற்றும் ஆறு சகோதரிகள் இருந்தனர்.

உயிர் பிழைத்த நான்கு சகோதரர்களில் ஜோஹன்னஸ் ஹெவிலியஸ் ஒருவர். டான்சிக் நகரம் போலந்தின் கட்டுப்பாட்டில் இருந்த போதிலும், அந்தக் குடும்பம் ஜெர்மன் மற்றும் செக் இனத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஜெர்மன் மொழி பேசுபவர்களாக இருந்தனர். அந்த பகுதியில் போலிஷ் மொழி பேசப்பட்டது. சிறுவனாக இருந்தபோது, ஹெவிலியஸ் கோண்டெக்ஸுக்கு அனுப்பப்பட்டார், அங்கு அவர் போலந்து மொழியைப் படித்தார். சிறுவயதில்கூட அவருக்கு ஜெர்மன் மற்றும் போலந்து மொழி பற்றிய அறிவும் இருந்தது.

**வானியல் மேல் காதல்**

ஜோஹன்னஸுக்கு ஏழு வயதாக இருந்தபோது, 1618ம் ஆண்டு டான்சிக்கில் உள்ள ஜிம்னாசியத்திற்கு அவரது தந்தை ஜோஹன்னஸை படிக்க அனுப்பினார். அங்கு ஆறு அவர் ஆண்டுகள் படித்தார். அங்கு போர் நடந்ததால், முப்பது வருடப் போரின் பாதிப்பு இருந்தது. ஆனால், டான்சிக்கைச் சுற்றியுள்ள பகுதிகள் பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை. இருப்பினும், 1624 ஆம் ஆண்டு ஏற்பட்ட பிரச்சனைகளால் ஜிம்னாசியம் தற்காலிகமாக மூடப்பட்டது மற்றும் ஜோஹன்னஸின் பெற்றோர் அவரை ப்ரோம்பெர்க் ஊருக்கு அருகில் உள்ள சிறிய கிராமமான கோண்டெக்ஸில் உள்ள பள்ளிக்கு அனுப்பினர். இது போலந்து மொழி பேசும் பகுதி மற்றும் அவர் போலந்து மொழியில் சரளமாக பேசுவார் என்ற எண்ணம் இருந்தது.

1627ம் ஆண்டு, ஜோஹன்னஸ் ஹெவிலியஸ் டான்சிக்கில் உள்ள ஜிம்னாசியத்திற்குத் திரும்பினார். அங்கு அவர் கணிதம் படிக்க விரும்பினார். அங்குள்ள கணிதத் தலைப்புகளால் மிகவும் ஈர்க்கப்பட்டார் ஜோஹன்னஸ். இவரது கணித ஆசிரியர் பெயர் பீட்டர் க்ரூகர். மேலும் ஜோஹன்னஸ் ஹெவிலியஸ் கணிதம் படிக்க உத்வேகம் அளித்தவர் கணித ஆசிரியர், பீட்டர் க்ரூகர்தான். மேலும், இவர் வானியலிலும் ஆர்வம் கொண்டிருந்தார். இந்த ஆர்வம் இளம் ஹெவிலியஸுக்கும் தொற்றிக் கொண்டது. ஜிம்னாசியத்தில் நியாயமான முறையில் கற்பிக்கப்படும் பாடத்திற்கும் அப்பால், வானவியல் தொடர்பான ஆய்வுகளை ஹெவிலியஸுக்கு எடுக்க விரும்பிய, க்ரூகர் அவருக்கு தனிப்பட்ட பாடம் எடுத்தார். அதில் அவர் அந்தக் காலத்தின் முழு அளவிலான வானியல் கற்றலை முழுமையாகக் கற்றுக்கொண்டார். க்ரூகர் ஹெவிலியஸுக்கு கோட்பாட்டு வானியல் கற்பித்தது மட்டுமல்லாமல், மரத்திலிருந்தும் உலோகத்திலிருந்தும் வானியல் கருவிகளை உருவாக்கவும் கற்றுக் கொடுத்தார்.

**வானியலாளர்கள் சந்திப்பு**

ஹெவிலியஸ் 1630-ம் ஆண்டு லைடன் பல்கலைக்கழகத்தில் நீதியியல் படிக்கச் சென்றார் பயணத்தின்போது அவர் ஒரு சூரிய கிரகணத்தை அவதானித்தார், அதை அவர் பின்னர் ராயல் சொசைட்டியின் தத்துவ பரிவர்த்தனைகளில் வெளியிட்டார். சட்டப் படிப்பைத் தவிர, 1631 இல் லண்டனுக்குச் செல்வதற்கு முன், அவர் கணிதம் மற்றும் அதன் மெக்கானிக்ஸ் மற்றும் ஒளியியலுக்கான பயன்பாடுகளை மேலும் கற்றுக் கொண்டார். 1632 முதல் 1643 வரை ஹெவிலியஸ், சுவிட்சர்லாந்து, லண்டன் மற்றும் பாரிஸ் ஆகிய இடங்களுக்குச் சென்றார், அங்கு அவர் பல்வேறு வானியலாளர்களான பியர் காசெண்டி(1592-1655), மரின் மெர்சென்னே மற்றும் அதானசியஸ் கிர்ச்சர் ஆகியோருடன் தொடர்பு கொண்டார். 1634 ஆம் ஆண்டில் ஹெவிலியஸ் அவர் தனது தனது சொந்த ஊரில் குடியேறினார். இந்தக் காலகட்டத்திலிருந்து க்ரூகருக்கு அவர் எழுதிய கடிதங்கள் எஞ்சியுள்ளன. இரண்டு வருடங்கள் அவர் தனது தந்தையின் மதுபான ஆலையில் பணிபுரிந்தார். அதே நேரத்தில் டான்சிக்கின் அரசியலமைப்பை பொது சேவையில் நுழையும் நோக்கத்துடன் படித்தார். அவரது குடும்பத்தின் மதுபானம் தயாரிக்கும் தொழிலில் பணிபுரியும் போது, ஹெவிலியஸ் தனது சட்டப் படிப்பை முடிக்க கோண்டெக்ஸ் திரும்பினார்.

**திருமணம்**

பின்னர் 1635ம் ஆண்டு, மார்ச் மாதம் 21ம் நாள், ஹெவிலியஸ் டான்சிக்கின் ஒரு பணக்கார குடும்பத்தில் பிறந்த அவரின் பக்கத்து வீட்டுக்காரரான கத்தரினா ரெபெஷ்கேவை மணந்தார். கத்தரினா அவரைவிட இரண்டு வயது குறைவானவர். அடுத்த ஆண்டு, ஹெவிலியஸ் பீர் காய்ச்சும் குழுவில் உறுப்பினரானார் அவர் அக்குழுவை 1643 முதல் வழிநடத்தினார். ஹெவிலியஸ் புகழ்பெற்ற "ஜோபென் பீர்" காய்ச்சினார். அந்த பீரின் பெயரிலேயே அங்குள்ள தெருவுக்கு அதன் பெயரை ஜோபெங்காஸ்/ ஜோபெஜ்ஸ்கா" என்று அழைத்தார். பின்னர் 1945 ஆம் ஆண்டுக்குப் பிறகு, செயின்ட் மேரி தேவாலயம் அமைந்துள்ள பிவ்னா தெருவுக்கு "பீர் ஸ்ட்ரீட்" என மறு பெயரிடப்பட்டது.

**வானியல் கண்காணிப்பகம் நிறுவுதல்**

ஹெவிலியஸ் ஜூன் 1, 1639 சூரிய கிரகணத்தைக் கண்டார்; இந்த ஆண்டு முதல் அவர் முறையான வானியல் அவதானிப்புகளைத் தொடங்கினார் மற்றும் அவரது குருவான க்ரூகரின் மரணத்தையும் சந்தித்தார். இது அவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக இருந்தது. 1639 ஆம் ஆண்டிலிருந்து வானியலில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கத் தொடங்கினார். 1649 இல் அவரது தந்தையின் மரணம், மதுபானம் தயாரிக்கும் ஆலையின் அன்றாட ஓட்டத்திற்கான அவரது நேரத்தை மேலும் கோரியது என்றாலும், அது குறுகிய காலத்திற்கு உலகின் முன்னணி வானியல் ஆய்வகமாக மாறியதை உருவாக்க நிதியை அவருக்கு வழங்கியது. அவரது வீட்டில் ஒரு வானியல் கண்காணிப்பு நிலையத்தைக் கட்டுவதற்காக தனது குடும்பச் செல்வத்தை நிறையவே செலவழித்தார். அவரது பணிக்கு போலந்து மன்னர் மூன்றாம் ஜான் சோபிஸ்கி, தாராளமான ஓய்வூதியம் மூலம் நிதியுதவி செய்தார்.

1670களின் முற்பகுதியில், ஹெவிலியஸ், ஜான் ஃப்ளாம்ஸ்டீட் (1646-1719) மற்றும் பின்னர் ராபர்ட் ஹூக் (1635-1703) ஆகியோருடன் ஒரு சர்ச்சையில் ஈர்க்கப்பட்டார். அவர் தொலைநோக்கி மற்றும் மைக்ரோமீட்டர்களைப் பயன்படுத்தி விண்மீன்களின் நிலைகளை துல்லியமாக தீர்மானிக்க முடியும் என வாதிட்டார். ராயல் சொசைட்டியால் நியமிக்கப்பட்ட இளம் எட்மண்ட் ஹாலி (1656-1742) க்டான்ஸ்கில் ஹெவிலியஸுக்குச் சென்றபோது 1679 இல் விவாதம் சமநிலைக்கு வந்தது. இங்கிலாந்தில் இருந்து எடுத்துச் சென்ற அதிநவீன மைக்ரோமெட்ரிக் தொலைநோக்கி மூலம் ஹெவிலியஸின் நிலைப்பாடு துல்லியமானது என்பதை விஞ்ஞானி ஹாலி ராயல் சொசைட்டிக்கு உறுதிப்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதிரேசன் காத்தவராயன்

# பகுத்தறிவை எங்கை வாங்கலாம்?

வெள்ளிக்கிழமை பின்னேரம் அதிலை கோயிலடிப்பக்கம் போனன். வழக்கம் மாதிரி அதிலை இதிலையெண்டு சின்னச் சின்ன குழுவாய் இருந்து கதைச்சுக்கொண்டிருந்தினம். எங்கடை கட்சியள் மாதிரித்தான் ஒருநாளும் சேந்திருக்கிறதில்லை. திருவிழாக் கூட்டமெண்டா மட்டும் ஒண்டாகுவினம்... கூட்டம் முடியிறதுக் கிடையிலையே புதுக் குழுக்கள் முளைச்சிடும்... எங்கை பாத்தாலும் இதுதான் நிலமையாப் போச்சுது... எண்டு யோசிச்சுக் கொண்டு என்ரை யாக்களைத் தேடினன். வுழக்கமாய் இருக்கிற மரத்தடியிலை வேறை யாக்கள்.

"என்ன கதிரேசண்ணை? என்னப்பா தேடுறாய்? இஞை இருக்கிறம்" எண்டு சுப்பண்ணை கூப்பிட்ட திசையிலை பாத்தன் வல்லியம்மான் காரசாரமா என்னவோ சொல்லிக்கொண்டிருக்க சுப்பண்ணையோடை தம்பர் முருகேசர் கனகராக்கள் வாயைப் பிளந்து கேட்டுக்கொண்டிருந்தினம். நானும் போய் இருந்துகொண்டன். "என்ன வல்லியம்மான் நான் வர நிப்பாட்டிப் போட்டியள்?" எண்டன். வல்லியம்மான் ஒரு சிரிப்போடை எல்லாரையும் பாத்தார்.

"உங்கை பாருங்கோவன் கதிரேசண்ணை... வல்லியம்மானின்ரை காலையும் கையையும்" எண்டார் கனகர். காயங்கள்... அதுகும் உரஞ்சல் காயங்கள்... "என்னம்மான் ஓவர்லோட் ஏத்திப்போட்டியளோ?" எண்டன். வல்லியம்மான் சரிச்சார் ஒரு சிரிப்பு.... "ஆங்... இந்த வல்லியோ... மாரி மழை மப்பெண்டாலும் மந்தி கொப்பிழக்கப் பாயுமோ கதிரேசு... உவங்கள் (............)" எண்டு தணிக்கைச் சொல்லோடை தொடங்கினார்

"உவங்கள் நாசமறுந்தவங்கள் றோட்டுப் போடுறாங்களல்லே... கல்லைப் பறிக்கத் தெரியாமலுக்கு நடு வழியிலை பறிச்சிருந்தாங்கள்... போகேக்கை இல்லை... வரேக்கை கிடக்கெண்டு ஆர் கண்டது?" எண்டு கோவத்தோடை ரண்டொரு செந்தமிழையும் சொல்லி நிப்பாட்டினார். "உண்மைதானப்பா நானும் அண்டைக்கு உப்பிடித்தான் றோட்டெண்டு வந்தாக் கிடங்கு... வெட்டினவங்கள் ஒரு அடையாளங் கூட இல்லை... விழுந்த பிறகுதான் தெரியும்... நல்லவேளை ஒண்டும் அடிபடயில்லை..." தப்பிவிட்டன் எண்டார் கனகர்.

"நீங்களெண்டால் இருட்டிலைதான் விழுந்தனிங்கள்... பகலிலையே அடி வாங்கினனான்..." எண்டு எல்லாரையும் ஒருக்காப் பாத்தார் முருகேசர். "என்னண்ணை.... அடி வாங்கினனீங்களோ?" எண்டுகொண்டு தம்பர் வந்து குந்தினார். "ம்..ம்.ம். றோட்டு வேலைக்கெண்டு கல்லுப் பறிக்கிற டிப்பரை சடாரெண்டு திருப்பினாங்கள்.. பின்னாலை பிள்ளையை ஏத்திக்கொண்டு வந்த பெடிச்சியொன்டு என்னை இடிச்சுத்தான் நிண்டாள்.. நான் விழுந்துபோனன்..." எண்டு சிரிச்சார் முருகேசர்.

"உதுதான் பிரச்சனை... சனம் அவசரத்திலை திரியிற நேரங்களிலைதான் உவங்களும் கடுமையாய் வேலை செய்வங்கள்.." எண்டு நான் தொடங்க "உண்மைதான்ரா கதிரேசு.... அதுகும் நாலஞ்சு மணிக்குப் பிறகு பின்நேரத்திலைதான் மண் பறிக்கிறது கல்லுப் பறிக்கிறது தண்ணியடிக்கிறது எண்டு பெரிய கூத்துகள் நடக்குது..." எண்டு புறுபுறுத்தார் வல்லியம்மான். "சனம் பிளங்காத நேரங்களிலை வேலை செய்தால் என்னவாம்?" எண்டார் தம்பர்.

"அதோடை அவங்களின்ரை வாகனங்களிலை பலதுக்கு சிக்னலுகளும் இல்லை...டக்கெண்டு நிப்பாண்டுறாங்கள்...சடாரெண்டு திருப்புறாங்கள்... றோட்டுக்குக் குறுக்கை வைச்சு ட்ரைவிங் பழகுகிற மாதிரி தடுமாறுகிறாங்கள்..." எண்டு சுப்பண்ணை சொன்னார். "உதுதான்ரா சுப்பு பிரச்சனை... அந்தரப்பட்டு ஒரு ஒழுங்கு முறையில்லாமல் பண்ணிறதாலைதான் அடிபடவும் விழவும் வேண்டிக் கிடக்குது..." எண்டார் முருகேசர்.

"உண்மை தானப்பா... சனப்புழக்கம் குறைஞ்ச நேரம் வேலையளைச் செய்யலாம்... அல்லது இரவிலை செய்யலாமல்லே" எண்டு நான் தொடங்க "பகலிலை செய்யிறதுக்கே உவங்கள் படுகிறபாடு... அதுக்குள்ளை இரவிலையோ?" எண்டார் கனகர். "கனகு பகலிலையோ இரவிலையோ எண்டதில்லைப் பிரச்சினை.... பகுத்தறிவோடை செய்ய வேணுமெண்டதுதான் முக்கியம்... பூசை தொடங்குது வாறன்" எண்டபடி பூசைக்குப் போட்டன்.

---

## சந்திரனுக்கே ...

அவர் தனது 76வது பிறந்தநாளான ஜனவரி 28, 1687 அன்று க்டான்ஸ்கில் இறந்தார்.

ஹெவிலியஸின் விண்மீன் தொகுதிகளும், விண்மீன்கள் பட்டியலும்

வானில் தெரியும் கொஞ்சம் மங்கலான ஏழாவது பிரகாசம் அளவுள்ள விண்மீன்களைக் காணக் கூடிய அளவிற்கு ஹெவிலியஸுக்கு விதிவிலக்கான கூர்மையான பார்வை இருந்ததாகக் கூறப் படுகிறது. டைகோ ப்ராஹே (TYCHO BRAHE) வான்வெளி பொருள்களை துல்லியமாக மதிப்பிட்டவர். அவரின் வழிகாட்டலைப் பின்பற்றி, ஹெவிலியஸ் வானவியலின் மிகப் பெரிய அளவீட்டுக் கருவிகளையும்கூட தனியாகவே உருவாக்கினார். மேலும், டைகோ ப்ராஹேவை விட துல்லியமாக, ஹெவிலியஸ் விண்மீன்களைப் பார்த்து அறிந்தார். அவரது வழக்கமான அடிப்படையில் 1 நிமிட வளைவு வரை அளவிடப்பட்ட அவரது நேரிடையான கண்பார்வை மூலம் விண்மீன்களின் நிலைகளின் பிரகாசத்தை மற்றும் துல்லியத்தை அவரால் மேம்படுத்த முடிந்தது என்பதுதான் மிகவும் சிறப்பான அம்சமாகும்.

இரண்டாவது மனைவி எலிசபெத்தாவின் உதவி

1663 இல், ஹெவிலியஸின் மனைவி கத்தரினா இறந்தார். எனவே, ஹெவிலியஸ் அடுத்த ஆண்டு 1664ம் ஆண்டு அவர் முப்பத்தாறு வயதிற்குள் கேத்தரினாவின் தங்கையான கேத்தரீனா எலிசபெத்தா கூப்மனை மணந்தார். அவர்களின் மூன்று மகள்களும் நீண்டகாலம் வாழ்ந்தனர். எலிசபெத்தா ஒரு பணக்கார வணிகரின் மகளாக இருந்தாலும், வழக்கத்திற்கு மாறாக நன்கு படித்த அவர், அவரது கணவர் ஹெவிலியஸின் கண்காணிப்பு இயக்கத்தில் கணிசமான பங்கை செலுத்தினார். அவருக்கு மிகவும் உதவியாக அவரது உதவியாளராக இருந்து கண்காணிப்ப கத்தை நன்கு கவனித்துக் கொண்டார். எலிசபெத்தா தனது கணவரின் கண்காணிப்பகத்தில் மிகவும் உதவியாகவே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர், அங்கு ஹெவிலியஸின் கண்காணிப்பகத்திற்கு வருகை தரும் பல வானியலாளர்களுக்கு தொகுப்பாளினியாகவும் செயல்பட்டார். ஹாலி ஒருவேளை மிகவும் பிரபலமானவர், மேலும், அவரது கணவரின் மறைவிற்குப் பிறகு எலிசபெத்தா வெளியிடப்படாத எழுத்துக்களைத் திருத்தி வெளியிட்டார்.

அவரது இரண்டாவது மனைவி எலிசபெத்தாவின் உதவியுடன்தான் இதுவரை யாருமே தயாரித்திராத துல்லியமான விண்மீன்களின் பட்டியலை ஹெவிலியஸ் தொகுத்தார். அந்த காலத்திலேயே சுமார் 380 ஆண்டுகளுக்கு முன்னரே, வெறும் கண்ணால் பார்த்து, விண்மீன்களை கண்டறிந்து 1650, விண்மீன்களைப் பட்டியலிட்டு உள்ளார் என்றால் வியப்பாகத் தானே இருக்கிறது.

தீயின் கங்குகளில் கண்காணிப்பு அறையும், ஹெவிலியஸின் எழுத்துப் பிரதிகளும்

1679 ஆம் ஆண்டில் செப்டம்பர் 26 அன்று, ஹெவிலியஸ் வீடும் கண்காணிப்பு அறையும் தீயில் எரிந்து அழிந்து போனது. அவரது உழைப்பின் உன்னதமான வானியல் அட்லஸ், அவரது வாழ்க்கையின் உழைப்பும் நெருப்புக்கு இரையானது. இறுதியாக அவரின் கையெழுத்துப் பிரதிகள் எப்படியோ தப்பித்துக் கொண்டன. எனவே, 1690-இல் ஹெவிலியஸ் மனைவி எலிசபெத்தாவால், அவரது எழுத்துக்கள் திருத்தப்பட்டு மீண்டும் வெளியிடப்பட்டது.

ஹெவிலியஸின் வாழ்க்கை பெரும் சோகத்துடனும் பெரும் அதிர்ஷ்டத்துடனும் வாசிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்நாட்டு போரை நோக்கி நகரும் மியான்மர்!

மு.இ.நாதன்

ஓராண்டு நிறைவு என்பது பொதுவாகக் கொண்டாட்டமாக இருக்கும், அல்லது புகழஞ்சலியாக இருக்கும். ஆனால், இப்போது மியான்மர் என்றழைக்கப்படும் முன்னாளைய பர்மாவில் மாசி முதல் நாள் (பிப்ரவரி 1) அப்படி இல்லை. அங்கு மீண்டும் படையினரின் ஆட்சி ஏற்பட்டு ஓராண்டு நிறைவுக்கு வந்திருக்கிறது. மக்கள் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள்.

ஆளும் படை அதிகாரிகள் தமது பிடியை இறுக்கிக்கொண்டேபோகிறார்கள். போராடும் மக்களை வன்மையாக அடக்குகிறார்கள். ஒரு தலைபட்சமான விசாரணைகளின் முடிவில் அரசியல்வாதிகள் பலருக்குச் சிறைவாசம் கிட்டியிருக்கிறது. மறுபுறம், விலைவாசி பன்மடங்கு உயருகிறது. நாணயத்தின் மதிப்பு தலைகுப்புற விழுகிறது. பல மேலை நாடுகள் தண்டனைத் தடைகள் விதிக்கின்றன. பல அந்நிய முதலீடுகள் திரும்பப் பெறப்படுகின்றன. அனால் இவையெதுவும் படைத்துறை ஆட்சியாளர்களை அதைரியப்படுத்தவில்லை.

இவை அனைத்துக்கும் மத்தியிலும், படைத்துறை ஆட்சியால் புறக்கணிக்க முடியாத ஒரு சக்தி வலுப்பெற்றுவருகிறது. அரசின் எதிர்ப்பாளர்கள் ஒன்றிணைந்து தேசிய ஐக்கிய முன்னணி (NUF) ஒன்றைக் கட்டிவருகிறார்கள். இது தலைமறைவு ஆட்சியாளர்களாகச் செயல்படத் தொடங்கியிருக்கிறது. தேசம் ஓர் உள்நாட்டுப் போரை நோக்கிச் செல்கிறது.

### படையினர் - தேர்தல்- போராட்டம்

இந்தப் பதற்றம் ஓராண்டுக்கு முன்பு தொடங்கியது. 2021, மாசி 1. தேர்தலில் வெற்றி பெற்ற ஆளும் தேசிய ஜனநாயகக் கட்சி (NLD) அன்றைய தினம் பதவியேற்றிருக்க வேண்டும். அது நடக்கவில்லை. அந்த விழாவிற்குச் சில மணி நேரங்களே இருந்தபோது படை அதிகாரிகள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர். என்.எல்.டி-இன் தலைவர் ஆங் சான் சூச்சியும் கட்சி முன்னணியினரும் சிறை வைக்கப்பட்டார்கள். அன்று முதல் கடந்த ஓராண்டாக மக்கள் தெருவில் இறங்கிப் போராடிவருகிறார்கள். கடந்த நத்தாரின்போது மட்டும் 35 நிராயுதபாணிப் போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டார்கள். இதுவரை 1200க்கும் மேற்பட்ட மக்கள் அரசப் படைகளால் உயிர் துறந்திருக்கிறார்கள்.

படையினரின் கரங்கள் சொந்த நாட்டு மக்களின் குருதியில் நனைந்திருக்கிறது. சில எல்லைப்புற மக்கள் தாய்லாந்திற்கும் இந்தியாவிற்கும் வங்கதேசத்திற்கும் அகதிகளாக வெளியேறுகின்றனர்.

படையினருக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் நீர்த்துப்போகுமென்றுதான் தளபதிகள் தொடக்கத்தில் கருதினார்கள். அதற்குப் பல காரணங்கள். 1962இல் படையினர் முதல் முறையாக ஆட்சியைக் கைப்பற்றியபோதும் ஆட்சிக்கு எதிரான பெரிய போராட்டம் 1988இல்தான் நடந்தது. அப்போது உயர்ந்து வந்த நட்சத்திரம்தான் சூச்சி. போராட்டம் ஒடுக்கப்பட்டது. சூச்சி சிறை வைக்கப்பட்டார். அடுத்து 2007இல் புத்த பிக்குகள் படையினருக்கு எதிராகத் திரண்டனர். அந்த எழுச்சியும் ஒடுக்கப்பட்டது. 2011இல் ஜனநாயகக் கீற்றுகள் தோன்றலாயின. 2012இல் என்.எல்.டி எதிர்க்கட்சி ஆகியது; 2015இல் ஆளுங்கட்சியாக உயர்ந்தது. எனினும் படைத்துறை ஆட்சியிலும் பங்கு வகித்தது.

சூச்சி படையினருக்கு இணக்கமாகவே நடந்துகொண்டார். இதனால் உலக நாடுகளின் நன்மதிப்பை இழந்தார். ஆனால், பெரும்பான்மை பர்மா இனத்தவர் அவரைக் கொண்டாடவே செய்தனர். 2020இல் நடந்த தேர்தலில் என்.எல்.டி. இரண்டாவது முறையாக அமோக வெற்றி பெற்றது.

சூச்சிக்கு வெகுமக்கள் அளித்துவரும் ஆதரவு படையினரை அச்சுறுத்தியது. சூச்சி சர்வதேச ஆதரவை இழந்துவிட்டார் என்று படை அதிகாரிகள் கணக்கிட்டனர். மேலும், படைத்துறை நுகத்தடிக்கு மியான்மர் மக்கள் பழக்கமானவர்கள்தானே என்றும் அது கருதியது. ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் அதன் கணக்கு பிசகிவிட்டது. கடந்த பத்தாண்டுகளாக வீசும் அரசியல் - பொருளாதார சுதந்திரக் காற்றை, அது எத்துணை குறைவாக இருந்தாலும், இழப்பதற்கு மக்கள் சித்தமாக இல்லை. அவர்கள் போராடினார்கள். உயிரிழந்தார்கள். பதினாயிரக்கணக்கானோர் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மியான்மரில் நூற்றுக்கும் மேற் பட்ட சிறுபான்மை தேசிய இனத்தவர் உள்ளனர். இதில் ஷான், கரீன், ரக்கைன், சின், கச்சின் இனங்கள் முக்கியமானவை. இவர்கள் எல்லைப்புற மாநிலங்களில் வசிக்கின்றனர். இந்த இனங்களில் தேர்தல் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்ட பல அரசியல் கட்சிகளும் பிரிவினை கோரும் பல ஆயுதக் குழுக்களும் உள்ளன.**

சூச்சியின் மீது ஏராளமான குற்றச்சாடுட்களை அடுக்கியிருக்கிறது படைத்துறை. யாருடைய பார்வையும் தீண்ட முடியாத நீதிமன்ற விசாரணை அவருக்கு நான்கு ஆண்டு சிறைத் தண்டனையை விதித்திருக்கிறது. இன்னும் எல்லாக் குற்றச்சாட்டுகளும் விசாரித்து முடிக்கப்படவில்லை! கைதான என்.எல்.டி. கட்சியினர் பலருக்கும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுவருகிறது. மக்களின் அகிம்சைப் போராட்டங்களால் படையினர் ஆட்சியின் மனசாட்சியின் முன்னெடுக்கக்கூடத் தீண்ட முடியவில்லை. ஆகவே, முதல் முறையாக பெரும்பான்மை பார்மா இன மக்கள் சிறுபான்மையின மக்களோடு கை கோர்க்கின்றனர்.

### சிறுபான்மை அரசியல்

இந்த இடத்தில் மியான்மரின் இன வரைவியலைச் சற்றே நெருங்கிப் பார்க்கலாம். மியான்மர் பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு. 'பாமா' எனப்படும் பெரும்பான்மை பர்மிய சமூகத்தினர், மூன்றில் இரண்டு பங்கினர், புத்த மதத்தினர், ஐராவதி நதி பாயும் வளமான மையப் பகுதிகளிலும் தென் பகுதிகளிலும் வசிக்கின்றனர். இவர்கள் மூன்றில் இரு பங்கினர். பல நாடுகளைப்போல இங்கும் பெரும்பான்மை சமூகத்திற்கு மேட்டிமை மனோபாவம் இருக்கிறது.

மியான்மரில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுபான்மை தேசிய இனத்தவர் உள்ளனர். இதில் ஷான், கரீன், ரக்கைன், சின், கச்சின் இனங்கள் முக்கியமானவை. இவர்கள் எல்லைப்புற மாநிலங்களில் வசிக்கின்றனர். இந்த இனங்களில் தேர்தல் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்ட பல அரசியல் கட்சிகளும் பிரிவினை கோரும் பல ஆயுதக் குழுக்களும் உள்ளன. இந்த ஆயுதக் குழுக்கள் பல ஆண்டு காலமாக மியான்மர் படையினரோடு போராடிவருகின்றன.

கடந்த ஆட்சியின்போது சிறுபான்மை இனத்தவரின் கோரிக்கைகளுக்கு சூச்சி செவி சாய்க்கவில்லை. அவமதிப்புக்கும் புறக்கணிப்புக்கும் உள்ளாகிவரும் ரொகிங்கியா எனும் முஸ்லிம் பிரிவினரின் அவதி தொடர்ந்தது. அவர்களை நாட்டின் குடிமக்களாகக்கூட அரசு கருதவில்லை. 1982இல் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டம் எழுத்துபூர்வமாகவே ரொகிங்கியாக்களை நாடற்றவர்கள் ஆக்கியது. 2017இல் அவர்களுக்கு எதிராகப் படுகொலைகளும் கலவரங்களும் வன்புணர்வுகளும் நடந்தன. ஏழு லட்சம் ரொகிங்கியாக்கள் வங்கதேசத்திற்கு அகதிகளாக வந்து சேர்ந்தனர். ஐநாவின் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் மியான்மார் அரசின் மீதான இனப்படுகொலை வழக்கை விசாரித்தது.

வழக்கில் படையினருக்கு ஆதரவாகச் சாட்சி அளித்தவர்- சூச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாடு கலந்த பீட்ரூட் வறை...!

சமையல்
சமையல்



கடந்த வாரம் மரவள்ளிக் கிழங்குக் கஞ்சியைப் பற்றிப் பார்த்திருந்தோம். இந்த வாரம் அதேபோன்றதொரு கிழங்கு வகையான பீட்ரூட்டில் வறை வறுப்பது எவ்வாறு என்று பார்ப்போம்.

சிவப்பு நிறத்தில் இருக்கின்ற பீட்ரூட்டில் ஏராளம் ஊட்டங்கள் நிறைந்திருக்கின்றன என்கிறார்கள். வயிற்றுக் குளிர்மைக்கும், குடற்புண், உடற்சூடு ஆகியவற்றுக்கும் தீர்வாகக்கூடப் பீட்ரூட்டைப் பரிந்துரைப்பவர்கள் பலர். அத்தகைய பீட்ரூட்டை நம்மவர்கள் கறியாகச் சமைத்துண்பதே அதிகம். ஆனாலும் ஆங்காங்கே அதை வறையாக்கி உண்பவர்களும் இருக்கிறார்கள்.

பீட்ரூட் வறையின் ருசியே தனி. அத்தோடு கடலுணவுப் பிரியர்கள் பீட்ரூட்டைத் தனியாக வறையாக்காமல் அதோடு கருவாட்டைச் சேர்த்து வறையாக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். கட்டா, பாரை, சீலா என இன்னுமிருக்கின்ற (முட்கள் அற்ற) பல கருவாட்டுத் துண்டங்களையும் இதனுடன் கலந்து வறையாக்குகிறார்கள். அப்போது பீட்ரூட் வறையின் ருசியோ அதிகப்பட்டிருப்பதைக் காணலாம்.

**தேவையான பொருள்கள்**

பீட்ரூட் - 500 கிராம், கருவாடு 100 கிராம், தேங்காய்த் துருவல் - ஒரு கப், சின்னவெங்காயம் 50 கிராம், பச்சை மிளகாய்கள் 5, செத்தல் மிளகாய்கள் 3, கறிவேப்பிலை 2 கெட்டு, உப்பு, வெந்தயம், சீரகம், மரக்கறி எண்ணெய் ஆகியன தேவைக்கேற்ப.

**எப்படி வறுத்தெடுப்பது...?**

பீட்ரூட்டின் தோலை நீக்கிச் சுத்தப்படுத்திக்கொள் ளுங்கள். சுத்தப்படுத்திய பீட்ரூட்டைக் கரட் சீவுகின்ற தட்டில் உரசித் துருவலாக்கிக் கொள்ளுங்கள். கருவாட்டைத் துண்டங்களாக்கி நீரில் ஊறவிடுங்கள். சட்டி ஒன்றை அடுப்பில் வைத்து அதில் மரக்கறி எண்ணையை ஊற்றி வெந்தயம், சீரகம், நறுக்கிய வெங்காயம், கறிவேப்பிலை, நறுக்கிய பச்சை மிளகாய் என்பவற்றைப் போட்டு வதக்குங்கள். வதங்கியதும் பீட்ரூட் துருவலைக் கொட்டுங்கள். கையோடு நீரில் ஊறவைத்திருக்கின்ற கருவாட்டுத் துண்டங்களை நீரை நன்கு வடித்தெடுத்துச் சிறிய துண்டுகளாக்கிச் சேருங்கள். பீட்ரூட் துருவல் அவிந்துவர உப்புச் சேருங்கள். அடுத்துத் தேங்காய்த் துருவலையும் கறிவேப்பிலைகளையும் தூவுங்கள். சிறிது நேரம் மூடிவைத்துச் சூடாகியதும் நன்கு கிளறுங்கள். இப்போது இறக்கிப் பரிமாறுங்கள்.

## உள்நாட்டு போரை . . .

ஒரு நட்சத்திரம் தரையில் உதிர்ந்து விழுந்ததை உலகம் நம்பமுடியாமல் பார்த்தது. சூச்சி சர்வதேச நம்பிக்கையை இழந்திருக்கலாம். ஆனால் உள்நாட்டில் பெரும்பான்மை பாமா இனத்தவர் அவருக்கு ஆதரவு நல்கினர். 2020இல் என்.எல்.டி. பெற்ற தேர்தல் வெற்றி சொல்வது அதைத்தான். ஆனால், இந்த மனப்பான்மையில் இப்போது மாற்றம் வந்திருக்கிறது. கச்சின், கரீன் இன மக்களின் ஆயுதக் குழுக்களும் ஜனநாயக அமைப்புகளும் தனித்தனியாகப் போராடிவந்தன. ரொகிங்கியாக்களுக்கு ஆதராவாக ரக்கைன் ஆயுதக் குழுக்கள் போராடிவந்தன.

இப்போது படைத்துறை ஆட்சி மீண்டும் வந்ததும் மக்களின் அகிம்சைப் போராட்டங்கள் நிர்தாட்சண்யமாக ஒடுக்கப்பட்டன. நான்கு லட்சம் அரசு ஊழியர்களின் போராட்டமும் அடக்கப்பட்டது. இது பெரும்பான்மை மக்களை மாற்றுவழிகளை நோக்கிச் சிந்திக்கவைக்கிறது. தலைமறைவாகிய ஆயிரக்கணக்கான என்.எல்.டி. கட்சியினரும் ஒரு புதிய கூட்டணியின் அவசியத்தை வலியுறுத்துகின்றனர். என்.எல்.டி.யும், குடிமைச் சமூகமும், சிறுபான்மை இனக் குழுக்களும், கச்சின் - கரீன் ஆயுதக் குழுக்களும் இணைந்து உருவாக்கியதுதான் தேசிய ஐக்கிய முன்னணி (NUF).

இது ஒரு தலைமறைவு ஆட்சிக் கட்டமைப்பை நிறுவியிருக்கிறது. இப்போதும் ரொகிங்கியாக்களின் மீதான தீண்டாமை முழுதுமாக அகலவில்லை. அவர்களால் இந்தக் குழுவில் இணைய முடியவில்லை. ஆனால் ரொகிங்கியாக்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்பதையும் அதற்காகச் சட்டம் திருத்தப்படவேண்டும் என்பதையும் என்.யு.எப். ஏற்றுக்கொள்கிறது. ரக்கைன் ஆயுதக் குழுக்களும் என்.யு.எப்-ஐ ஆதரிக்கின்றன.

இப்போதும் மியான்மர் பார்வையாளர்களில் பலர் சூச்சியின் என்.எல்.டி. வழியாகத்தான் மாற்றுப் பாதை திறக்கும் என்று நம்புகின்றனர். ஆனால் படையினரோடு அவர் இணக்கமாக நடந்துகொண்டது பயனளிக்கவில்லை என்பதை மியான்மர் சமூகம் உணர்ந்திருக்கிறது. அவர் ரொகிங்கியாக்களின் மீது கருணையின்றி நடந்துகொண்டது சர்வதேசத் தளத்தில் அவரது மதிப்பைச் சரித்துவிட்டது. ஆகவே, சூச்சி இனி மியான்மர் அரசியலின் மையத்தில் இருக்கமாட்டார் என்கிறார்கள். வருங்காலத்தில் என்.யு.எப். செல்வாக்கு அதிகரிக்கும், ஓர் உள்நாட்டு போர் தவிர்க்க முடியாமல் ஆகும், உலக நாடுகள் என்.யு.எப். அமைப்பை அங்கீகரிக்கத் தொடங்கும்... இப்படியான கருத்துகள் வலுப்பெற்றுவருகின்றன.

**இந்தியாவின் நிலைப்பாடு**

மியான்மரைக் கடுமையாக விமர்சிக்கும் மேலை நாடுகளின் முகாமிலிருந்து இந்தியா தள்ளி நிற்கிறது. மியான்மரைக் குறித்து கவலை தெரிவிப்பதோடு நின்றுகொள்கிறது. காரணம் மியான்மர் நமது அண்டை நாடு. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான எல்லை வெகு நீளமானது (1610 கிமீ). இந்த எல்லைப் பகுதியில் வேலிகள் இல்லை. சுற்றுச் சுவர்கள் இல்லை. இந்த எல்லையோரம் அமைந்திருப்பவை மிசோரம், மணிப்பூர், நாகாலாந்து, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய வடகிழக்கு மாநிலங்கள். இவற்றிலும் குறிப்பாக மிசோரம், மணிப்பூர் மக்களும் மியான்மரின் சின் இன மக்களும் ஒரு கொடியில் கிளைத்தவர்கள். திபெத்-பர்மீய வம்சாவளியினர். பிரிட்டிஷ் இந்தியாவில் இணைந்திருந்த பர்மா 1937இல் தனிநாடாகும் வரை ஒரே மாநிலமாக வாழ்ந்தவர்கள்.

இப்போதும் மண உறவுகளாலும் வணிக உறவுகளாலும் இவர்கள் பிணைக்கப்பட்டவர்கள். எல்லையின் இரு புறங்களிலும் போக்கும் வரவுமாக இருந்தவர்கள். ராணுவ அடக்குமுறை யைத் தொடர்ந்து மியான்மரின் எல்லைப்புற மாநிலங்களில் வசிக்கும் சிறுபான்மையினர் இந்தியாவிற்குப் புகலிடம் தேடிவருகின்றனர். நமது ஒன்றிய அரசு அவர்களை ஏற்க மறுத்தது. ஆனால் மிசோரம், மணிப்பூர் மாநில அரசுகளால் அகதிகளைத் திருப்பி அனுப்ப முடியவில்லை. அகதிகள் அனுமதிக்கப்பட்டனர். இதுவரை 3000-க்கும் மேற்பட்ட அகதிகள் இந்தியாவிற்குள் வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மியான்மருக்கு அண்டை நாடுகளின் ஆதரவு இருக்கிறது. 2021, மார்ச் 27 அன்று நடந்த படைத்துறை தின அணிவகுப்பு ஓர் உதாரணம். இதில் இந்தியப் பிரதிநிதி கலந்து கொண்டார். வேறு சில நாடுகளும் பங்கேற்றன. அவை: பாகிஸ்தான், வியட்நாம், ரஷ்யா, சீனா, வங்காளதேசம், லாவோஸ், தாய்லாந்து. இவற்றுள் கடைசி நான்கு நாடுகளும் இந்தியாவும், மியான்மரின் எல்லையைப் பகிர்ந்து கொள்பவை. அணிவகுப்பு நடந்த அதே நாளில் மியான்மரின் பல்வேறு இடங்களில் ஏழு குழந்தைகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நிராயுதபாணிகள் கொல்லப்பட்டனர். இது இந்திய அரசின் மீதும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் மீதும் விமர்சனங்கள் எழக் காரணமானது.

தொடர்ந்து பங்குனி 31ஆம் தேதி கூடிய ஐநா அரங்கில் மியான்மர் படைத்துறை அரசை இந்தியா கண்டித்தது. உயிரிழந்த பொதுமக்களுக்கு இரங்கல் தெரிவித்தது. அரசியல்வாதிகளை விடுவிக்கக் கோரியது.

கடந்த சித்திரையிலல் ஆசியான் மாநாடு நடந்தது. அதில் மியான்மர் அரசு வன்முறையைக் கைவிட வேண்டும் என்றும் எதிர்க் கட்சிகளோடு உரையாட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இரு தரப்புகளுக்கும் இடையில் ஆசியானைத் தூதுவராக அனுமதிக்கவேண்டும் என்றும் ஒரு கோரிக்கை வைத்தது ஆசியான். படையினர் செவி சாய்க்கவில்லை.

இது இவ்வாறிருக்க மியான்மருக்கு சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக படைத் தளவாடங்களை வழங்கும் நாடாக இந்தியா இருக்கிறது. 2021, ஜூன் 19 அன்று மியான்மரின் படைத்துறை அரசுக்கு ஆயுதங்கள் வழங்கலாகாது என்று ஒரு தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு அவையில் மேலை நாடுகள் கொணர்ந்தன. 36 நாடுகள் வாக்கெடுப்பைப் புறக்கணித்தன. அதில் இந்தியாவும் இருந்தது.

இந்தச் சூழலில் கிறிஸ்துமஸ் சமயத்தில் இந்திய அயலுறவுச் செயலர் ஹர்ஷ் வர்தன் மியான்மருக்குச் சென்று வந்தார். இந்தியா, மியான்மரோடு இணக்கத்தைப் பேண விரும்புவதாகத் தெரிவித்தார். இந்தியாவின் அரிசி, கொரோனாத் தடுப்பூசி முதலான கொடைகள் தொடருமென்றும் தெரிவித்தார். மியான்மர் அரசைக் கண்டிப்பது அங்கு சீனாவின் செல்வாக்கை அதிகரிக்கச் செய்துவிடும் என்று இந்தியா அஞ்சுவதாகத் தெரிகிறது. ஆகவே இந்தியா மென்மையான வருத்தம் தெரிவித்தலோடு நின்றுகொள்கிறது. எல்லைப் பிரச்சனைகளில் அக்கறை செலுத்தும் அதே வேளை சர்வதேச அரங்கில் தார்மீக ரீதியாக தன்னை ஒரு சக்தியாகவும் இந்தியா நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

**திசை வழி**

மியான்மர் படைத்துறை அரசு கடந்த ஓராண்டு காலத்தில் அகிம்சைப் போராட்டங்களை ஒடுக்கியது. உரையாடலுக்குக் கதவடைத்தது. இதன் மூலம் தனது நிலைப்பாட்டைத் தளர்த்திக் கொள்ளப்போவதில்லை என்கிற செய்தியைத் தெளிவாகச் சொல்கிறது. இந்த நிலை ஒரு புதிய தலைமறைவு அரசை அங்கே உருவாக்கியிருக்கிறது. ஓர் உள்நாட்டு போருக்கான எல்லாக் கருமேகங்களும் சூழ்ந்திருக்கின்றன. மியான்மரின் பல்வேறு அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு திசை வழியில் பயணிப்பதற்கான ஆயத்தத்தில் இருக்கின்றனன. உலக நாடுகள் இந்த சமிக்ஞையை உணர வேண்டும். இந்தியாவின் அடுத்த கட்ட நடவடிக்கைகளும் இதற்கேற்றாற்போல் அமையவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற் பருமனைக் குறைக்க என்ன உணவு

கணேசன்

உடற்பருமனைக் குறைத்தே தீருவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு காரியத்தில் இறங்கும்போது, காலையில் கண் விழித்ததும் குழப்பம் தொடங்கும். எதைக் குடிப்பது? எதைத் தவிர்ப்பது?

பருவ மழையை எதிர்பார்த்த நமக்கு எதிர்பாராமல் ஏற்பட்ட பெருமழையை எதிர்கொள்ள முடிகிறதா? அதுபோலத்தான், காலங்காலமாக தேநீர் அல்லது கோப்பியை வாய் மணக்க ருசித்துப் பழகிய வயிற்றுக்குத் திடீரென்று அறிமுகமில்லாத பொருளை வரவேற்பது சிரமம்தான். என்றாலும், எதையும் தாங்கும் இரைப்பை கொண்டது நம் வயிறு ஒரு வாரம் பழகிவிட்டால் போதும், விசம் தவிர எதையும் ஏற்றுக்கொள்ளும்.

**காலை உணவு முக்கியம்**

காலையில், வெறும் வயிற்றில் அரை லிட்டர் இளஞ்சூடான தண்ணீர் குடிப்பது நல்லது. பிறகு, அரை மணி நேரம் காற்றோட்டமான இடத்தில் நடைப்பயிற்சிக்குப் போக வேண்டியது கட்டாயம். இளையோர் ஜிம் போகலாம். வீட்டுக்கு வந்ததும் கிரீன் டீ அல்லது லெமன் டீ ஒரு கப் குடிக்கலாம். பால், கோப்பி, தேநீர் வேண்டாம். சிகரெட், வெற்றிலை, குட்கா, 'பான்'... வகையறாக்களுக்கு 'நோ' சொல்லுங்கள்!

காலை உணவை ஏற்கனவே சொல்லிவிட்டேன். எதைச் சாப்பிடக்கூடாது என்பதை இப்போது பார்க்கலாம்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று பிடிக்கும். பழைய தலைமுறையில் சிலருக்கு சோறு அல்லது இடியப்பம் என்றால், பிரியம்; புதிய தலைமுறையில் பலருக்கு நூடுல்ஸ் என்றால் விருப்பம். இப்படி ஆளுக்கு ஓர் உணவின் உடும்புப் பிடியில் சிக்கிக்கொண்டிருந்தால், உடனே மீள்வது முடியாததுதான். இது முடியுமானால், உடல் மெலிவது சுலபம்.

இதுவும் முக்கியம்: தீட்டப்பட்ட அரிசியில் சமைக்கப்பட்ட புட்டு, இடியப்பம், இட்லி, பொங்கல், எண்ணெய்யில் போட்டு எடுக்கப்பட்ட தோசை, வடை, பூரி, பரோட்டா, போண்டா... இவற்றில் எதுவும் காலை, இரவு உணவுக்கு வந்து விடக்கூடாது. முழுத் தானியம் அல்லது சிறுதானியம் என்றால் ஒப்புக்கொள்ளலாம். ஆனால், அளவு முக்கியம்; ஐம்பது கிராமுக்கு மேல் தாண்டக்கூடாது.

காலை இடைவேளையில் முடிந்தவரை எதையும் குடிக்காமல் இருப்பது நல்லது. வெதுப்பக (பேக்கரி) இனிப்புகளை ஓரங்கட்டுங்கள். கூல்டிரிங்க்ஸ் போன்ற 'பாட்டில்' அயிட்டங்களுக்கு ஏங்க வேண்டாம்.

அவசியம் தேவை என்றால், மோர் ஒரு கப் குடிக்கலாம். தினமும் மோர் போரடிக்கும் என்றால் லெமன் ஜூஸ், இளநீர், பப்பாளிச் சாறு இவற்றில் ஒன்றை அருந்தலாம்.

உடலைக் குறைக்க சபதம் எடுப்பவர்களில் அநேகம் பேருக்கு தொடக்க கட்டத்தில் மதியச் சாப்பாடுதான் வில்லனாகத் தெரியும். பிறந்ததிலிருந்து அரிசிச் சோறு தவிர வேறு எதையும் பார்த்தறியாத வயிறு காதலை இழந்த காதலன்/காதலி போல் பரிதவிக்கும். புதிய உணவால் பசி அடங்காமல் பழைய உணவுக்கு அடம் பிடிக்கும். இதை எதிர்கொள்வது என்பது எண்ணெய் தடவிய கம்பத்தில் ஏறி வெல்வதைப் போன்றது. இதற்குப் பயந்தே பலர் தங்கள் சபதத்தை திரும்பப்பெற்றுக்கொள்வது உண்டு.

என்றாலும், உடற்பருமன் தரும் துன்பங்களுக்குப் பசி பரவாயில்லை என்றுதான் நினைக்க வேண்டும் எடுத்த சபதத்தை நிறைவேற்ற காரியத்தில் இறங்கிவிடவேண்டும்.

**மதிய உணவு என்னென்ன?**

காலை உணவில் முட்டை சாப்பிடாதவர்கள் மதிய உணவில் சாப்பிடலாம். வேகவைத்த முட்டையில் வெள்ளைக்கரு சாப்பிடலாம். உப்பு, வெங்காயம், தக்காளி, மிளகுத் தூள், சீரகத் தூள், கறித் தூள், மிளகாய்த் தூள், சீஸ் துருவல்.... இவற்றில் உங்கள் ருசிக்கேற்றபடி கலந்து சாப்பிடலாம். இரண்டு கப் மோர் குடிக்கலாம். மீன், மட்டன், சிக்கன் எதுவும் சாப்பிடலாம்அளவு முக்கியம். 4 துண்டுகள் மட்டும் போதும். எண்ணெயில் வறுத்தவை வேண்டாம்.

அசைவம் பிடிக்காதவர்களுக்குக் காய்கறிகள்தான் கை கொடுக்கும். முட்டைக்கோஸ், காலிஃபிளவர், புரோக்கோலி, தக்காளி, வெண்டைக்காய், கத்திரிக்காய், அவரைக்காய், புடலங்காய், முருங்கைக்காய், வெள்ளரிக்காய், பூசணிக்காய், பாகற்காய், கீரைகள், காளான், வாழைத்தண்டு ஆகியவற்றில் பருப்பு, பயறுகளையும் சேர்த்து, மஞ்சள், மிளகு, வெந்தயம், வெங்காயம், சீரகம்,

**முதியோருக்கு கைக்குத்தல் அரிசி அல்லது சிறுதானியத்தில் சாதம் வடித்து, பருப்பு கலந்து கொடுக்கலாம்.**



இஞ்சி, இலவங்கம், ஓமம், கொத்துமல்லி, மிளகாய், உள்ளி போன்ற உணவுத் தயாரிப்புப் பொருட்களைக் கலந்து உணவுகளைச் செய்து உங்களுக்குப் பிடித்தபடி தயாரித்து, பசி அடங்க சாப்பிடலாம். அத்துடன் 100 மி.லி., மோர் குடித்துவிட்டால் வயிறு திம்மென்று நிறைந்துவிடும்.

இந்தப் பட்டியலில் கிழங்குகள்கூடாது. துரித உணவுகள் ஆகாது. பொதி உணவுகள் பகைவர்கள். சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் எதிரி. செக்கு எண்ணெய் பெஸ்ட். வீட்டுச் சமையல் நல்லது.

தினமும் ஒரு காய், சீசனுக்கு ஏற்ற காய் என்று எடுத்துக்கொண்டால், புதிய ரெசிபி போரடிக்காது; விலை கையைக் கடிக்காது. உடலுக்குத் தேவையான வைட்டமின், மினரல், ஃபைபர் எல்லாமே இவற்றில் கிடைத்துவிடும். உணவைக் குறைப்பதால் சத்துகள் குறைந்து விடுமோ எனப் பயந்து, சில பேர் தனியாகச் சத்து மாத்திரைகளைச் சாப்பிடுகிறார்கள். அது அவசியப்படாது.

முதியோருக்கு கைக்குத்தல் அரிசி அல்லது சிறுதானியத்தில் சாதம் வடித்து, பருப்பு கலந்து கொடுக்கலாம். இவர்கள் சாதத்தின் அளவை ஐம்பது கிராமாகக் குறைத்துக் கொண்டு, புரதங்கள் குலாவும் பருப்பு, பயறு, பட்டாணி, காளான், அவரை வகைகளை நூறு கிராம் வரை எடுத்துக்கொள்ளலாம். ஆட்டிறைச்சி அல்லது மீன் 2 துண்டுகள் சாப்பிடலாம்.

உணவில் புரதம் கூடும்போதும், கார்போக்கள் குறையும்போதும் உடற்பருமன் ஒதுங்கிவிடும். இது உடற்பருமனைக் குறைக்கும் அடுத்த ரகசியம்.

**மாலை நேர உணவு**

நம் பாரம்பரிய உணவுப் பழக்கத்தில் மாலை உணவு என்பது கிடையாது மூன்று வேளை சாப்பாடுதான். இதில் கண்ணைப் பறிக்கும் நிறங்கள் கிடையாது 'ஜொல்' விடவைக்கும் ருசிகள் இருக்காது விதவிதமான ரெசிபிகளைக் காணமுடியாது. ஆனால், ஆரோக்கியத்தை மேம்படுத்தும் சத்துகள் இருக்கும். ஆனால், மேற்கத்திய உணவுகளில் இந்தச் சத்துகளை எதிர்பார்க்க முடியாது. ஆகவே, இந்த உணவுகள்தான் எதிரிகள் என்பதை முதலில் உணர வேண்டும்.

பொதுவாக, காலை, மதியம், இரவுக்கு வீட்டில் சமைத்த உணவுகள்தான் பிரதானம். ஆனால், அநேக வீடுகளில் மாலை கடைச் சரக்காகத்தான் இருக்கும். அவை மேற்கத்திய உணவைச் சேர்ந்த நொறுக்குத் தீனிகளாகவே இருக்கும் என்பதைச் சின்னக் குழந்தையும் சொல்லும்.

சிறு குழந்தைகள் என்றால் பேக்கரி அயிட்டங்கள்.... பிஸ்கட், சாக்லேட், சிப்ஸ், லேஸ், கிரீம் கேக், குக்கீஸ்; பள்ளி வயது என்றால் பஜ்ஜி, போண்டா, சமோசா, பக்கோடா, முறுக்கு, சேவு, மிக்சர், பப்ஸ், பாப்கார்ன் அதற்கு அடுத்த வயது என்றால் ஃபாஸ்ட் ஃபுட் அயிட் டங்கள்... பீட்சா, பர்கர், கிரில் சிக்கன், ஃபிரைடு சிக்கன், ஃபிரஞ்ச் ஃபிரை, பரோட்டா, நூடுல்ஸ்.

இவை எல்லாமே செயற்கை சுவை யூட்டிகளால் தயாரிக்கப்படுபவை கார் போக்கள் மிகுந்த மைதாவில் பிறந் தவை நார்ச்சத்தும் வைட்டமினும் குறைந் தவை அதிக உப்பு, அதிக இனிப்பு, அதிக கொழுப்பு கொலுவிருப்பவை கலோரிகள் குவிந்திருப்பவை.

ரீஃபைன்ட் ஆயில், மீண்டும் மீண்டும் சூடுபடுத்திய எண்ணெயில் உருவாகின்றவை. இவற்றில் 'டிரான்ஸ் ஃபேட்' எனும் ஊடுகொழுப்பு மிக அதிகம். கொழுப்புகளிலேயே கெட்ட கொழுப்பு இது உடற்பருமனுக்கு அட்வான்ஸ் செலுத்தும் மோசமான பொருள். இது பிபிக்குத் தோரணம் கட்டும் சர்க்கரை நோய்க்குப் பச்சைக் கொடி காட்டும் இதயத்தின் பரம வைரி மாரடைப்பை வரவழைக்கும் நம் எதிரி.

மாலை உணவுக்கு எண்ணெய்ப் பலகாரங்களையும் நொறுக்குத் தீனிகளையும் ஓரங்கட்டி விட்டு, பச்சைக் காய்கறிகளையும், பழங்களையும் கலந்து சாலட்டாகத் தயாரித்து உண்பதை வழக்கப்படுத்தினால், உடற்பருமன் நம்மை விட்டு ஓடிப்போகும். காலிஃபிளவர், காளான், கேரட் போன்றவற்றில் தயாரிக்கப்பட்ட ரெசிபிகள் உதவும். ரசாயன உரமிடப்பட்ட காய் கனிகள் வேண்டாம். இயற்கை (ஆர்கானிக்) காய் கனிகள் நல்லது.

சிறுதானிய அதிரசம், போளி, குழிப்பணியாரம், தேங்காய் பர்பி, கேழ்வரகு கொழுக்கட்டை, கம்பு இனிப்பு மாவு, குதிரைவாலி கிச்சடி பெஸ்ட். சுண்டல், பயறு, பாதாம், அவித்த நிலக்கடலை, கொட்டை வகை எதுவானாலும் மாலை டிபனுக்கு ஓகேதான். 100 கிராம்தான் அளவு. இதனுடன் ஒரு கப் கிரீன் டீ குடிக்கலாம்.


இதற்கு மாற்றாக, ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை, நெல்லி, மாதுளை, கொய்யா, அன்னாசி, பப்பாளி, பேரிச்சை, அத்திப்பழம் என ஏதாவது ஒரு பழம் 100 கிராம் மற்றும் ஒரு கப் பால் சாப்பிட்டால், மாலை உணவுக்குத் தேவையான 200 கலோரிகள் கிடைத்துவிடும்.

அசைவம் விருப்பம் என்றால் கோழி சூப் அல்லது ஆட்டு சூப் ஒரு கப் குடிக்கலாம். ஐஸ் கிரீம், செயற்கை குளிர்பானங்களைத் தவிர்த்து, இயற்கையாக கிடைக்கும் இளநீர், பதநீர், பானகம், மோர், லஸ்ஸி அருந்துங்கள்.

இரவு டிபனுக்குக் காலை டிபனுக்குச் சொல்லப்பட்டதுதான். வாரத்தில் இரண்டு இரவுகளில் வேகவைத்த காய்கறிகள் 150 கிராம். காய்கறி சூப் 150 மி.லி. மட்டும்போதும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசக்கைப் பெளன்



பா.திருச்செந்தாழை

ஆண்டுக்கணக்காக மஞ்சளும் சந்தனமும் பூசிப்பூசி மாட்டு வாலைப்போல மெழுகோடி விட்டிருந்த கொச்சைக்கயிற்றினால் பின்னப்பட்ட சாட்டையை வாசலில் நின்றபடி வீட்டினுள் எறிந்துவிட்டு நல்ல வெயிலில் சுருட்டை ஆவேசமாக இழுத்துக்கொள்ள ஆரம்பித்தார் குஜுலுவா சுப்பையர். குஜுலுவா அவர்களது குடும்பப் பெயர், சுப்பையர் என்கிற அய்யர் ஒட்டு சௌராஷ்டிரா சமூகங்களுக் கேயுரிய தாங்கள் பாதி பிராமணர்கள் என்கிற மனமயக்கத்தின் பொருட்டு ஒட்டிக்கொண்ட ஒன்று. சற்குணம் அவரைத் தாத்தா என்றுதான் அழைப்பான். நல்ல செவிடான அவருக்கு அந்த வாயசைவு மட்டும் எப்படியோ துல்லியமாக அர்த்தமாகிவிடும். தொடர்ந்தாற்போல அப்படிக் கூப்பிடும்போதெல்லாம் எரிச்சலாக முறைத்தவாறே உதட்டின் இரு விளிம்பிலும் வெள்ளையாகத் திரண்டிருந்த எச்சிலோ எதுவோ அதை விரல்களால் அழுத்தித் துடைப்பார். பற்கள் உதிர்ந்துவிட்ட வயோதிகத்தின் காரணமாக வாய் சதா நமட்டு மெல்லலில் இருப்பதால் திரண்டு வருகிற வெள்ளைப்படலம் அது. வெயிலுக்கு நடுவே சுருட்டின் காரமான நெடியில் ஒருமுறை உள்நாக்கில் எச்சில் சுரந்தது. கூட்டி விழுங்கிக்கொண்டான்.

ஓடுவேய்ந்த கூரைகள் தவங்கி இறங்கிவிட்ட வீடுகளாலான குறுகிய தெரு. சுண்ணாம்புக் காரைகள் உதிர்ந்துவிட்ட பல வீடுகள் முனைகள் தேய்ந்த செங்கல் பற்களோடு இளித்துக்கொண்டிருந்தன. தெருவை நிறைத்துச் செல்கின்ற சாக்கடை நீருக்கு மத்தியில் மதிய வெயிலை அனுபவித்தபடி உழன்று கிடக்கின்ற பன்றிக்குடும்பம். இந்தச் சிதிலங்களுக்கு நடுவே வானவில்லைப்போலத் தெருவின் ஒருமுனையிலிருந்து மறுமுனைவரை இழுத்துக் கட்டப்பட்ட நூலின் பாவு வரிசை. ஜவ்வுமிட்டாயிலிருந்து இழைத்து இழைத்து உருவப்பட்டதைப்போல ஜொலிக்கின்ற நூற்கற்றைகள் பொன்னிறத்திலும் அடிக்கின்ற சிவப்பு நிறத்திலும் மினுங்கியபடி நீண்டிருந்தன. அவற்றிலிருக்கும் சிக்கல்களை விரல்களால் தேடித்தேடி களைந்துகொண்டிருந்த நெசவாளிகளின் வரிசை ஒருமுறை தாத்தாவின் குரலுக்குத் தலையுயர்த்திப் பார்த்தது. பிறகு தங்களுக்குள் சிரித்தவாறே, சாக்கடையில் ஊறிக்கிடக்கின்ற பன்றியைக் கவனித்தபடி நூல்களின் வரிசைக்குத் திரும்பியது. இலயித்துக் கிடக்கின்ற பன்றிக்குட்டிகளைச் சலனப்படுத்தாமல் சிரிப்பதில் அவர்கள் இப்போது தேர்ந்திருந்தார்கள். சட்டெனச் சிறு குரலதிர்விற்கும் எழுந்துவிடுகின்ற பன்றிகள் ஓடுவதற்கு முன் சளசளவென உடம்பை ஒருமுறை சிலிர்த்துக்கொள்ளும். அப்படிச் சிலிர்க்கின்றபோது அவற்றின் மேலிருந்து விசிறியடிக்கப்படும் சாக்கடைத் துளிகள் நூலில் தெறித்துவிட்டால் வீட்டில் இரண்டு மாசத்திற்கு அடுப்பெரியாது.

சுப்பையருக்கு ஒடுங்கிய உடல்வாகு. அவரும் அவரது தம்பியும் சிறுவயதிலிருந்தே சந்நியாசிகளாகிவிட விரும்பி யோக தவத்தால் கொழுப்பை உருக்கி வற்றலாய் காய வைத்திருந்த உடம்பு அது. சுப்பையரின் தம்பி சொன்னதுபோலவே சந்நியாசியாகி குஜராத் பக்கம் சென்றுவிட்டார். பாதி சந்நியாசத்தில் இருந்தபோது எப்படியோ ஒரு கல்யாணம் கட்டி முதுமையின் தொடக்கத்தில், வயதுக்கு வந்த பிள்ளையை வீட்டில் வைத்திருக்கிறார். அவரது மூத்த மகன் சங்கரை யாரும் பொருட்படுத்துவதேயில்லை. அவன் பிறக்கும்போதே தகப்பனை வெறுப்பவனாகப் பிறந்து வளர்ந்தான். சந்நியாசத்தை ஏங்கியபடி சம்சாரியாக வாழுகின்ற அப்பனைக் கண்டபோது இன்னும் இரத்தம் கொதிக்க எப்போதும் காதுகூச நாலு வார்த்தை சண்டைபோட்டுவிட்டு காணாமல் போய்விடுபவனாக இருந்தான்.

நரைமுடிகள் படர்ந்த வயோதிக வயிறு நடுங்க சுப்பையர் வீதி நடுவே நின்றபடி எல்லோரையும் திட்டினார். அவர் திட்டத்திட்ட உதட்டினோரம் வெள்ளை திரண்டெழுந்தபடி இருந்தது. சைக்கிளை நாய்க்குட்டியைப்போல ஒரு கையில் பிடித்தபடி கிழவனையே பார்த்துக்கொண்டிருந்தான் சற்குணம். சைக்கிள் கேரியரில் பத்துதூண் சந்திலிருந்து வாங்கி வந்திருந்த நூல்கற்றைகள் பொதியாகக் கட்டப்பட்டிருந்தன. இரு கைகளிலும் மண்ணையள்ளி, நகரத் தொடங்கிவிட்ட மனிதர்களை நோக்கி வீசியெறிந்து சபித்தார் அவர்.

'எவ்வீட்டு அம்மணத்த நக்க வந்தவிங்களா.. அழிஞ்சு போங்கடா எல்லாரும்.'

சற்குணம் அவரையொட்டி மெதுவாகச் சைக்கிளை உருட்டிச்சென்று வீட்டுவாசலில் சுவரோடு சாய்த்து வைத்தான். அரக்கு நிற நூற்கற்றைகளில் காரைச்சுண்ணாம்பு உதிர்ந்து படிந்ததைப் பார்த்ததும் பதறியபடி சைக்கிளை மூச்சுவாங்க வலுபோட்டு ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினான். பிறகு, மெதுவாக வீட்டிற்குள் நுழைந்தான். கிழவன் வீசிய சாட்டை பாம்பைப்போலத் தரையில் கிடந்தது. அதைத் தொடக்கூடாதென மஞ்சு ஒருமுறை சொல்லியிருக்கிறாள். அது எப்போதும் கருப்பசாமி படத்திற்குமுன் தேங்காய்மீது சுருட்டியே வைக்கப்பட்டிருக்கும். அமாவாசை பௌர்ணமிகளில் அவர்கள் சாமி கும்பிடும்போது கருப்பு கிழவன் மீது ஏறும். அப்போது அவர் தன்னைச்சுற்றி அவலங்களாக நிற்கும் அவரது மனைவியையும் மஞ்சுவையும் பார்த்து ஏதோ அசரிரித்தபடி சவுக்கால் தன்னைத்தானே அடித்துக்கொள்வார். கிழவரின் மனைவிக்குள் என்ன ஓடிக்கொண்டிருக்கிறதென்றே எப்போதும் தெரியாது.

பெரும்பாலான நேரங்களில் அவள் அடுப்பங்கரைச் சுவரில் அப்பியிருக்கும் கரிந்த நிழலைப் பார்த்தபடியே யோசனையில் ஆழ்ந்திருப்பாள். கைகள் பாத்திரங்களைப் புழங்கியவாறு தானாகச் சமைத்துக்கொண்டிருக்கும். கிழவனுக்குக் கண்பார்வை குறைவு. இராட்டை சுற்றுவதற்குக்கூடத் திராணியற்ற அவரது பகல்கள் தெருவில் நீட்டப்பட்டிருக்கும் பாவு நூல் வரிசைகளை நெஞ்சுமுடிகளைச் சொறிந்தபடி பார்த்துக்கொண்டிருப்பவை மட்டுமே. உறைந்துவிட்ட இந்த வீட்டின் கடிகாரத்திற்குள் வினாடி முள்ளின் துடிப்போடு மஞ்சு மட்டும் சுற்றி வருவாள். ஆண்சட்டையும் பாவாடையுமாக தறியில் அமர்ந்து ஏதேனும் பாடலைச் சப்தமாகப் பாடியபடி அவள் ஒரு கையில் தறிக்கயிற்றைப் பிடித்து சேலைகளை நெய்யும்போது காட்டுக் குதிரையொன்றில் பயணம் செய்பவளைப் போலவே இருப்பாள். கால்மாற்றி மாற்றி அவள் தறிக்கட்டைகளை மிதிக்கும் இலாவகத்தில் குழைந்த ஜக்காட்பெட்டி சிறிய இசைக்கருவியைப்போலவே ஒத்திசைந்துகொண்டிருக்கும்.

கையில் நூல் பொதியோடு சற்குணம் வீட்டினுள் நுழைந்தான். வீட்டை நிறைத்து நின்றிருக்கும் தறிக்குக்கீழே மஞ்சு இன்னமும் கண்ணீரைத் துடைக்காமல் படுத்திருந்தாள். வர்ண நூல்களின் வரிசைக்கிரமமான அணிவகுப்புக்குக் கீழே அவள் நூல்சிறை ஒன்றிற்குள் இருப்பதைப் போலிருந்தது.

'இன்னிக்கு ராட்டை போட வேணாம்.'

மஞ்சுவின் அம்மா அடுப்பங்கரையிலிருந்து கூவினாள். அதன் அர்த்தம், 'நீ உடனே கிளம்பு' என்பது சற்குணத்திற்குப் புரிந்தது. அதைப் பொருட்படுத்தாமல் தறிக்குக் கீழே குனிந்து, மஞ்சுவின் முகத்தைப் பார்த்தான். கலங்கி நின்றிருந்த அவளது கண்களில் சுறுசுறுவென புதிய நீர் ஊறி வழிந்தது. சற்குணம் அவளருகே போய் அமர்ந்துகொண்டான். காற்றில் அலைந்த அவளது முடிக்கற்றைகள் சற்குணத்தின் தொடைமீது படர்ந்து படர்ந்து விலகின.

'எங்க போன?'

நூற்கட்டுகளைத் தரையில் விரித்து வைத்தபடி யாருக்கும் கேட்காமல் சற்குணம் கேட்டான். அவளது கைகள் மிக இரகசியமாக ஊர்ந்து வந்து சற்குணத்தின் பேண்ட் துணியைத் தொட்டுப் பார்த்தன.

'என்னடா திடீர்னு?'

'ப்ச். பத்தாங்கிளாஸ்க்கு மேலே பேண்ட்டுதானாம். நேத்து வாங்கித் தந்துச்சு அம்மா.'

உதட்டு இரு விளிம்புகளையும் வலிந்து கீழிறக்கி கேலியும் பெருமிதமுமாய் பழித்தாள். சற்குணம் அதைப் பொருட்படுத்தாமல் மீண்டும் கேட்டான்.

சாட்டையால் விளாசியதால் முழங்கைப்பக்கம் தடமிட்டிருந்த செவ்வரிகளில் கொச்சைக்கயிற்றுத் துகள்கள் விரவியிருந்தன.

'இதெல்லாம் தேவையா?''

சற்குணத்திற்கு குரல் கட்டியிருந்தது. எதற்காக அப்படிக் கேட்டானென்றே அவனுக்குத் தெரியவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்பு பாவு நீட்ட வருகின்ற ஜெயபாலனுடன் மஞ்சுவிற்கு முதல் தொடர்பு ஏற்பட்டு, இதே போல அன்றும் சவுக்கடி பட்டு அவள் கிடந்தபோதும் அவன் இதே கேள்வியைக் கேட்டான். ஆனால் கண்களில் சிறிய அச்சமும், குரலில் அலுப்பும் மட்டுமே அப்போது இருந்தன. இந்த இறுகிவிட்ட குரலிற்குள் கசிகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விம்முதலை அவனே சட்டென அந்நியமாக உணர்ந்தான். அவள் பதில் சொல்லவில்லை. ஆனால் இவனது இந்தக் கேள்விக்கு நியாயமான பதிலாகத்தான் இந்த சிறு நாட்களில் அடைந்திருந்த மகிழ்வை மட்டும் கடத்திவிட எண்ணினாள். தனது மகிழ்ச்சியின் இறைச்சி வேகின்ற பக்கங்களை, தனது துயரங்களில் விடுதலைக்கான ஒரு வாசல் சலுகையாகக் கிடைப்பதுவரை சற்குணத்திடம் அவள் பெரும்பாலும் எதையும் மறைப்பதில்லை. எல்லாத் துயரத்திற்கும் முன்பாக அதன் வேர்க்கிழங்காக ஓர் இன்பம் ஒளிந்திருக்கும். துயரங்கள் காலத்தின் வெளிச்சத்தில் கருகி வீழ்பவை. வேர்க்கிழங்குகள் ஒருபோதும் அழிவதில்லை. மண்ணுக்குக்கீழே அவை உறங்கிக்கொண்டே இருக்கின்றன. துயர்களை மட்டுமே கேட்க வருபவர்களை மஞ்சு கதவிற்குப் பின்பாக இருந்தே சிறிய அழுகையோடு பதில் சொல்லி அனுப்புகிறாள். அதற்கு முன்னிருந்த அந்த மறைக்கமுடியாத கிழங்குகளைச் சற்குணத்திடம் மட்டும் தறிக்குக்கீழே அமர்ந்து இலேசான இருளில் எவ்வித தயக்கமுமின்றிக் கூறிச்செல்வாள். வண்ணநூல்களின் வழியே விழுந்து கம்பிகம்பிகளாக உடைகின்ற வெளிச்சத்தில் அவளது முகம் அப்போது யவ்வனம் கண்டிருக்கும்.

தனது மகிழ்ச்சியினை, தான் மகிழ்ந்ததைக் கூறும்போது முகங்களில் வந்துவிடுகின்ற அந்தக் கண்ணாடிபோன்ற தன்மையோடு, 'தேவையில்லைன்னுதான் தோணுது. ஆனா எப்படியோ ஆயிடுதுடா' என்பாள்.

இன்று காலையில்தான் இவளை அநாதரவாக கள்ளந்திரி பஸ்ஸ்டாப் அருகே நிற்க வைத்துவிட்டு தனபால் ஓடி மறைந்திருந்தான். தூரத்து அழகர் கோவில் மலைப்பசுமைகளை வேடிக்கை பார்ப்பவளாக, பூட்டியிருந்த கடையின் வாசலில் அமர்ந்திருந்தவளைப் பிறகு யார் யாரோ விசாரித்து வீடுவந்து சேர்த்திருந்தார்கள்.

'கோவிலுக்குப் போலாம்னு சொல்லியிருந்தான்டா.'

மஞ்சு எப்போதாவது சேலை கட்டுவாள். இன்று கட்டியிருந்த அந்தச் சேலை அதே தினத்தில் சவுக்கடியும் வாங்கியிருந்தது. பெருங்களிப்போடு தொடங்கியிருந்த நாளின் வெளிச்சங்கள் உடைந்துகொண்டிருக்கின்ற அவளது இந்த அழுகைகூட விநோத அழகை அவளிடம் கொண்டுவந்திருந்தது.

'அம்மா இப்பல்லாம் இங்க வர்றதுக்கு திட்டுறாங்க.'

இந்தச் சொற்களின் வழியே அவளுக்குள் எழுகின்ற அதிர்ச்சியை இரசிக்க விரும்பியவனாக அவன் கூறினான். ஆனால் அவள் இன்னமும் தூரத்து நினைவின் களிம்புகளைத் தன்னிடமிருந்து அகற்றாதவளாக வெறும் செய்தியாக மட்டுமே இதைக் கேட்டாள். சற்குணத்திற்குள் எதுவோ உடைவது போலிருந்தது.

அமைதியாக இராட்டையை இழுத்து வைத்துக்கொண்டு நூற்பிரியை அதில் தழைத்துப் பொருத்திவிட்டு சுழற்றத் தொடங்கினான்.

சித்திரைத் திருவிழா முடிந்த நாட்களின் வெறுமை எங்கெங்கும் சூழத்தொடங்கியிருந்தது. கள்வெறி தீர ஆடிக்களைத்து ஆழ்ந்து உறங்குபவனின் பாதம் மட்டும் அசைந்துகொண்டிருப்பதைப் போல மதுரை முழுக்க திருவிழா அசதியோடு தீர்ந்துகொண்டிருக்க, கடைக்கோடி வண்டியூரில் மட்டும் அதன் மிச்சங்கள் இன்னும் மினுங்கிக்கொண்டிருந்தன. ஊர்வலத்தின் தாலாட்டு நடை நீங்கிய பல்லக்கில், வேகவேகமான கால்கள் ஓடியபடி தூக்கிச்செல்ல, பூக்கள் உதிர்ந்த நார்கழுத்து மாலையோடு அசிங்கமான பகல் வெளிச்சம் முகத்தில் விழ அழகர் ஊர் திரும்பிக்கொண்டிருந்தார். வண்டியூர் வைகைக்கு நடுவே தேனூர் கல்மண்டபத்தில் மண்டூகமுனி சாபவிமோசனம் வேண்டி, காலில் சணல்கயிறு கட்டப்பட்டு ஆற்றுமணல் சூட்டில் மயங்கிக்கிடக்கும் கொக்காக மாறி கிறங்கிக்கிடந்தார். போகிற வழியில் அழகர் நாட்டுத்துப்பாக்கியால் அந்தச் சணல் கயிறைச் சுட்டு முனிவரை விடுவித்துச் செல்கிற வைபவம்.

மலையை நோக்கித்திரும்பிச் செல்கின்ற அழகரை மூன்றுமாவடி வரை கூடவே போய், பச்சைக்கற்பூரமும் நாட்டுச்சக்கரையும் சேர்ந்து இளகும்படி வாழையிலையால் வாய் கட்டிய சிறிய செம்புகளில், நிறைக்க நிறைக்க சூடம் காட்டி மகிழ்ந்தபடி சௌராஷ்டிரா மக்களின் படை பல்லக்கைத் தொடர்ந்துகொண்டிருந்தது. ஊர் திரும்புகின்ற அழகர் அவர்கள் வீட்டு மனிதன். அழகரின் கண் மை அழகைப் பார்ப்பதற்காகவே தறியை விட்டிறங்கி வருகின்றவர்களும். ஈரமும் சகதியுமான ஆற்றோரங்களில் சிறிய பிளாஸ்டிக் பையைத் தரையில் விரித்து, புளியோதரைப் பாத்திரங்களைத் திறந்தபடி அமர்கின்ற முகங்களுமாக வைகையின் வடக்குக்கரை பரபரத்துக்கிடந்தது.

ஆற்றின் எதிர்க்கரையில் ஐராவதநல்லூர் ஏற்றத்தின் அருகே கருவேலங்காட்டுக்குள் தரையை ஒதுக்கி சாராயம் விற்றுக்கொண்டிருந்தார்கள். சகாயம் ஒரே மூச்சில் குடித்துவிட்ட டம்ளரைச் சட்டெனத் தரையில் ஊன்றி வைத்தவாறே நாக்கைச் சப்பி, முகத்தைச் சுருக்கி ஒட்டுமொத்தமாக அந்தப் புளிப்பின் சுவையை எச்சிலாகத் திரட்டித் தொண்டைக்குள் செலுத்திவிட்டு குனிந்தே இருந்தான். அவனுக்கு முன்பாகக் கிடந்த சிரட்டையில் பலரது விரல்கள் குழைத்தெடுத்த ஊறுகாய் பூஞ்சை படர இருந்தது. சற்குணம் அவனருகே அமர்ந்தவனாக ஆற்றின் எதிர்முனையில் நடைபெறுகின்ற திருவிழாவின் வர்ணத் துணுக்குகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஆங்காங்கே சிறிய கீறல்களுக்கு நடுவே சாக்கடையோடு கலந்து ஓடுகின்ற வைகைக்கு மத்தியில் வெயிலின் கானல் நிறைந்திருக்க, சப்தங்களே இல்லாத அந்தத் திருவிழா நகர்வுகள்



கனவைப்போலப் புலப்பட்டன. அது ஒருவகையில் நிதானித்த மனதைத் தோற்றுவித்தது. வேறொரு இடத்தில் வேறொரு காலத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற அந்த வர்ணத்திட்டுகளின் கோலாகலமான அசைவுகளைப் பார்க்கப் பார்க்க இன்று காலையில் தான் கண்ட காட்சி துல்லியமாகிக்கொண்டே எழுந்து வந்தது.

தெருவிற்குள் சைக்கிளில் திரும்பும்போதே மஞ்சுவின் அப்பாவும் அம்மாவும் கொக்கு சுடுவதைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் மட்டுமல்ல, காரைபெயர்ந்து உப்பு அரித்த எல்லா ஓட்டுவீட்டு வாசிகளும் தீபாவளிக்கு எடுத்து திருவிழாவிற்கென வைத்திருக்கின்ற புத்தம் புதிய உடைகளோடு சென்றுகொண்டிருந்தனர். மிகவும் சிறிய குடியிருப்புப் பகுதிதான். என்றாலும் விசேஷங்களை ஒரு துளி விடாமல் கொண்டாட்டமும் கூத்துமாகத் தங்களுக்குள் ஏற்றிக் களிப்பதற்கு அவர்கள் தயங்கியதேயில்லை. எட்டணாவிற்கு வெல்லப்புட்டு விற்பவரிலிருந்து முப்பது ரூபாய் வாடகைக்குக் கல்யாணப் பெண்ணின் முழு அலங்கார கவரிங் நகையைக் கொடுப்பவர் வரை எல்லோரும் ஆட்டுப்புழுக்கைகளுக்குள்ளும் தெருவை மறித்து ஓடுகின்ற சாக்கடைக்குள்ளும் அனுசரித்து வாழுகின்ற பகுதி. தினசரி அறுபது ரூபாய் வருமானம் உள்ள மனிதர்களால் ஆன உலகு. ஆதலால்தானோ என்னவோ பச்சைப்பட்டும் தங்கக்குதிரையுமாக வைகையில் இறங்குகின்ற அழகரைவிட, அவமானப்பட்டு ஊர் திரும்புகின்ற இந்த அழகுமலையானை அவர்களுக்கு மிகவும் பிடித்துப்போயிருந்தது.

சற்குணம் வாசலில் சைக்கிளை நிறுத்தும்போது, மஞ்சுவின் வீட்டிற்குள்ளிருந்து ஊத்து களிமண்ணை மிதித்து மிதித்து நடந்த கால் தடங்கள் விரவி வெளியேவரை வந்திருந்தன. இரண்டு வாரமாக அவளது வீட்டில் கிணற்றுவாளி காற்றைத்தான் அள்ளி வந்துகொண்டிருந்தது. தூர்வாரி தூர்வாரி கிணற்று ஊற்றுமுகமே அழிந்துபோய், சுண்ணாம்புத் திட்டுகள் மறித்து எழ ஆரம்பித்துவிட்ட பழைய உறைகிணறு அது. நேற்று மதியம்போலத் தோண்ட ஆரம்பித்து வேலையை மிச்சம் வைத்துப் போயிருக்க வேண்டும். ஒருவேளை காலையில் ஊற்று தெளிந்தெழ ஆரம்பித்திருக்கும். கதவு சாத்தியிருந்தது. நாதங்கிக்குக் கீழே இருக்கும் சிறிய ஓட்டைக்குள் விரலை நுழைத்து உட்தாழ்ப்பாளை நெம்பி விலக்கினான். அம்மா இதற்காகவே ஒருமுறை உதைத்தாள். சொல்லிய மஞ்சுவே இவனைத் தொடைக்குள் கட்டியணைத்து அவளது அடிகளிலிருந்து காப்பாற்ற வேண்டி வந்தது. வீட்டை நிறைத்து அமர்ந்திருந்த தறியைப் பார்த்தபடி கொல்லைப்புறம் நோக்கிச் சென்றான். அங்கே சிறிய பாத்திர அசைவுகள் கேட்டன. நடக்க நடக்க களிமண் காலடித்தடங்கள் பெருகிவந்தன.

பொன்னிறத்தில் புதிய கொச்சைக்கயிறும் கிரிஸ் வைக்கப்பட்ட கம்பியுமாக கிணற்றின் வசீகரம் கூடியிருப்பதைப் பார்த்தபடி வரும்போதே, கிணற்றுக்குள்ளிருந்து துவர்மண் குவியல் சுண்ணாம்பு சிதிலங்களோடும், காக்கைப்பொன் துகள்களோடும் ஈரம் வடிந்துகொண்டிருக்கும் குவியலாகக் கிணற்றருகே அள்ளி வைக்கப்பட்டிருந்தது. அதனருகே மஞ்சு கிணற்றைப் பற்றியபடி உள்ளே பார்த்துக்கொண்டிருந்தாள். சட்டென சற்குணத்தின் தோளைப் பிடித்து யாரோ நிறுத்தியதைப் போலிருந்தது. தனது உடைகளையெல்லாம் அவிழ்த்து துவைக்கும் கல்லருகே குவியலாக போட்டுவிட்டு, ஹேர்பின்னல்களுக்குள் இறுக்கப்பட்டிருந்த தலைமுடியின் மிதப்பை ஒரு விரலால் அவிழ்த்துவிட்டு, நீவி நீவி பொதும்பச் செய்தபடி ஆடைகளற்ற நிர்வாணத்தின் மீது முற்பகல் வெளிச்சம் தருகின்ற வெதுவெதுப்பை அனுபவித்தபடி அவள் நின்றாள். சற்குணம் மூச்சையடக்கியபடி புழக்கடை இருளுக்குள் நின்றான்.

துவர்மண் கரைசலின் மேல் விழுகின்ற வெயிலை காக்கைப்பொன் ஜ்வலித்துக்கொண்டிருக்க, அவிழ்ந்த தலைமுடிகள் சிறுநதியைப்போல உடலின்மீது படிந்துகொண்டிருக்க, வசீகர காட்டுவிலங்கின் திமிர்த்தனம் சுண்டுகிற உடலோடு மஞ்சு கிணற்றுக்குள் பார்ப்பதை நிறுத்திவிட்டு, ஏதோவொரு மாய அழைப்பைக் கேட்டவளைப்போல புழக்கடைப் பாதை நோக்கித் திரும்பினாள்.

விக்கலைப்போன்ற ஒரு குரலில், 'கடவுளே' என்றபடி கைகளைக் குறுக்கே கட்டிக்கொண்டு கிணற்று மேட்டிலேயே அமர்ந்துவிட்டாள். சற்குணத்தின் கை கால்கள் நடுங்கின. உதடுகள் வினோதமாக நெளிந்து எதையோ உளற, சட்டென கண்கலங்கிவிட்டது. துவைக்கும் கல்லிற்கும் அவள் அமர்ந்திருக்கும் தூரத்திற்கும் நடுவே துவர்மண் குவியலின் நீர் கைகள் கைகளாக வளர்ந்துகொண்டிருக்க, சற்குணத்தை சிறிய எரிச்சலும் அவமானமுமாக ஏறிட்டாள். அவளது கண்களில் ஒரே ஒரு கணம் வந்துசென்ற அந்த யாரோ ஒருவனைப் போலப் பார்க்கின்ற பார்வையைச் சற்குணம் தனது திகைப்பினூடே ஆழமாக உள்வாங்கினான். யாரோ ஒருவன். கரும்பாலை பெட்டிக்கடையில் தனக்குப் பீடி எடுத்துத் தருகின்ற அம்மாவின் வயதிலிருக்கும் பெண்ணின் கண்களில் வருகின்ற அந்த யாரோ ஒருவன், தாத்தாவைப்போன்ற மனிதனொருவனைச் சாலையில் மோசமான கெட்ட வார்த்தை சொல்லிவிட்டு சைக்கிளில் ஏறி மிதித்துச் செல்லும்போது அந்த வயதானவனின் கண்கள் பார்க்கின்ற யாரோ ஒருவன், அய்யனார் தியேட்டரில் நீலப்படங்களைப் பார்க்கச் செல்லும்போது பயந்து வியர்த்துவிட்ட உள்ளங்கையில் நீட்டுகின்ற ரூபாயை எவ்வித பிரக்ஞையுமின்றிப் பெற்றுக்கொண்டு விலகிப்போடா கூதி எனச் சொல்லுகின்ற தன்னைவிட மூத்தவனின் கண்களில் வருகின்ற அந்த யாரோ ஒருவன்.

அந்த நேரங்களிலெல்லாம் சற்குணத்தின் முதுகுப்புறத்தில் அம்மாவின் கண்களால் தைக்கப்பட்டிருந்த எண்ணற்ற கொக்கிகள் ஒவ்வொன்றாகக் கழன்று விழுவதைப் புண்ணிலிருந்து சலம் வெளியேறுகின்ற மிருதுவான வேதனையைப்போல அவன் உணர்வான். அதன் கூடவே வந்துவிடுகின்ற என்னவோவொரு சுதந்திரம். அது தருகின்ற போதையில் விழித்துக்கொள்கின்ற உடல். நீரின் மீது கைகளை விரித்தபடி மிதக்கின்ற உணர்வு பரவும் அப்போது. மஞ்சு கண்ணீர் திரண்டுவிட்ட கண்களோடு அவனைப் பார்த்தாள். இன்னமும் அதிர்ச்சியாகக்கூட தலையைக் குனிந்து திரும்பாத அவனது முகத்தை, புழக்கடையின் பாதி இருளுக்குள் வியர்வை அரும்பத் தொடங்கிய முகத்தோடு அவளது திடுக்கிடலாலும் கடவுளே என்கின்ற சொல்லின் பதற்றத்தாலும் நிலைகுலையாமல் வெறுமனே பெண்ணுடலாக அவளை ஞாபகங்களில் ஒளிக்கத் தொடங்கிவிட்ட கண்களைக்கொண்ட ஒருவனைத் தயங்கியபடி பார்த்தாள். துவர்மண்ணின் சுண்ணாம்பு மணக்கும் நீர்க்கரம் அவனது காலைத் தீண்டியது.

ஆற்றின் எதிர்க்கரையில் நாதசுரம் எழத் தொடங்கியதன் ஒலி, வைகையின் வெற்றுமணல் திட்டுகளின் மீது துருப்பிடித்த குரலாக மாறி வந்தது. சகாயத்தின் தலை தொங்கிவிட்டது. அவன் ஆட்டுக்குட்டி போல எதையோ வாயில் மென்றபடி தலையைக் கவிழ்ந்து கிடந்தான். அவன் குடிக்கத் தொடங்கியபோது சற்குணம் மஞ்சுவை அப்படிப் பார்த்த நிகழ்வை தயங்கியபடி யோசித்து யோசித்துக் கூறிக்கொண்டிருந்தான். சகாயத்திற்கு இது போல நூறு கதைகள் தெரியுமென்பதால் சற்குணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கூறுகின்ற வேளையில் அதனை இரசித்துக் கேட்பவனாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்காகவே தனது குடிபொருட்களை நேர்த்தியாக விரித்துவைத்தபடி இருந்தான். தனது அனுபவத்தின் சுவைகோர்வையாக அந்த நேர்த்தியைச் சற்குணம் உணர்ந்தவாறு மேலும் மேலும் கூறிக்கொண்டிருந்தான். லேசாக போதையேறத் தொடங்கியதுமே அவன் சற்குணத்தைத் திட்ட ஆரம்பித்தான்.

'பார்த்ததும் கிணத்தோரமா வெச்சு சாய்க்காம.. இங்க வந்து பிட்டு படம் கணக்கா...'

சற்குணத்திற்குள் கொஞ்சம் அவமானமும் அதன் வழியாக மேலும் கொஞ்சம் மூர்க்கமும் எழுந்தது. அந்த நிமிடத்தில் தனது உடலுக்குள்ளி ருந்து வெளிவரத் துடித்த ஏதோவொரு விசையின் மீது அச்சமும், இலேசான அருவருப்பும் இருந்ததை சகாயத்திடம் எப்படிச் சொல்வதெனத் தெரியாமல் வெறுமனே வேடிக்கை பார்க்கத் தொடங்கினான். சகாயம் மேலும் கொஞ்சம் போதையுற்றவுடன் பூஞ்சை படிந்த அந்த ஊறுகாய் சிரட்டையைச் சற்குணத்தின் பக்கம் நகர்த்தினான். அழுகிவிட்ட புண்ணைப்போன்ற அதன் தோற்றத்தில் ஒரு அருவருப்பு இருந்தது. அதனுள் ஆவேசமாகப் பதிந்தெழுந்த விரல்களின் கூட்டத்தால் அந்தப் புண்ணிற்கு நடுவே இளங்குருதி வழிய புத்தம்புது எலுமிச்சைத் துண்டங்கள் மேலெழுந்துகொண்டிருந்தன.

'எடு.. எடு...''

சற்குணம் அந்தப் பூஞ்சைகளின், அந்த அழுகிய மேற்பரப்புகளின் மேலே தனது கவனம் விழுவதை உள்ளுக்குள் எதனையோ உடைப்பதன் வழியே கடந்து செல்ல முயன்றான். சிறிய நடுக்கத்தோடு குழிந்த அந்த எலுமிச்சைத் துண்டுகளை விரலால் தோண்டி எடுத்தான். பிறகு கண்களைச் சுருக்கிக்கொண்டு நாவில் வைத்தான். சகாயம் இன்னமும் குனிந்தபடி தலையாட்டிக்கொண்டே இருந்தான். எதிர்க்கரையில் போர்வை ஒன்றை உதறியதைப்போல நாட்டுத்துப்பாக்கி வெடித்த ஒலி தாமதமான அதிர்ச்சியோடு வந்தடைந்தது. மண்டூகமுனி கயிற்றில் விடுபட்டு கொக்காக காற்றில் மிதக்க ஆரம்பித்திருந்தார்.

வயிற்றுக்குள் சிறிய நூல்கற்றையைச் சுமந்தபடி தறியின் இடப்பக்கமும் வலப்பக்கமும் மாறி மாறிச்சென்று மரராக்கெட் முத்தமிட்டுக்கொண்டிருந்தது. ஒவ்வொரு சீறலுக்கும் அதன் வயிற்றிலிருந்த நூல் சேலையைத் துளித்துளியாக உருவாக்கிக்கொண்டிருந்தது. கிழவன் எதையோ எடுக்க உள்ளே வந்தவர், தறியின் பாவு மீது தன்னிச்சையாகப் பொம்மையைப்போலத் தறியடிக்கின்ற மஞ்சுவை ஓரக்கண்ணால் பார்த்தபடி சென்றார். அவள் எதையோ எண்ணிகொண்டிருக்கிறாள் என்பதை நளினமாகப் பாத மிதிக்கட்டைகளை விடுவித்து பின் பெருவிரலால் அழுத்திப் பிடிக்கின்ற பாதங்களும் மின்னல் வேகத்தில் இடமும் வலமுமாகச் செல்கின்ற மரராக்கெட்டை எதோ ஒரு வாசகம் போல வாசிக்கின்ற மனமும் எல்லாவற்றுக்கும் மேலாக மனமொற்றித் தறியடிக்கின்றபோது அந்த மொத்தத் தறி எந்திரமுமே ஒரு அடிமையென, நெய்கின்ற கைகளில் தஞ்சம் புகுந்து ஜக்காட் பெட்டியை அதன் உலோக ஒலியை மன உரையாடலுக்குப் பின்னணி இசையாக மாற்றிவிடுவதன் மூலம் காட்டிக்கொடுத்துவிடுவதும் உண்டு. மஞ்சுவால் இரகசியம் காக்க முடியாது. மகிழ்வோ அழுகையோ அதனை வெளிப்படுத்தும் அனுமதியை உதடுகளும் கண்களும் அவளிடம் கேட்பதேயில்லை.

வீடு முழுக்க மதிய நேரத்தின் இருள் இறங்கியிருந்தது. மஞ்சு தறியடித்தபடி தனக்கு முதுகுகாட்டி அமர்ந்து இராட்டை சுற்றும் சற்குணத்தைப் பார்த்தாள். அவனது கழுத்துப்பகுதி இவளது பார்வையை உள்வாங்கி கூசி தாழ்ந்தது. கிழவன் மஞ்சள் பூசிய தேங்காய் மீது சாட்டையைப் பாம்பு போலச் சுற்றி வைத்துக்கொண்டிருந்தான். சற்குணம் வாழ்வின் முதன்முதலாக ஒரு இரகசிய உரையாடலின் எடையை அங்கே உணர்ந்துகொண்டிருந்தான். அவனது சீரற்ற மூச்சொலிகள் அவன் உள்ளம் பதறுவதைச் சொற்களாக எதிரொலித்துக் கொண்டிருந்தன. எந்த இரகசியமும் இல்லாமல் இதற்குமுன் அங்கே திரிந்துகொண்டிருந்த சற்குணத்தை இப்போது எண்ணும்போது இறகைப் போல மென்மையான உணர்வெழுந்தது. மஞ்சுவின் கண்களை எதிர்கொள்வதைப் பற்றி எண்ணும் போதே அடிவயிறு கூசியது. ஆனால் அதே நேரத்தில் உடல் முழுவதும் இலக்கேயின்றி ஓடும்போது நிகழ்கின்ற திளைப்பு பொங்கிக்கொண்டேயிருந்தது. சிறிய குச்சிகளில் எச்சில்தொட்டு ஒட்ட வைக்கின்ற நூலின் முதல்முனையைப் போல மஞ்சுவின் நிர்வாணத்தின் மீதான ஞாபகங்களைத் திரும்பத் திரும்பத் திறக்கும்போதெல்லாம் மெல்லிய அச்சமும் குறுகுறுப்பும் சேர்ந்துகொள்கின்றன.

இரண்டு விரல்களுக்கு நடுவே மெல்லிய நூல் நீரைப்போல ஓடியபடி சிறிய குச்சியில் சுற்றிக்கொண்டிருந்தது. சற்குணம் அதையே பார்த்தான். சக்கரத்தின் சீரான சுழற்றலின் வழியே அந்த நூல்நதி குச்சியின் மீது சிட்டுக்குருவியின் உடலைப்போல ஊதிப்பெருத்தபடி வந்தது. அவனது முதுகுப்பரப்பில் மஞ்சுவின் கண்கள் நடந்துகொண்டிருப்பதை ஸ்தூலமாகவே உணர முடிந்தது. சட்டெனத் திரும்பி அவளை ஒருமுறை நேர்கொண்டு பார்த்துவிடலாம் என்கிற அவஸ்தையோடு, அப்படிப் பார்க்கும்போது அந்த மெல்லிய இருளுக்குள் நீரைப்போல ஜ்வலிக்கும் அவ்வளது கண்கள் தன்னிடம் கூசக்கூச எங்கேயோ வருடாமல் விடாது என்பதையும் சேர்த்து நினைத்து, ஒவ்வொரு முறையும் வியர்வை பொங்கி நனைக்க தளர்ந்துபோய் அமர்ந்திருந்தான். பிடறி மயிர்க்கற்றைக்குள்ளிருந்து வழிகின்ற வியர்வைக்கோட்டைத் துல்லியமாகப் பார்த்தபடி தறி மிதித்தவாறே மீண்டும் புன்னகைத்துக்கொண்டாள் மஞ்சு. உடைகளுக்கு உள்ளே அவனது உடல் கங்கைப்போல மலர்ந்துகொண்டிருப்பது தெரிந்தது. அந்த முதல்கனல் அளிக்கின்ற சித்திரவதையைத் தாளாமல் அவனது முகம் மேலும் மேலும் அல்லாடுவதைக் காண விரும்பினாள்.

வெற்றிலைச்சாறு கோடு வழிகின்ற உதட்டு விளிம்பைத் துடைத்தவாறு கிழவன் வெளியே சென்று அமர்ந்துகொண்டார். நல்ல வெயிலில் உடம்பு முழுக்க எழுகின்ற அரிப்பு நமைச்சலைச் சொறிந்தபடி வெயிலைப் பார்த்தவாறே அமர்ந்திருப்பது கிழவனுக்குத் தியானம் போல. மஞ்சு இரண்டாவது தடவையாக வீட்டிற்கு இழைத்த அவமானத்தை இந்த வெயிலின் மௌனத்தைப் பார்த்துப் பார்த்துத்தான் கரைத்தார். வண்டல் மணலைப்போல மயிர்கள் மென்மையாக விரடிக்கிடந்த அடிவயிற்றைக் கைவிரல்கள் சொறிந்துகொண்டன.

மஞ்சு தறியடிப்பதை நிறுத்தினாள். சட்டென திடுக்கிடும்படியான நிசப்தம் வீடு முழுக்க நிறைந்தது. ஜக்காட்பெட்டியின் கடைசி அதிர்வு வெண்கலக்குடத்து நீரில் இன்னமும் மெல்லிய வளையங்களாக அவிழ்ந்துகொண்டிருந்தது. சற்குணம் மேலும் ஒடுங்கியவனாக இராட்டைச் சக்கரத்தின் பிடியை இறுகப்பற்றிச் சுழற்றிக்கொண்டிருந்தான். மஞ்சுவிற்குத் தறியை, அந்த ஆயிரக்கணக்கான போக்ஸ் கம்பிகளால் இசைக்கப்படுகின்ற இசைப்பெட்டியை இப்படிச் சட்டென நிறுத்தி, அந்த சப்தத்திற்குள் உறங்கிக்கிடக்கின்ற அந்தரங்கமானவைகளை அமைதியின் வெளிச்சத்திற்கு இழுத்து வருவது மிகப்பிடிக்கும். சதா சப்தங்களுக்குள் ஊர்ந்து வாழப் பழகிவிட்ட கிழவனையோ அம்மாவையோ எதற்கேனும் திட்ட விரும்பும்போதெல்லாம் அவள் தறியை நிறுத்திவிடுவாள். சட்டென உலகமே தலை குனிந்து அவர்களை உன்னித்துப் பார்ப்பதைப் போன்ற பிரமை அந்த நிசப்தத்திற்கு உண்டு. அதில் நீண்டநேரம் நிற்க அஞ்சியபடி மஞ்சுவின் எல்லாச் சொற்களுக்கும் தலையாட்டிவிட்டு அவர்கள் சென்றுவிடுவதுண்டு. இருளுக்குள் சிறிய வெளிச்ச முகங்களைப்போல பாத்திரங்கள் உறைந்திருந்தன. மஞ்சு தெம்பில் அன்னிய நீரைப் பருகுவதற்கு முன்பாக, தகவோரமாக அமர்ந்தபடி தன் பக்கம் முகம் திருப்பாத சற்குணத்தையே அளவிட்டாள். இன்னும் ஒன்றிரண்டு கோடுகள். பறவைக் குஞ்சு தன் முட்டையைத் தானே உடைத்து வெளி வருவதைப் போல சற்குணம் தனக்குள்ளாகவே நடந்து வெளிவர வேண்டிய பாதைகள் மிச்சமிருப்பது அவளுக்குத் தெரியும். அதன் முடிவில் வருகின்ற இறுக்கமும் விரிசல்களுமான சதுப்புநிலத்தில் அவள் கையில் செம்போடு நின்றுகொண்டிருக்கிறாள்.

**சக்கரத்தின் சீரான சுழற்றலின் வழியே அந்த நூல்நதி குச்சியின் மீது சிட்டுக்குருவியின் உடலைப்போல ஊதிப்பெருத்தபடி வந்தது. அவனது முதுகுப்பரப்பில் மஞ்சுவின் கண்கள் நடந்துகொண்டிருப்பதை ஸ்தூலமாகவே உணர முடிந்தது.**

சக்கரம் சுழற்றுகின்ற தனது கையில் உடைகளின் விளிம்புகள் உரச நடந்தபடி புழக்கடைக்குச் செல்கின்ற மஞ்சுவை நிமிர அஞ்சினான் சற்குணம். நினைக்கும்போதே மூச்சடைக்கச் செய்கின்ற மாபெரும் விளையாட்டிற்குள் தனது முதுகைப் பிடித்து யாரோ தள்ளுவதுபோல ஒரு பதற்றம். புழக்கடைக்குச் செல்கின்ற பாதை முழுவதும் திரண்டிருந்த இருட்டிற்குள் நடந்து சென்றுகொண்டிருந்தாள். உடைகளின் நிறம்கூட தெரியாத இருட்டிற்குள் அவளது உடலை இன்னும் துல்லியமாக யோசிக்க முடிந்தது சற்குணத்திற்கு. ஒருமுறை நிர்வாணம் கண்டபிறகு உடை என்பது சம்பிரதாயக் கதவு. புழக்கடை கிணற்றடியில் போய் சேருமிடத்தில் நல்ல வெளிச்சம் இருந்தது. இருட்டுக்குள் நடந்து அவள் வெளிச்சத்திற்குள் நுழைகையில் ஏதோ வேறு ஊரில் நிற்பவளைப் போலிருந்தாள். சித்திரைத் திருவிழாவிற்கு வந்திருந்த சங்கர், முகக்கண்ணாடியைச் சுவர் ஆணியில் தொங்கவிட்டபடி, தனது இளநரைகளைத் தேடித்தேடி வெட்டிக்கொண்டிருந்தான். சங்கர் முடியைக் கத்தரித்தபடி அவளிடம் ஏதோ வினவினான்.

எப்போதாவது வீட்டிற்கு வருபவர்களுக்கு மட்டுமே சட்டென அந்த வீட்டில் இவ்வளவு நாள் யாராலும் கவனிக்கப்படாமல், படுபச்சையாகத் திறந்துகிடக்கும் பிழைகள் கண்ணிற்குப் படும். சங்கர் சற்குணத்திற்குக் கேட்காத குரலில் மஞ்சுவிடம் சௌராஷ்டிரா பாஷையில் உறுமினான், 'இவனுக்கு இன்னமும் ராட்டை சுத்தற ஆசை போகலியா? வயசு என்னாச்சு! ஊர் பேசற கதையெல்லாம் போதாதுன்னு இவன் வேறயா?'

மஞ்சு தலைமுடியில் வாடிப்போய் சிக்கியிருந்த கனகாம்பரத்தை ஹேர்பின்னோடு அவஸ்தையாக இழுத்தபடி, 'ஆயிரம் பேசுவானுக. ஒவ்வொருவாட்டியும் அவனுகளுக்காக ஒவ்வொன்னயா நெருப்புல போட முடியாது.'

'உனக்கு விளையாட்டாத் தெரியுது. உங்கதை பத்து தூண் சந்துல புட்டா விக்குற ஒவ்வொரு கடையா சிரிக்குது தெரியுமா?'

'எதைத்தான் பேசலை அவனுக. பீ வண்டுகணக்கா உருட்ட எதுனாச்சும் வேணும்ல..'

கத்தரிப்பதை நிறுத்திய விரலோடு, முகக்கண்ணாடி வழியே அவளைப்பார்த்தான் சங்கர்.

'நீ யோக்கியமாக்கும்?'

இந்தக் குரலைக் கேட்டவுடன் சங்கரின் முதுகுப் பரப்பை இலேசான அதிர்ச்சியும் அழுகையுமாக ஏறிட்டாள். இதைக் கேட்கும்போது அவனது முகம் எப்படியிருக்கின்றது என்பதை அறிய விரும்புகின்ற வெறி கிளம்பியது. சட்டென முகக்கண்ணாடிக்குள் அவனது கண்களைப் பார்த்தாள். ஒரு சிறிய தடுப்பைப்போல முகக்கண்ணாடி இருவருக்கும் நடுவே இருந்தது.

'நா யோக்கியந்தான். அவனுகதான் இல்ல.'

சொல்லும்போதே அவளுக்குள் உறுதியும் அழுகையும் கூடிவந்தது.

அந்த அழுகையைக் கண்டவுடன் சங்கரின் முகத்தில் நிம்மதியான ஒரு புன்னகை வந்தது.

அம்மா ஊருக்குப் போயிருந்தாள். இரண்டு நாட்கள் கிழவன் வீட்டில்தான் சற்குணத்திற்குச் சாப்பாடு தூக்கம் எல்லாமும். தறிக்குக் கீழே துண்டு அகல இடத்தில் எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்தனர். ஜன்னலின் ஒற்றைக்கதவின் வழியே விழுந்த தெரு வெளிச்சத்தில் தறியின் நூற்கற்றைகள் இருளுக்குள்ளிருந்து வண்ணத்திற்குச் சென்றுகொண்டிருந்தன. வெளியே சச்சாளியின் நீர்ப்பெருக்கின்மீது பன்றிகள் மகிழ்ந்து உழல்கின்ற சப்தங்கள். குறைவான சப்தத்தில் ரேடியோ இன்னமும் பாடிக்கொண்டிருந்தது. மஞ்சு கண்களை மென்மையாக மூடியபடி நெற்றியைச் சுருக்கிக்கொண்டு அந்தப் பாடலின் ராகத்தினைத் தொண்டைக்குள் அமைதியாக ஒத்திசைந்து நிகழ்த்திக்கொண்டிருந்தாள். ஒரு புகையைப்போலத் தன்னுடைய ஞாபகத்தை எங்கெங்கோ அவள் கரைத்துக்கொண்டிருக்க வேண்டும். சற்குணத்தின் அருகே படுத்திருந்த சங்கரின் இடம் காலியாக இருந்தது. அவன் சிகரெட் தேடி பஸ் ஸ்டாப்பிற்குச் சென்றிருந்தான். அவனது தலையணையின் மீது மஞ்சுவின் வலது கை சாயமிழந்த வளையல்களோடு வெறுமனே கிடந்தது.

தறியடிக்கும் கைகளுக்கேயுரிய காய்ப்புகளைத் தனக்குள் திக்கித்திக்கி வாங்கிக்கொண்டிருக்கும் அந்தக் கையின் மீது அவள்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்நிகர் உலகிற்குள் காதலை ஒளித்து வைக்கும் பெண்கள்



அராத்து

ஆணும் பெண்ணும் ஈர்க்கப்பட்டு, கசிந்துருகி இந்தக் கேடுகெட்ட உலகில் இருந்து விலகி, தனியான ஒரு சொர்க்க லோகத்தில் மிதக்கும் நிலைதான் காதல். வாழ்வில் எப்பாலருக்கும் மிக மிக அற்புதமான தருணம் காதலில் இருக்கும் தருணம்தான். இவ்வளவு சிறப்பான ஒரு நிலை நீடிக்கவேண்டும் என்றுதானே அனைவரும் விரும்புவார்கள்? ஆனால், ஏன் பெரும்பாலானோர்க்கு நீடிப்பதில்லை? இந்த அற்புத நிலையைக் கெடுத்துக்கொள்வதில் ஆண் - பெண் இருவருக்கும் பங்கிருக்கிறது என்றாலும், பெண்களின் கைங்கர்யத்தைப் பார்ப்போம் ஆயிரம் இருந்தாலும் நான் ஆண்தானே எங்கள் தரப்பிலிருந்துதானே பேசுகிறேன்!

நாம் அனைவரும் ஒவ்வொருவருக்கும் ஒரு முகம் காட்டுவோம் என்றாலும், மொத்தமாக வேறு மனிதராக மாறுவதில்லை. ஆனால், பெண்கள் காதலில் நுழைந்ததும் ஒரு புத்தம்புது நபராகப் புது அவதாரம் எடுக்கிறார்கள். இந்த அவதாரம் அவர்களுடைய காதலர்களுக்குத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. இவர்களும் வெளிப்படுத்தமாட்டார்கள்.

இப்படி ஒவ்வொரு பெண்ணும் புது அவதாரம் எடுப்பது மட்டுமல்லாமல் அவளுடைய காதலுக்கென ஒரு புது 'விர்ச்சுவல் வேல்ட்' (மெய்நிகர் உலகு) ஒன்றையும் படைக்கிறாள். அந்த உலகுக்கான சட்டத் திட்டங்களை அவளே எழுதுகிறாள். முதலில் அன்புடனும் காதலுடனும் அந்தச் சட்டங்களை அவனுக்குப் பயிற்றுவிக்கிறாள். காதல் மயக்கத்தில் கள்ளுண்டவன்போல மயங்கிக் கிடக்கும் இவன் அப்போதைக்கு அவள் சொல்லுவதற்கு எல்லாம் தலையாட்டிவிட்டு, பிறகு அந்த அபத்தமான சட்டங்களை மீறும்போது அவள் 'தேவதை' அவதாரத்திலிருந்து 'ராட்சஷி' அவதாரத்திற்கு நகர்கிறாள்!

இதெல்லாம் காலங்காலமாக நடக்கும் கதைதானே! இப்போது ஏன் இவ்வளவு மோசமாக ஆண் - பெண் உறவு சிக்கலாகியிருக்கிறது என்றுதானே கேட்கவருகிறீர்கள்!

மொபைல், ஆன்லைன் வருவதற்கு முன்பும் இதேபோல, பல அபத்த விதிமுறைகளைப் பெண் வகுத்து, செயல்படுத்திவந்தாலும், அவை ஓரளவு கட்டுக்குள் இருந்தன. இந்த நவீன கண்டுபிடிப்புகள் இன்றைய யுவதிகள் மென்மேலும் படு அபத்தமான விதிமுறைகளை காதலில் வகுத்துக்கொள்ள உதவுவதோடு, தங்களது அபத்தமான 'வெர்சுவல் உலகு'க்குள் அவர்களை மேலும் வசதியாக வாழ வகுக்கின்றன என்பதும், உறவு சிக்கலாக இவையும் முக்கியமான காரணம் என்பதுமே இன்றைய பிரச்சினை!

எனக்குத் தெரிந்த என்னுடன் பழகிய சில காதலர்கள் அடிக்கும் கூத்துகளை உதாரணமாகத் தருகிறேன்.

1) தினமும் காலையில் எழுந்த அடுத்த கணம் இருவரும் செல்ஃபி எடுத்து ஒருவருக்கொருவர் அனுப்பிக்கொள்ளவேண்டும். 133ஆவது செல்ஃபிக்கு மேல் இருவரும் அனுப்பிக்கொள்ளத் தேவையில்லாமல் ஆனது.

2) இருவரும் காணொலி அழைப்பு (வீடியோ கோல்) செய்து பேசி முடித்துவிட்டு, அதை துண்டிக்காமல் வைத்துக்கொண்டே தூங்கவேண்டும்.

3) தினமும் அவளுக்கு ஒரு செல்லப்பெயர் வைத்து அனுப்பவேண்டும். அன்று முழுக்க அவளை அப்படியே கூப்பிடவேண்டும்.

4) போன் பேசி முடித்துவிட்டு வேறு வேலை பார்த்தால் போச்சு. அடுத்த கணம் தாக்கீது வந்துவிடும். இரண்டு மணி நேரம் போன் பேசி முடித்தாலும், அடுத்து தொடர்ந்து வாட்ஸப்பில் ஒரு மணி நேரம் டெக்ஸ்டிங் செய்துவிட்டு, பிறகு மெசேஞ்சரில் ஏதேனும் லிங்க் - புகைப்படம் பகிர்ந்துவிட்டு, கடைசியாக வேறு ஏதேனும் செயலி மூலம் வேறு ஏதேனும் பூவோ, வாழ்த்து அட்டையோ அனுப்பிவிட்டு, கடைசியாக வாய்ஸ் மெசேஜ் அனுப்பி, இப்படியே ஓட்டிக்கொண்டு இருக்கவேண்டும். இல்லையெனில் பிரச்சினை வேறு விதங்களில் பூதாகரமாக உருவெடுக்கும்.

5) எல்லாவற்றையும்விட ஆபத்து இது, ஆம்... ஈமெயில், ஃபேஸ்புக் போன்றவற்றின் கடவுச் சொற்களைப் பகிர்ந்துகொள்ளவேண்டும்.

இதைப்போல ஆன்லைன் வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர்களால், இப்படியான பிணைப்பிறுக்கத்தை உண்மை வாழ்வில் கொண்டுவர முடியாததால், தடுமாறுகிறார்கள்.

டெக்ஸ்டிங்கில் முழுவதுமாகவே இதுதான் மொழியாக இருக்கவேண்டும்: 'செல்லக்குட்டி', 'என் தங்கமே', 'அழகுக்குட்டி', 'என் தேவதை'.

இப்படியெல்லாம் செல்பேசியில் சகஜமாகத் தட்டிவிடும் ஆண்களுக்கு நேரிலும், எல்லா நேரத்திலும் பெண் இதையே எதிர்பார்க்கும்போது நாக்கு தாவாங்கட்டை தட்டிவிடும்.

ஆண்களைவிடத் தற்காலப் பெண்களுக்கு மொபைல் காதல் மற்றும் மொபைல் காமம் மிகவும் பிடித்திருக்கிறது என்பது என் அனுமானம். செல்பேசியில் அவர்களால் தங்கள் அழகைக் கூட்டிக்காட்ட முடிகிறது, மொபைலில் அவர்கள் உருவத்தை அவர்கள் விரும்பும் வகையில் வடிவமைத்துக்கொள்ள முடிகிறது. அப்படியே காதலையும் தன் விருப்பம்போல ஓர் உலகுக்குள் வைத்துக்கொள்ள முடியும் என்று நம்புகிறார்கள்.

இப்படி மெய்நிகர் உலகில் காதலை வளர்த்துக்கொண்டிருந்துவிட்டு, நேரில் சந்திக்கும்போது நிழலுக்கும் உண்மைக்கும் இடையில் ஏற்படும் இடைவெளியைத் தாங்கிக்கொள்ள முடியாமல், மெய்நிகர் சண்டையில் தொடங்கும் போர் உண்மை உலகுக்கு இடம் மாறும்போது எல்லாக் கணக்குகளும் மாறுகின்றன.

காதலில் இருக்கும் இணைகள் நேரில் சந்திக்கையில் ஏற்படும் முக்கியமான பிரச்சினை என்னவெனில், கவனிப்பது!

காதலன் பேசுகையில், உம் கொட்டிக்கொண்டே, மொபைலை நோண்டுவது, அவன் பேசுவதற்கு ஒரு சிறு பதில்கூட சொல்லாமல் இருப்பது, அதற்கு ஒரு முகவசைவின் மூலம் ஒரு சின்ன அக்னாலேஜ்மென்ட்கூட கொடுக்காமல், அடுத்து ஏதோ ஒரு மேட்டருக்குத் தாவும் பெண்கள், தாங்கள் பேசும்போது மட்டும், ஆணுடைய முழுமையான கவனத்தைக் கோருகிறார்கள்.

அப்புறம் இன்னொன்று, ஆண்களின் பார்வையில் நாளுக்கு நாள் பெண்களின் உலகம் சுவாரசியமற்றதாகிப்போகிறது. அதாவது காதலனுக்கு அந்தக் காதலி மட்டுமே கவர்ச்சிகரமானவள். அவள் சார்ந்த மற்ற விஷயங்கள் - அது பெரும்பாலும் செக்குமாடுபோல ஒரே விஷயத்தைச் சுற்றுவதால் - சுவாரசியமற்றவை. ஆனால், அவளோ தன்னைப் போலவே தான் சார்ந்த அனைத்து விஷயங்களுமே சுவாரசியமானவை என்று நம்புகிறாள். தான் சார்ந்த அனைத்து விஷயங்களையுமே காதலன் சுவாரசியமாக கவனம் கொடுத்துக் கேட்கவேண்டும்; அவன் கவனிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள்.

அவள் தன் உறவினர்கள், அலுவலகத்தில் நடந்த உப்பு பொறாதது என எதுவாக இருந்தாலும் தேவதை நாற்காலியில் அமர்ந்துகொண்டு, எக்ஸைட்டிங்காக விவரிக்கும்போது நம் ஆளுக்குத் தூக்கம் வருகிறது. சுவாரசியமற்றவற்றைக் கவனிக்காத இந்த ஆண்களின் தன்மையைத்தான் பெண்கள் 'கேரிங் இல்லை' என அடையாளப்படுத்துகிறார்கள்.

ஆண் - பெண் வேறுபாட்டில் முக்கியமான ஒன்றையும் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியிருக்கிறது. காதலில் இருவர் இருக்கையில் ஏற்படும் மோதலில் இது ஒரு முக்கியமான காரணம் வகிக்கிறது.

ஆண் காதலில் இருக்கும்போது இன்னொரு பெண்ணை, 'நீ அழகாக இருக்கிறாய்!' என்று சொல்வது காதலிக்குக் கொலை வெறியை உண்டாக்கும். அவள் நான் எந்த அடுத்த ஆடவனையாவது 'ஹேண்ட்சம்மாக இருக்கிறாய் என்று சொல்லியிருக்கிறேனா!' என்று நியாயம் கேட்பாள். ஆனால் அவள், அவளை அழகாக இருக்கிறாய் என்று சொன்ன பல ஆடவர்களுக்கு 'தேங்க்யூ' என்று பதிலுரைத்திருப்பாள்.

இரண்டும் ஒன்றுதான் என்று அவளுக்குப் புரிவதே இல்லை. ஆண்களால் இதை எடுத்துச் சொல்லவே முடிவதில்லை.

அதேபோல, தன்னுடைய கடந்த கால வாழ்வை ஆண்கள் சொல்லும்போது தங்களை 'அக்யூஸ்ட்' போலவே சித்திரித்துக்கொள்வதில் வல்லவர்கள். அவர்கள் அப்படிச் சொல்லவில்லையெனினும் அவர்கள் அதைச் சொல்லுகையில் ஒரு கிரிமினலிடம் ஸ்டேட்மென்ட் வாங்கிக்கொள்வதைப் போலவே வாங்கிக்கொள்வதில் பெண்கள் வல்லவர்கள்.

இதற்கு நேர் மாறாக, பெண்கள் எப்போதும் தங்கள் கடந்த கால வாழ்க்கையைச் சொல்லுகையில் ஓர் அபலைபோலவோ, அப்பாவிபோலவோ சொல்வதில் கை தேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதிலும் ஒன்றுமே தெரியாதவர்கள்போலவும், தங்களுக்கும் அதற்கும் சம்மந்தமே இல்லாதது போலவும் சொல்லுவார்கள். இதை நம்பத் தலைப்படும் நிலையில்தான் பெரும்பாலான ஆண்கள் இருப்பார்கள். ஆனால் காதலின் தேன்நிலவு முடியும்போது இந்தப் பழங்கதைகள் பூதாகரமாக உருவெடுக்கும். அப்போது கையாள முடியாத அளவுக்கு எல்லாம் கைமீறி போயிருக்கும்.

காதல் என்பது இருவருக்கும் பொதுவானது என்பதையும் பெண்கள் உணருவதில்லை. தங்களின் நகைபோல, தாங்கள் வளர்க்கும் நாய்போல், தங்களின் காதலையும் கருதிக்கொள்கிறார்கள். அந்தக் காதலில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மெய்நிகர்...

காதலன் என்ற கதாபாத்திரம் தேவை என்பதால் அங்கு காதலன் இடம்பெறுகிறான், அவ்வளவுதான். அது அவர்க ளின் காதல். இருவரின் காதல் அல்ல.

காதல் நன்றாக இருக்கும் போது பெண்களிடம் பெரிய பிரச்சனை இல்லை. அதில் ஒரு சிறு கீறல் விழும்போது பெண்கள் ஒட்டுமொத்தமாக ஆண்களை நிராகரித்தும், மொத்த வாழ்வை நிராகரித்தும் பேசும் இடத் துக்குச் சென்று விடுகி றார்கள். அதுவரையிலான வாழ்வுக்கு சிறு நியாயத் தைக்கூட அவர்கள் வழங்கு வதில்லை. பல பிரேக் அப் கள் கதை இதுதான். 'அவள் ஏன் பிரேக் அப் செய்தாள் என்ற காரணம்கூட எனக்குத் தெரி யாது' என்பார்கள் பல ஆண்கள்.

பெண்கள் துண்டித்துவிடுவ தில் வல்லவர்கள். இதில் அவர்கள் தேர்ந்த சைக்கியாட் ரிஸ்ட்போல செயலப்டுவார் கள். நுட்பமாக செயல்பட்டு கத்தரித்துவிடுவார்கள். தவறான துணையைத் தவறாக தேர்ந்தெடுத்து இருக்கலாம். அதை கத்தரித்துவிடுவதில் தவறே இல்லை. ஆனால் நேர்மையாக, இன்ன காரணம் என்று சொல்லி துண்டித்துவிடு வதில் என்ன சிக்கல்? இந்தக் கேள்வி பல ஆண்களுக்கு உண்டு.

ஈருடல் ஒருயிர் என்றெல் லாம் அளவுக்கதிகமாக காதல் வயப்படும் அதே பெண்தான் இப்படியும் இருக்கிறாள். இதில் ஆண்களை நான் புனி தப்படுத்தவில்லை. ஆனால், பெண்களைப் போல காதலை முறிக்கும்போது இப்படி புதிர்த்தன்மையுடன் ஆண்கள் செயல்படுவ தில்லை.

இந்தப் புதிர்த்தன்மைக்கு இந்தத் தொழில்நுட்ப யுகம் மேலும் வலு சேர்த்தி ருக்கிறது. அதாவது, பெண்கள் தாங் களாக வடிமைத்துக்கொள்ள விரும்பும் கற்பனை உல கத்தை உண்மையான உலகம் என்று அவர்களே முழுமையாக நம்பு வதற்கேற்ற சாத்தியங்களை இது கூடுதல் ஆக்கியி ருக்கிறது. விளைவாக, உயிருள்ள இணையைவிட உயிரற்ற இடத்தில் உள்ள இணை முக்கியத்துவம் பெறுகிறது.

இது பெரிய சந்தோஷத் தைக்கூடத் தரலாம். ஆனால், அந்த சந்தோஷம் எவ்வளவு நாட்கள் இடம் என்பதுதான் கேள்வி. ஏன் சகல பல-பலவீனங்களோடு ஓர் உயிரை நம்மால் இயல்பாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை என் பதுதான் கேள்வி. அப்படி யென்றால், இந்தக் காதல் உண் மையாகவே காதல்தானா என்பதே கேள்வி!

# ஒரே வேலையில் தொடர்கிறீர்களா? ஆபத்து!

சிறிதர்.எஸ்

தனியார் நிறுவனங்களில் வேலைக்குச் சேரும் இளைஞர், யுவதிகள் தொடர்ந்து பதவி உயர்வை நாடுகிறார்கள். பதவி மற்றும் சம்பள உயர்வு நோக்கித் தங்கள் உழைப்பைச் செலுத்துகிறார்கள். பதவி, சம்பள உயர்வு இல்லாவிடிலும் தாங்கள் செய்யும் பணியிலாவது மாறுதல்கள், வித்தியாசங்கள் வேண்டும் என்று ஆவலுறு கிறார்கள். அப்படி எதற்கும் ஆசைப்படாமல், 'இருக்கும் வேலையேபோதும், அதற்கு வரும் சம்பளமேபோதும்!' என்று வாழ்வது இன்றைய சூழலில் ஒரு ஜென் மன நிலை. பெரிய ரிஸ்க் எதுவும் இல்லாமல் வாழ்க்கையை ஓட்டிவிடலாம் என்ற பாதுகாப்பு மனநிலையும்கூட அது!

ஆனால், இதுதான் இன்று உள்ளதிலேயே மிகப் பெரிய ஆபத்து என்பதுதான் இங்கே நாம் புரிந்துகொள்ள வேண்டிய விஷயம்.

**அப்படி என்ன ஆபத்து?**

முன்னெப்போதையும்விட காலமும் பணிச் சூழலும் வேகமாக இன்று மாறுகின்றன. ஒரே வேலையில் பத்து வருடங்களாக ஒருவர் பணிபுரிகிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்படித் தொடர்ந்து செய்துவருவதால் அவர் சம்பளம் பெரிய அளவு அதிகரிக்காது. ஆண் டாண்டு வெறும் 5% அதிகரித்து வருகிறது என்றே வைத்துக்கொண்டாலும், அவர் சம்பளம் 36 ஆயி ரத்தை மட்டுமே தொட்டிருக்கும். ஆனால், அப் போது அதே வேலைக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டி இருப்பது குறித்து நிறுவன மேலாண்மை கவலையுறத் தொடங்கியிருக்கும்.

அடுத்த பத்தாண்டுகளில் ஒரு கணினி மென் பொருள் மூலமோ அல்லது வேறு ஏதாவது தானியங்கி வழி முறை மூலமோ அவர் செய்து வந்த வேலையையே எந்த மனித உழைப்பும் இன்றிச் செய்துவிட வழி முறைகள் தோன்றிவிடலாம். அப்போது சம்பந்தப் பட்டவர் வேலை இழக்க வேண்டி வரலாம். தவிர, ஒரே வேலையைப் பத்து ஆண்டுகள் தொடர்ந்து செய்துவருவது ஒருவித சிந்தனைக் களைப்பை உருவாக்கலாம். அது அந்த வேலையின் தரத்தையும் பாதிக்கக்கூடும்.

அதற்காக இரண்டு வருடத்துக்கு ஒரு முறை நிறுவனம் மாற வேண்டுமா என்ற கேள்வி வரலாம். இங்கே நாம் பேசுவது செய்யும் வேலையில் மாறு தல்கள், புதிய சவால்கள், வேலையின் தரத்தை உயர்த் துதல் போன்றவை தொடர்பில்தான். அதற்கு நிறுவனம் மாற வேண்டிய அவசியம் இருக்காது. இருக்கும் நிறு வனத்துக்கு உள்ளேயே வேறு சவால்களைத் தேடலாம் அல்லது நாம் செய்யும் வேலையை எப்படி சவாலாக் குவது என்று ஆராயலாம்.

அதனால் என்ன பயன்? அப்படித் தேடுவதன் மூலம் நமது வாழ்வு சுவாரசியமாக ஆகும் என்பதுதான் முக் கிய பயன். அதைத் தாண்டியும் பல பயன்கள் உள்ளன. அலுவலகத்தில் உங்களைப் பற்றிய பிம்பம் உயரும். இவர் புதிய சவால்களுக்கு நிறுவனத்துடன் துணை நிற் கிறார் என்று எண்ணம் உண்டாகும். புதிய பொறுப்புடன் புதிய கற்றல்கள்கூடும். வேறு துறையில் வேறு சவாலான ஒரு தேவை எழுந்தால் அங்கே நமது பெயர் நினைவுக்கு வருமளவு புகழ் பரவும். இப்படி எல்லாம் நிறுவனத் துக்குப் பயனுள்ள அளவு இருப்பவருக்கு ஊதி யமும் பன்மடங்கு உயரும் என்பதைத் தனியாக சொல்லவும் வேண்டுமா என்ன?

**கொஞ்சம் சிந்தியுங்கள்**

இதெல்லாம் ஒருபுறம் இருக்க, கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்; நமக்கு இருப்பது ஒரே ஒரு வாழ்க்கைதான். மறு ஜென்மத்தைப் பற்றியெல்லாம் மதங்கள் பேசினாலும் அப்படியெல்லாம் ஒன்று இருக்கிறதா என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. நமக்குத் தெரிந்த ஒன்று இப்போது நாம் வாழும் வாழ்வுதான். அதனை எத்தனை சுவா ரசியமாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதைத்தானே நாம் யோசிக்கவேண்டும்?

நம் வேலை என்பது நமது வாழ்வின் அதிமுக்கிய அங் கம். வாழ்வில் மூன்றில் ஒரு பங்கை நமது வேலையில் தான் செலவிடுகிறோம். நமது வாழ்வு சுவாரசியமாக அமைய வேண்டுமெனில் நமது வேலை சுவாரசியமாக அமைவது அவசியம்தானே? இங்கே சவால் கள் இன்றி சுவாரசியம் ஏது?

எனவே, உங்களுடைய தற்போதைய வேலையைத் தொடர்ந்து மீள் மதிப்பீடு செய்துகொண்டே இருங்கள். அப்படிச் செய்வதற்கு பின்வரும் கேள்விகளை நீங்களே கேட்டுக் கொண்டு அதற்கான பதில்களைத் தேட வேண் டியது அவசியம். இதுதான் உங்களைப் பாதுகாப்பாகவும் உணர வைக்கும்.

இந்த வேலையை என்னைவிடத் திறன் குறைவான வேறு யாராவது சுலபமாகச் செய்துவிட முடியுமா?

இந்த வேலையை என்னைவிட அனுபவம் அல்லது படிப்புக் குறைவான வேறு யாராவது சுலபமாகச் செய்து விட முடியுமா?

இந்த வேலையை ஒரு கணினியோ அல்லது வேறு ஏதாவது தானியங்கி இயந்திரமோ நான் செய்வது போன்ற திறனுடன் முடித்துவிடுமா? அப்படி ஏதாவது மென்பொ ருள்கள் சந்தையில் கிடைக்கின்றனவா அல்லது ஆய்வில் இருக்கின்றனவா?

இந்த வேலையைச் செய்ய நான் எடுத்துக்கொள்ளும் நேரத்தைவிடக் குறைவான நேரத்தில் செய்து முடிக்கும் வழிமுறைகள் ஏதேனும் உள்ளனவா? டெம்ப்ளேட்கள், மென்பொருட்கள், இத்யாதி...

இந்த வேலைக்கான அவசியம் என் நிறுவனத்துக்கு எவ்வளவு காலம் நீடிக்கும்? இந்த வேலையே தேவைப் படாது என்ற நிலை வருங்காலத்தில் ஏற்படுமா? அப் போது எனக்கு சீட்டு கிழியுமா?



இப்படிப்பட்ட கேள்விகளுக்கு உங்களுக்குச் சில விடை கள் கிடைக்கக் கூடும். அது உங்களுடைய வேலை யின் எதிர்காலம் குறித்து உங்களுக்கே ஒரு சித்திரத்தை வழங்கக் கூடும்.

**இரு வாய்ப்புகள்**

சந்தையில் கிடைக்கும் ஒரு மென்பொருள் அந்த வேலையைச் சரியாக செய்து கொடுக்கும் என்று தெரிய வரலாம். அப்போது என்ன செய்வீர்கள்? 'கடவுளே, இந்த மென்பொருள் குறித்து என் மேலதிகாரிக்குத் தெரிய வரவே கூடாது!' என்று தினமும் சாமியிடம் வேண்டிக் கொள்வீர்களா? அல்லது நேரடியாக உங்கள் முகாமையா ளரிடம் போய் 'இப்படி ஒரு மென்பொருள் குறித்துப் படித்தேன். அதன் மூலம் நமது செலவைக் குறைக்க முடி யும். அதனை நாம் நமது நிறுவனத்துக்கு பரீட்சித் துப்பார்க்கலாமா?' என்று கேட்பீர்களா?

நான் இரண்டாவதைத்தான் செய்யவேண்டும் என்று பரிந்துரைக்கிறேன். முதலாவது வீணான செயல்; அதீத மன அழுத்தம் கொடுப்பதும்கூட. இரண்டாவது தன்னம் பிக்கை நிறைந்த செயல். அப்படி நீங்கள் பரிந்துரைத்து உங்கள் நிறுவனம் அந்த மென்பொருளை வாங்கி அதன் மூலம் உங்கள் வேலையைத் தானியங்கியாக மாற்றிவிட்டால் உங்களை வேலையை விட்டுத் தூக்கி விடுவார்களா? கண்டிப்பாக மாட்டார்கள். காரணம், அப்படி நிறுவனம் நிதியை சேமிக்க உதவியதே நீங்கள் தான் என்பதால் உங்களை வேறு துறைக்கு மாற்றி அங் கேயும் இது போன்ற தானியங்கி தீர்வுகளை கண்டு பிடித்துக் கொடு என்று கேட்பார்கள்.

அப்படி நீங்கள் செய்வதற்கு உங்களுக்கு சம்பளமும், பதவியும்கூட உயரலாம். சம்பளம் அதிகரிக்கும்போது உங்கள் சவால்கள் அதிகரிக்கும். வாழ்க்கை சுவாரசியமாக மாறும்.

வாழ்வில் சுவாரஸ்யம் கூடுவதற்கும், வெற்றி சேருவ தற்கும் நமக்கு இருக்கும் தேர்வுகள் எளிமையானவை. வாழ்வதற்கும் சும்மா இருத்தலுக்கும் இடையில் சிறு வித்தியாசம்தான் இருக்கிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுத்துண்டு வாழ்வோம்!

இ.பொ.ஆண்டான்

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' இது ஔவையாா வாக்கு. திரவியம் என்பது செல்வத்தைக் குறிக்கும். கடல் கடந்து சென்றாவது செல்வத்தைத் தேடு என்பதே இவ்வாக்கியத்தின் பொருள். இந்த உலகில் செல்வம் இல்லாதவனை யாரும் மதிக்கமாட்டார்கள். எனவே செல்வத்தை ஈட்டவேண்டும் என்று பல அறிஞர்களும் உரைத்ததில் வியப்பொன்றுமில்லை.

செல்வம் நாம் வாழும் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது. இது முதலில் நாம் உயிர்வாழ்வதற்கும் உறைவதற்குமான காரியங்களில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. அதனால்தான் 'அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றார் வள்ளுவர். பணம் பத்தும் செய்யும் என்ற பழமொழியும் பரவலாகப் பேசப்படுகிறது.

ஒருவன் மிகுந்த ஒழுக்க சீலனாகவும் இறைபக்தி உடையவனாகவும் அறிவார்ந்த சிந்தனைகளை கொண்டவனாக இருந்தாலும் அவனிடம் செல்வக்குறை இருக்குமாயின் அவனை எவரும் மதிப்பதிலை. மாறாக பிழைக்கத்தெரியாதவன் என்று ஒரு புதிய பட்டத்தை அளிப்பார்கள்.

அதே நேரத்தில் அறிவற்றவனாகவும் கெட்ட மதி படைத்த மனிதனாக இருந்து அவனிடம் செல்வம் இருந்தது என்றால் அவனுடன் இனிமையாகப் பேசிப் பழகுவார்கள். அவனை தனது உறவினர், நண்பன் என்று சொல்வதிலே பெருமிதம் கொள்வார்கள். சாமர்த்தியசாலி என்றும் புகழ்வார்கள்.

அதனால் செல்வம் இந்த உலகிற்கு எவ்வளவு இன்றிமையாதது என்பது இதன்மூலம் தெளிவாகிறது.

சரி.. ஏதோ ஒரு வழியில் அறவழியிலோ வேறு வழியிலோ நாம் செல்வத்தை சோத்துவிட்டோம். இது முதல் பகுதி. இதன் அடுத்த பகுதி அந்த செல்வத்தை பயன்படுத்து விதத்தில் இருக்கிறது.


ஒருவருக்கு செல்வம் சேர்கிறது. அதை அவர் என்ன செய்வார்.. முதலில் தனக்கு கடன் இருந்தால் கடனை அடைப்பார். அடுத்து தனக்கு சொந்தமாக வீடுகட்டுவார். மேலும் நிலபுலன்கள் வாங்குவார். இன்னும்.. தனக்கு மாதமாதம் நிரந்தரமான ஒரு மாத வருமானத்திற்கான ஒரு வசதியை ஏற்படுத்திக் கொள்வார்.

இன்னும் செல்வம் சேர்ந்தால் மிகவும் ஆடம்பரமான வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறார். தனது அடுத்த தலைமுறைக்குமான சொத்தை சேமித்துவைக்கிறார். மேலும் மேலும் சேருவதை இப்படியாகவே அடுத்த அடுத்த தலைமுறைக்கு பயன்படுத்த எத்தனிக்கறார். இது எந்த வகையில் நியாயம்..?

இன்று பகல் உணவுக்கு வழியில்லாமல் எத்தனை குடும்பங்கள் கண்முன்னே தவிக்கிறது? இன்னும் 30 வருடங்கள் சென்று பிறக்கப்போகிற சந்ததிகளுக்கு சொத்து சேர்ப்பது சரியா?

வாழும் தலைமுறை வறுமையில் இருக்கிற போது வாராத தலைமுறைக்கு இப்போதே செல்வம் எதற்கு?

விரலுக்கு தகுந்த வீக்கம் என்பார்கள். அதாவது நமது உடலில் ஏதாவது ஒரு பகுதி அளவுக்கு மீறி தடித்திருந்தால் அதை யாரும் ஆரோக்கியமாக பாா்ப்பதில்லை. மாறாக நாம் என்ன சொல்கிறோம். ஏன் உடம்பு அதிகமாக பெருத்திருக்கிறது. மருத்துவமனை சென்று உடலை பரிசோதியுங்கள் என்கிறோம். மாறாக இளைத்திருந்தாலும் இதே வார்த்தையைத்தான் சொல்கிறோம்.



செல்வம், ஒருவரிடம் அதிகமாக சேர்ந்தால் அதுவும் ஒரு வகை நோய்தான். செல்வம் அதிகமாக சேரும்போது நம்மிடம் உள்ள செல்வச் செருக்கினால் துர்க்குணங்கள் இயற்கையாகவே தோன்றுகிறது. நம்முடைய அன்றாடப் பழக்க வழக்கங்கள் கட்டுப்பாடற்று போகிறது. கட்டுப்பாடு இழந்த எந்த ஒரு செயலும் நன்மையில் முடிவதில்லை. மாறாக அது நமக்கு தீங்கையே விளைவிக்கும். இன்னொன்றையும் நீங்கள் யோசிக்கவேண்டும் 2 தலைமுறைக்கு வேண்டிய பணத்தை நீங்கள் சம்பாதிப்பதால் வரும் எதிர் விளைவுகள் என்ன தெரியுமா?

நாம் வீட்டில் வளர்க்கும் கால்நடைகளை வீட்டிலே கட்டிப்போட்டு இரைபோடுவது ஆரோக்கியமல்ல. அது உடல் உழைப்போடு காலாற சென்று மேய்ந்து தன் வயிற்றை நிரப்பிக்கொள்வதுதான் ஆரோக்கியம். அது போல ஒவ்வொரு தலைமுறையும் அவரவர் காலத்தில் அவரவர்க்கு வேண்டிய செல்வத்தை அவரவர்களே ஈட்டிக் கொள்வது தானே நியாயம்.

தன் தந்தைதான் நிறை சொத்துக்கள் சேர்த்து வைத்திருக்கிறாரே நாம் ஏன் உழைக்க வேண்டும் என்ற எண்ணமே இங்கு, மேலோங்கும். மேலும் வறுமை என்றால் என்னவென்று தெரியாமல் வளர்ந்த பிள்ளைகளுக்கு பின்னாளில் ஏதேனும் துன்பம் நேருமாயின் அதைத்தாங்கிக் கொள்ளும் வலிமை இல்லாது போகும்.

செல்வந்தர்கள் தங்களுடைய வருங்காலச் சந்ததிகளின் உழைப்பை உறிஞ்சி அவர்களை சோம்பேறிகளாக்கி ஊதாரிகளாக்கும் பணிகளையே செய்கிறார்கள். பழங்காலத்தில் அரசன் கூட தனது பட்டத்து வாரிசுக்கு இளம் வயதிலே தனக்கு பிறகு இந்த நாட்டை ஆளுகிற வீரம் வேண்டும் என்பதற்காக போர்ப்பயிற்சிகளை அளித்து அவனைத் தயார் செய்கிறான்.

நமது வயல்வெளியில் காய்ந்து காய்ந்து தண்ணீர் பாய்ச்சப்படும் பயிர்கள்தாம் பின்னாளில் மிக செழிப்புடன்வரும். எப்போதும் தண்ணீர் தேங்கியே நிற்கும் பயிர்கள் நல்ல மகசூலை எட்டுவதில்லை. இது விஞ்ஞானப்பூர்வமான உண்மை. அது போலத்தான் நம் சந்ததிகளும். 3 தலைமுறைக்கு என நீங்கள் சம்பாதித்த செல்வத்தை ஒரே ஜென்மத்தில் அழித்துவிட்டு தெருவுக்கு வருகிறவாளும் இருக்கிறார்கள். அதனால் நாம் தேவைக்கு அதிகமான செல்வம் சேர்ப்பதால் தீங்கே நேரிடும்.

எப்படியோ(?) சம்பாதித்த செல்வத்தை சிலர் கணக்கு காட்டமுடியாமலும், வங்கியில் போடமுடியாமலும், வீட்டிலும் வைக்கமுடியாமலும் அல்லாடுகிறார்கள். இடம் இல்லாமல் எங்கெங்கோ கொண்டு பதுக்கி வைக்கிறார்கள். தனது ஆயுளுக்குப்பிறகு தான்சம்பாதித்த செல்வம் என்ன ஆகுமென்பதை யாறறிவார்?

வீணாக கடலுக்குப்போகும் மழைநீரை நிரந்தரமாக கால்வாய் அமைத்து விவசாயத்திற்கு பயன்படுத்தவேண்டும் என்ற கோரிக்கை வைக்கிறோம். அதேபோலத்தான் இதுவும்.

உபரியாக உள்ள செல்வங்கள் யாருக்கும் பயன்படாமல் போவதைக்காட்டிலும், எத்தனையோ பேர் அன்றாடம் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் தவிக்கிறார்கள்.. மேல் மருத்துவ சிகிச்சைக்காக எத்தனையோ ஏழை நோயாளிகள் பணம் இல்லாமல் உயிரை இழக்கிறார்கள்.. நல்ல திறமை இருந்தும் உயர் கல்வி கற்க முடியாமல் வாடுகிற மாணவர்கள்.. இப்படி எத்தனை பேர் இருக்கிறார்கள்.

உலகுக்கு தானம் அளிக்க விருப்பம் இல்லையெனில் முதலில் வறுமையில் இருக்கும் உங்கள் உடன் பிறந்தார்க்காவது உதவுங்கள். அடுத்து அதை உறவினருக்கென விரிவுபடுத்துங்கள்.. இன்னும் சற்று மேலே சென்று தான் பிறந்த ஊருக்கு நல்லது செய்யுங்கள்..

இப்படியாக ஆறுபோல் ஓடும் தங்கள் செல்வத்தை சமூகத்திற்கு பயன்படுகிறாற்போல் ஒரு கால்வாய் அளவிற்காவது செலவழிக்கலாமே?

இதுபோன்ற செயல்களை இன்றும் எத்தனையோ செல்வந்தர்கள், தொழில் அதிபர்கள் செய்து கொண்டு தானிருக்கிறார்கள். ஆனால் அதனுடைய சதவீத எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது.

தனக்கு மிஞ்சித்தானம் என்பார்கள். தனக்கு மிஞ்சியதை இந்த உலகுக்கு ஏதாவது ஒரு வகையில் பகிர்ந்தளிக்கலாமே.. இவ்வாறு தனது செல்வத்தை பகிர்ந்தளிப்பதால் இவ்வுலகமும் போற்றும் அவ்வுலகமும் போற்றும்.

**இன்று பகல் உணவுக்கு வழியில்லாமல் எத்தனை குடும்பங்கள் கண்முன்னே தவிக்கிறது? இன்னும் 30 வருடங்கள் சென்று பிறக்கப்போகிற சந்ததிகளுக்கு சொத்து சேர்ப்பது சரியா?வாழும் தலைமுறை வறுமையில் இருக்கிற போது வாராத தலைமுறைக்கு இப்போதே செல்வம் எதற்கு?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்காக இந்த ஒப்பந்தம்...?

சம்யுக்தா



1987ஆம் ஆண்டு ஆடி (ஜுலை) 29ஆம் திகதியன்று இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தத்தில் தமிழர் ஒரு தரப்பாகக் கையெழுத்திடவில்லை. வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் தற்காலிகமாக இணைக்கும் ஓர் ஏற்பாடு அதிலுண்டு. இந்த ஒப்பந்தத்தில் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்காக முன்வைக்கப்பட்ட இலங்கையின் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் சரியானது, தேவையற்றது என இருவேறுபட்ட வாதப்பிரதிவாதங்கள் தற்போது அதிகரித்திருக்கின்றன. ஒற்றையாட்சிக்குள் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று 6 வரையான தமிழ்க் கட்சிகளும் இல்லை அவ்வாறு தீர்வு காணமுடியாது என ஒரு கட்சியும் கூறுகின்றன. இந்தக் கட்சிகளுக்கிடையில் இந்த வாதம் வலுவடைந்து வருகிறது. இது மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. இந்த நிலைப்பாடு எச்சசொச்சமாகவுள்ள தமிழ்த் தேசியத்தையும் பலவீனப்படுத்திவிடவே வாய்ப்புண்டு.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 3 நாள்கள் கழித்து அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு என்பவர் உதயன் என்ற புனை பெயரில் "யாருக்காக இந்த ஒப்பந்தம்" என்ற சிறு பிரசுரம் ஒன்றை வெளியிட்டார். அதில் 30 ஆயிரம் பிரதிகள் வரை மக்கள் மத்தியில் விற்கப்பட்டன. அந்தப் பிரசுரத்தை விநியோகிக்கச் சென்றவர்களைப் பொது மக்கள் பலர் பேசினார்கள். கொக்குவில் பகுதியில் அடிக்கவும் செய்தார்கள். "இந்தியா நமக்கு நல்லதையே செய்ய வந்திருக்கிறது. நீங்கள் குழப்பப் பார்க்கிறீர்களா?" என்றும் கேட்டனர். தற்போதைய சூழலில் 13ஐ ஆதரித்தும் இந்தியா தீர்வொனறைப் பெற்றுத் தரும் என்றும் நம்பும் நிலையில் 6 கட்சிகள் இருக்கத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதை எதிர்க்கிறது. இது பற்றி மக்கள் விளங்கிக்கொள்வதற்கு மு.திருநாவுக்கரசுவால் 1987ஆவணி 1ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட இந்தச் சிறு பிரசுரம் போதுமானதாக இருக்கலாம்.

**யாருக்காக இந்த ஒப்பந்தம் - 01**

இந்த நூற்றாண்டு முழுதும் ஒப்பந்தங்களினால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுவந்த தமிழ் மக்கள், இப்போது மீண்டுமோர் ஒப்பந்தத்தைச் சந்திக்கின்றனர். இந்த ஒப்பந்தம் யாருக்காகச் செய்யப்படுகிறது; எமது நலன்கள் எவ்வாறு அடகு வைக்கப்படுகின்றன என்பதை நாம் ஆராய வேண்டும். இது தமிழினத்தை ஏமாற்றுகின்ற, அவர்களைச் சகதியில் தள்ளி விடுகின்ற ஓர் ஒப்பந்தமாகும்.

இத்தகைய சதிகாரத்தனமான சமாதானம், ஒப்பந்தம் என்பதற்கு நாம் அடிமையாகிவிடமுடியாது. சமாதானத்தை விரும்பும் நாம் சமாதானத்தை நிலைநாட்டப் பலாத்காரமாகப் போராடவேண்டியுள்ளது. இதுதான் எமது சந்ததியின் தலைவிதி.

தமிழ்பேசும் மக்களாகிய நாம் எப்போதும் அமைதியையும் சமாதானத்தையுமே விரும்பினோம். சிங்கள - பௌத்த மக்களுடன் இணைந்து ஐக்கிய இலங்கையில் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழவிரும்பினோம். பலாத்காரத்தின் மீது நம்பிக்கையற்ற ஒரு மக்கள் கூட்டமாக வாழ்ந்தோம். அமைதிக்குப் பெயர்போன மக்களாய் வாழ்ந்தோம். சேர்.பொன் இராமநாதன், சேர்.பொன். அருணாசலம், கே.பாலசிங்கம், ஹண்டி பேரின்பநாயகம், வைத்திலிங்கம் துரைசுவாமி, ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ். ஜே.வி.செல்வநாயகம் போன்ற சகல தலைவர்களுமே ஐக்கிய இலங்கையில் தமிழர் ஓர் அங்கமாக இணைந்து வாழ்வதையே விரும்பினர். தலைவர்கள் மட்டுமல்ல, மக்களும் அவ்வாறே விரும்பினர்.


நாம் எப்போதும் சிங்கள மக்களிடம் நேசக்கரத்தை நீட்டினோம். அகிம்சை மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட்டோம். ஆனால் பேரினவாதச் சிங்களத் தலைவர்களும் ஏனைய பேரினவாதிகளும் எமது நேசக்கரங்களைத் தொடர்ச்சியாகவே துண்டித்து வந்தனர். எம்மைப் பலாத்காரத்தினால் ஒடுக்கினர். நாம் அகிம்சையும் சமாதானமும் பேசிய ஒவ்வொரு கட்டத்திலும் அவர்கள் பலாத்காரத்தையும் இம்சையையும் எமது தலை மீது சுமத்தினர். எமது தேசியத் தனித்துவத்தை அறுத்தெறிவதில் அயராது தொடர்ந்து செயற்பட்டனர்.

நாடாளுமன்றச் சட்டங்களாலும் அரசியல் திட்டங்களாலும் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளாலும் எமது உரிமைகள் அனைத்தையும் மீறி வந்தனர். மேலும் காலத்துக்குக் காலம் இனக் கலவரங்களாலும் காவல் மற்றும் படை ஒடுக்குமுறைகளாலும் காடையர்களின் கட்டவிழ்ப்புகளாலும் எம்மைப் பல வழிகளிலும் ஒடுக்கி வந்தனர். எமது அரசியல், பொருளாதார, சமூக வாழ்வு அனைத்தையும் நாம் இழந்துநின்றோம். மிருகங்களாக மட்டுமல்ல மிருகங்களைவிடக்கேவலாமாக நாம் இந்த நாட்டில் ஆக்கப்பட்டோம். வனவிலங்குகளுக்குப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ள இந்த நாட்டில் தமிழனுக்குப் பாதுகாப்பற்ற நிலை உருவாகியது. இத்தகைய சூழலில் நாம் ஐக்கியமாக வாழ்வது சாத்தியமற்றது என உணர்ந்தோம். பிரிந்து தனி அரசு அமைப்பது என்ற முடிவுக்கு வந்தோம். சமாதான வழிகளில், அமைதிவழி, அகிம்சைவழிப்போராட்டங்கள் பயனற்றவை என்பதை உணர்ந்தோம். அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் நாம்வேறு வழியின்றி எமது எதிர்காலச் சந்ததியினரின் அமைதியான வாழ்வுக்காக எதிரியால் ஏவப்பட்ட பலாத்காரத்தை ஏற்கவேண்டியவர்களானோம். பலாத்காரத்தின்மீது நம்பிக்கை வைத்ததற்குக் காரணம் சிங்களப்பேரினவாதிகளே. எமது எதிர்காலச் சந்ததி அமைதியாக வாழவேண்டுமாயின் ஆயத பலத்தால் முன்னேறுவதைத் தவிர வேறு வழியில்லை. விட்டுக்கொடுப்புகளற்ற போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழியில்லை. நாளும் பொழுதும் அழிவதைவிட வாழ்வுக்கும் சாவுக்குமான போராட்டத்தில் எம்மை ஈடுபடுத்தவேண்டி ஏற்பட்டது. சமாதானப் பிரியர்களாகிய நாம் ஆயுத மேந்த வேண்டியதன் வரலாறு இதுவே.

(மிகுதி தொடரும்)

---

# தனுஷ் ரசிகர்களுக்கு ஏமாற்றம்!



ரையான் காஸ்லிங், க்றிஸ் எவான்ஸ், தனுஷ் நடிப்பில் உருவாகி வரும் ஹாலிவுட் படமான 'தி க்ரே மேன்' படத்தின் க்ளிம்ப்ஸ் வெளியாகியுள்ளது.

நெட்ஃபிளிக்ஸ் ஓடிடி தளத்தின் தயாரிப்பாக 'தி க்ரே மேன்' என்கிற திரைப்படம் உருவாகிறது. 2009ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த மார்க் க்ரேனி என்பவர் எழுதிய 'தி க்ரே மேன்' என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு இந்தப் படம் உருவாகிறது. இதில் ரையான் காஸ்லிங், க்றிஸ் எவான்ஸ் உள்ளிட்ட பிரபல நட்சத்திரங்கள் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தை 'அவெஞ்சர்ஸ் இன்ஃபினிடி வார்', 'எண்ட்கேம்' உள்ளிட்ட படங்களை இயக்கிய ருஸ்ஸோ சகோதரர்கள் இயக்குகின்றனர். இந்தப் படத்தில் ஒரு முக்கியக் கதாபாத்திரத்தில் தனுஷ் நடித்துள்ளார். கொரோனா அச்சுறுத்தலால் இடையில் நிறுத்தப்பட்ட இப்படத்தின் படப்பிடிப்பு கடந்த ஆண்டு மீண்டும் தொடங்கி ஒரே கட்டமாக முடிக்கப்பட்டது.

இந்நிலையில் இப்படத்தின் முதல் க்ளிம்ப்ஸ் காட்சிகளை நேற்று நள்ளிரவு படக்குழு அதிகாரபூர்வமாக வெளியிட்டது. வெளியிட்ட சில நிமிடங்களிலேயே பல லட்சம் பேரால் பார்க்கப்பட்ட உலக அளவில் ட்ரெண்ட் ஆனது. ஆனால் இந்த க்ளிம்ப்ஸ் காட்சிகளில் தனுஷ் தொடர்பான காட்சி எதுவும் இடம்பெறவில்லை. இதனால் தனுஷ் ரசிகர்கள் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளனர். தனுஷ் தொடர்பான காட்சிகளை வெளியிடுமாறு ட்விட்டர் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் படக்குழுவினரிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மராசா

# சிறைக்குள்...

42



## போதையில் நின்றவாறு கைத்துப்பாக்கியால் குறிபார்த்த ஜெயிலர்

**31.5.2002** அன்று காலையில் அனுராதபுரத்திலிருந்து திருகோணமலைக்குப் புறப்பட்டோம். அன்று திருகோணமலையைச் சேர்ந்த பாபு என்ற நண்பர் (பின்னர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்) பிணையில் விடுதலையாகும் நிலை இருந்தது. அந்த ஸ்கொட்டுக்குச் சஞ்சீவ என்ற ஜெயிலர் பொறுப்பாக இருந்தார்.

திருகோணமலை நீதிமன்றிலிருந்து திருகோணமலைச் சிறைச்சாலைக்குக் கொண்டு போய்த் தங்க வைத்தார்கள். அன்று விடுதலையான நண்பர் பாபு மதிய உணவுப் பொதி ஒன்றை எனக்கு வாங்கித் தந்தார். 3 மணிநேரம் வரை திருகோணமலைச் சிறையில் அடைக்கப்பட்டேன். மாலை 3 மணியளவில் அனுராதபுரம் போவதற்குத் தயாரானேன்.

பெண் கைதிகள் இருவரும் பெண் அச்சுக் கைதி ஒருவரும் எம்முடன் இருந்தார்கள். சிறைச்சாலை ஊழியர்கள் எல்லோரும் உச்ச போதையில் இருந்தார்கள். அனுராதபுரம் திரும்பும் வழியில் கன்னியா வெந்நீரூற்றைப் பார்ப்பதற்குப் பேருந்தைத் திருப்பினார்கள். சிறைச்சாலை ஊழியர்கள் அனைவரும் இறங்கிப்போய்ப் பார்த்தார்கள். எங்களைச் சனங்கள் புதினமாகப் பார்த்தார்கள். பேருந்து மீண்டும் அனுராதபுரம் நோக்கிப் புறப்பட்டபோது சஞ்சீவ என்ற ஜெயிலர் போதை தலைக்கேறித் தனது கைத்துப்பாக்கியுடன் பின்சீற்றில் சாய்ந்து நித்திரை செய்தார். அவரது உறவுக்காரப் பையன் ஒருவனும் அந்தப் பேருந்தில் பயணம் செய்தார் (கைதி அல்ல). பின்னர் கைத்துப்பாக்கி தவறி பேருந்துக்குள் விழுந்தது. அதை எடுத்துக் குறிபார்த்துச் சரியாக இயங்குகிறதா என்றெல்லாம் பார்த்தார்.

சிலவேளை ஒரு ரவை பாய்ந்திருந்தால் பேருந்துக்குள் இருந்தவர்களில் யாராவது ஒருவர் குண்டடிபட வாய்ப்பிருந்தது.

இதைவிடப் பெண் கைதிகளும் பெண் சிறைச்சாலை ஊழியர் ஒருவரும் அந்தப் பேருந்துக்குள் இருப்பதை யாரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. சிங்களத்தில் தகாத வார்த்தைகளை மிகச் சாதரணமாகப் பேசிக்கொண்டு வந்தார்கள். வழக்குக்கான கொமிற்றல் கோவைகளை வைத்திருந்தவர் அதிக போதையில் நித்திரையாகி விட்டார். அந்தக் கோவைகள் பேருந்துக்குள் கொட்டுண்டு காற்றில் பறந்தன. திருகோணமலையிலிருந்து வந்த பெண் சிறை ஊழியர் அவற்றைப் பொறுக்கி உரியவரிடம் கொடுதத்தார்.

ஒரு கைதியின் நீதிமன்ற உத்தரவுத் தாள் தொலைந்துவிட்டால் சிறை ஊழியர்கள் ஏதாவது காரணம்கூறித் தப்பிவிட முடியும். ஆனால் குறிப்பிட்ட கைதியின் விடுதலையில் அது பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். மாலை 6.30 மணிக்கு அனுராதபுரச் சிறைச்சாலையைச் சென்றடைந்தோம்.

**9.6.2002** அன்று காலையில் அனுராதபுரச் சிறைச்சாலையிலிருந்து திருகோணமலைச் சிறைச்சாலைக்கு என்னை ஏற்றினார்கள். காலை 8 மணியளவில் பேருந்து புறப்பட்டது. என்னுடன் 4 கைதிகள் திருகோணமலைக்குப் பயணமானார்கள். அன்றைய ஸ்கொட்டுக்குப் பொறுப்பாக வந்த ஜெயிலர் அவரது மனைவி 3 சிறிய பெண் பிள்ளைகள் ஆகியோரையும் அந்தப் பேருந்தில் ஏற்றிவந்தார். திருகோணமலை ஸ்கொட் போவதற்கு அனுராதபுரம் ஜெயிலர்களுக்கிடையில் ஒரே போட்டியிருக்கும். இதற்குக் காரணம் திருகோணமலையில் மீன் வாங்குவதும், இடங்களைச் சுற்றிப் பார்ப்பதுமாகும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் திருகோணமலைக்குப் போகும்போதே கன்னியா வெந்நீரூற்றைப் பார்க்கப் போனார்கள். வெளியிடங்களில் இருந்து வந்த மக்கள் நிறைந்திருந்தார்கள். அதற்குள் சிறைச்சாலை பேருந்தை நிறுத்தியவுடன் எல்லா மக்களும் எங்களைப் புதினம் பார்த்தார்கள். பொதுவாக மக்களின் மனநிலையில் சிறைச்சாலை பேருந்துக்குள் இருப்பவர்கள் கொலை, கொள்ளை, வன்புணர்வு போன்ற குற்றச்செயல்களைப் புரிந்தவர்களாக இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பே அதிகமாக இருக்கும். சிலர் எம்மைப் பார்ப்பதையே தவித்தார்கள்.

(தொடரும்)

---

ஐயங்கொண்டான் சுவாமிகள்

44

# எமையறிதல்

கண்ணுக்கு முன்பாகவே பகுதி பகுதியாகச் செதுக்கப்பட்ட கடவுளை நம்புகிற காவித் திரிகிற நாம், செவிவழியாக உட்திணிக்கப்பட்ட கடவுளை ஐயத்திற்கிடமின்றி ஏற்றுக் கொண்டாடுகிற நாம், மனம் பற்றி எவ்வாறு உணர்ந்துகொண்டு செயலாற்ற முடியம்?

மனம் ஏன் அலைகிறது என்பதற்கு ஒரு காரணமாகக் கடவுள் என்கிற கற்பிதம் இருக் கும் அதேவேளை பட்டறிவு என்பதைப் பகுத்தறிவோடு பிரயோகிக்கும் ஆற்றலைத் தொலைத்துவிட்டு அலைவதாவது உணரப் படுகிறதா?

எதையுமே ஆராய்ந்து தெளிவடையும் வரை குழப்பமே ஆட்சிசெய்யும். இங்கேதான் நாம் எம்மை நாமே ஏமாற்றுகின்றோம். மனதை ஒரு நிலைப்படுத்துதல் என்பதானதுதான் அந் தப் பெரிய ஏமாற்று. நான் யார்? நாம் யார்? என்ன செய்துகொண்டிருக்கிறோம்? ஏன் செய்கிறோம்? போன்ற வினாக்களுக்கான விடைகளை எப்போதாவது தேடியுள்ளோமா? விடைகளை எங்கே தேடுவது வினாக்களையே இன்னமும் கண்டடையவில்லையே என்பது தான் யதார்த்தமானது.

நானும் நாமும் கடைவுளின் அதியற்புதப் படைப்புகள். மனதை ஒரு நிலைப்படுத்தி கடவுளை கடவுளை வணங்குகிறோம். பேரின் பமயமான பெருவாழ்வைப் பெறுவதற்காகச் செய்கிறோம். இதைத்தானே மேற்குறித்த வினாக்களுக்கான விடைகளாகக் கொண்டிருக்கிறோம். இந்த விடைகள் நாமாகத் தேடிய விடைகளா? இல்லையே அவை யாராலோ எப்போதோ கூறப்பட்டவையே யன்றி வேறில்லை. இதுதான் நான் சொன்ன ஏமாற்று. இந்த விடைகளைக் கூறியவனல்ல ஏமாற்றுப் பேர்வழி. நாம்தான் ஏமாற்றுப் பேர்வழிகளாயிருக்கிறோம்.

எமக்குள்ளிருக்கிற மனதை நாமே கட்டுக்குள் வைத்து குறித்த ஒரு திசையில் நகர்த்த முடியாத நாம் கவனச் சிதறல்களுக்கு ஏதுவான காரணிகள் ஏராளமுள்ள ஓரிடத்தில் மனதை ஒருநிலைப்படுத்தலாம் என நம்பிக் கொண்டிருக்கிறோம். சந்தடி என்பதற்கப்பால் இரைச்சல் மிகுந்திருக்கும் ஆலயத்தை நாடுகிறோம். செவிகளுக்கு மட்டுமல்ல ஐம்புலன்களுக்குமே சவாலான விடயங்களை மிகை யாகக்கொண்ட ஒரு தொகுதியே ஆலயம் என்பதை உணரத்தவறிவிடுகிறோம். மனதை ஒரு நிலைப்படுத்தும் ஒரேயிடமாக ஆலயமே இருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

ஆளாளுக்கு இதமான அமைதியான பிடித்தமான சூழல் என்பது மாறுபட்டேயாகும். ஒரு போதுமே ஒன்றாக இருப்பது சாத்திய மற்றது. எனக்கான ஆறுதலை தரக்கூடிய சூழலை நானே தான் தேர்ந்தெடுக்கமுடியும். பிறனொருவனல்லன். கடவுளுமல்ல. அதைவிடுத்து மனத்திற்கு ஆறுதல் வேண்டுமென எங்கெல்லாமோ அலைந்து கொண்டிருக்கிறோம். [illegible] மட்டுமே உள்ள இல் லாதவைகளிலிருந்து ஒரு இருப்பைத் தேடி யலைகிறோம். இல்லாதது எப்படி இருப்பாகும்? ஏதாவதொன்றிலிருந்துதான் பிற ஒன்றோ பலவோ உண்டாக முடியும்.

இங்குதான் நாம் நிதானத்தையிழந்து போகிறோம். உடலிற்கும் உள்ளத்துக்கும் அமைதி அல்லது ஆறுதல் வேண்டும் என்று அவாவுறுகிறோம். எந்த உடலிற்கு ஆறுதல் கேட்கி றோமோ அந்த உடலை வருத்துகிறோம். எந்த மனதிற்கு ஒரு அமைதியை யாசிக்கி றோமோ அந்த மனதையே போட்டுக் குழப்பிக்கொண்டிருக்கிறோம். நாடுவது அல்லது விரும்புவது எது? என்பதைத் தவறவிட்டு விட்டு நாமே அவற்றைக் குழப்பியடித்துவிட்டு தேடியலைகிறோம். அலைவுற்று உடலையும் மனதையும் பாதிப்படையச் செய்தகொண்டிருக்கிறோம் என்பதையாவது உணரமுடிகிறதா?

ஒன்றைத் தேடுகிறோம் என்றால் அது என்னவென்ற தெளிவு அவசியமானது. தேடிக் கொண்டே அலைகின்றபோது கிடைப்பதை இனங்கண்டு திருப்திப்பட அது என்ன எப்படியிருக்கும் போன்ற விடயஅறிவு அவசியமான தில்லையா? கடவுளைத் தேடியலைகையில் கற்பனைக் கடவுள் தற்செயலாக அதிசயமாக முன்னே வந்து நின்றால் கூட எம்மால் இனங் கண்டுகொள்ள முடியாத ஒரு நிலையெ உள்ளது. எந்தவொரு விடயமும் அவ்வாறேதான். யாரோ சொன்ன ஒரு அமைதியை ஆரோக்கி யத்தை நாம் எவ்வாறு அடையாளங் காணப்போகிறோம்?

பொதுவாகவே போதனைகள் வழியாக மேம்போக்காக அறிந்து வைத்துள்ள எந்த வொன்றையும் அப்படியே அடைவது சாத்தி யமானதல்ல என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பதினெட்டு வயதிற்குரிய உடல் வலிமையை பெற்றுக்கொள்ளும் வித்தைகளை எண்பது வயதில் முயற்சிக்கலாமா? எவ்வளவு முயன்றாலும் கிட்டுமா? யாருக்கு எது எப்பொழுது எவ்வளவு எவ்வாறு போன்ற வினாக்களுக்கூடாக எமக்குத் தேவையானதை அடைதல் அவசியமானதில்லையா? சிந்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ கல்(ல்)லாநிதி - பணத்துக்குப் பட்டம்

சுதேசிகன்

'பட்டம் பதவியிலிருந்தால் மதிப்புதானே தேடி வரும்' என்பது வழக்குரை. "பட்டம் - பதவி" என்பதாவது பட்டம் - படிப்புத் திறமை தகுதி, பதவி - படிப்புத் திறமையால் அடையும் பணித் தகுதி என்று வரையறை செய்யப்படுகிறது. ஆனால் அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் பட்டங்களும், பதவிகளும் மலிந்தே காணப்படுகின்றன.

சில காலங்களுக்கு முன்னர் வரை கலாநிதி என்ற சொல்லுக்கு ஒரு பெறுமதி இருந்து வந்தது. ஒருவர் தன் வாழ்நாளில் தன் தகுதியை வளர்த்துக் கொள்வதற்காக கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியதன் பயனாகப் பல பட்டங்களைப் பெற்றுக்கொள்வது வழமையாக இருந்தது. பல்கலைக்கழகமொன்றின் பட்டத்தைப் பெறுவதென்பது எல்லோராலும் முடியாத காரியமாக இருந்து வந்தது. ஒரு தாய் தன் மகவை ஈன்றெடுப்பதைப் போலவே ஒவ்வொருவரும் தமது ஒவ்வொரு உயர் பட்டத் தகைமையைப் பெற்றுக்கொள்கிறார்கள். தூக்கம், பசி மறந்து கர்ப்ப காலத்தில் தன் சுக - துக்கங்களை மறந்து ஒரு தாய் தன் பிள்ளையைப் பெற்றெடுப்பதைப் போலவே ஒவ்வொருவரும் தத்தமது உயர் பட்டங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். அந்தக் காலப்பகுதியினுள் தமது பட்டத்துக்காக எத்தனையோ தியாகங்களைச் செய்தே பட்டத்துக்குச் சொந்தக்காரர்கள் ஆகிறார்கள்.

உதாராணமாக, ஒரு கலாநிதிப் பட்டத்தைத் தனக்குரியதாக்கிக் கொள்வதற்காக ஆகக் குறைந்தது நான்கு ஆண்டுகளுக்கு மேல் தன்னுடைய உழைப்பை முதலீடு செய்தே ஒருவர் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் காசுக்குக் கலாநிதிப் பட்டம் பெறுபவர்கள் "புழுத்துக்" கொண்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. உலகத்தின் எங்கோ ஒரு மூலையில் இருப்பதாகத் தம்மை வெளிப்படுத்திக்கொள்ளும் சில தனியார் பல்கலைக்கழகங்கள் உள்ளூரிலுள்ள சில ஓய்வு பெற்ற கல்வியியலாளர்களை விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு கௌரவ கலாநிதிப் பட்டங்களுக்குக் கடை திறந்திருக்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், தொடக்கக் கல்விக்குக் கூடப் பாடசாலைப் பக்கம் ஒதுங்காத பலர் தமது பெயருக்கு முன்னால் "கலாநிதி - DR." என்று போட்டுக் கொள்வதுதான்.

உலகில் பல இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் இத்தகைய கௌரவ கலாநிதிப் பட்டங்கள் கொடுக்கப்படுவது வழமையாக இருந்து வருகிறது. புலமையாளர்களை இனங்கண்டு, அவரவர் சிறப்புத் தேர்ச்சிகளைக் கௌரவித்து கௌரவ கலாநிதிப் பட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பட்டத்தை பெற்றவர்கள் - பெறுகின்றவர்கள் ஏதோ ஒரு வகையில், தகுதிவாய்ந்தவர்களாக : திறமையுள்ளவர்களாகவே காணப்படுவார்கள். இவ்வாறே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கடந்த 2012 வரை ஒவ்வொரு பட்டமளிப்பு விழாவிலும் கெரவ கலாநிதிப்பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கென அமைக்கப்பட்ட புலமையாளர்களைக் கொண்ட தேர்வுக் குழுவின் பரிந்துரைக்கமைய பல்கலைக்கழகப் பேரவையின் அங்கீகாரத்துடன் கௌவர கலாநிதிப் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. சமூகத்தின் தலை சிறந்த சேவையாளர்களாகவும், திறமையானவர்களாகவும், சமூகத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்களை அடையாளங் கண்டு கௌரவ கலாநிதிப் பட்டங்கள் வழங்கப்பட்டன. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் இத்தகைய பட்டங்களுக்குச் சான்று.

ஆனால் தற்போது யாழ்ப்பாணத்தில் சுமார் ஆறு லட்சம் ரூபாய் இருந்தால் யாரும் கலாநிதி ஆகலாம் என்பதே நிலைப்பாடு. இந்தியாவின் புகழ் பூத்த துடுப்பாட்ட வீரர் ராகுல் ராவிட்டுக்கு அண்மையில் பெங்களூரு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட கௌரவ கலாநிதிப் பட்டத்தை, ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதோடு மட்டுமல்லாமல் அந்தப் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டு அந்தப் பட்டமளிப்பு விழாவுக்குச் சென்ற அவர் அங்கு ஆற்றிய உரை பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அதன் சாராம்சம் இதுதான்,

"அன்புக்குரியவர்களே, எனது மனைவி ஒரு கலாநிதி. அவர் அந்தப் பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எவ்வளவு கஸ்டப்பட்டார் என்பதை நான் அறிவேன். அவர் அதனைப் பெற்றுக்கொள்வதற்காக நாளும், பொழுதும் பாடுபட்டார். பல இரவுகள் தனது தூக்கத்தைத் தொலைத்தார். எனது தாயார் ஒரு கலைத்துறைப் பேராசிரியர். அந்தப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்காக அவர் ஐம்பது வருடங்களைச் செலவழித்தார். தன்னுடைய வாழ்க்கையின் பெரும் பகுதியை அதற்காக அர்ப்பணித்துள்ளார். நான் விளையாட்டுத் துறையில் திறமையாகத் தடம்பதித்துள்ளேன். கிரிக்கெட்டுக்காக நான் கடுமையாக உழைக்கிறேன். ஆனால் கலாநிதிப் பட்டத்தைப் பெறுமளவுக்கு எனக்குக் கல்வி அறிவு போதாது. இந்நிலையில் நான் இந்தப் பட்டத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வது?

உலகின் தலைசிறந்த அறிவியலாளர்களுள் ஒருவரான ஐன்ஸ்டீனை 1952ஆம் ஆண்டு இஸ்ரவேலிய அரசுக்குத் தலைமை தாங்குமாறு - தலைமை அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் ஐன்ஸ்டீன் அதனை அடியோடு மறுத்து விட்டார். பௌதிகவியலில் கற்றுத் தேர்ந்திருக்கும் எனக்கு நாட்டை ஆள்வது பற்றி என்ன தெரியும்? என்னால் இயலாது என்று அவர் அந்த வாய்ப்பை மறுத்திருந்தார்.



அதே போலவே உலகப் புகழ்பெற்ற கணித மாமேதை பெரல்மன் என்பவர் கணிதவியலுக்காக நோபல் பரிசைப் பெற்றிருந்தார். அதற்கு ஈடாகப் பெருமளவு பணம் அவரிடம் பேரம் பேசப்பட்ட போது அவர் அதனை மறுத்திருந்தார். எனது சிறுவயதில் எங்களிடம் அவ்வளவாகப் பணம் இருக்கவில்லை. எனது அம்மா கையில் கிடைக்கும் பணத்தைச் சிறுகச், சிறுகச் சேமித்து எண்ணி, எண்ணிச் செலவழிக்கக் கற்றுக் கொண்டதால், எண்ணிக்கையின் மூலம் ஓரளவுக்குக் கணிதத்தைக் கற்க முடிந்தது. தற்போது என்னிடம் பணத்துக்குத் தட்டுப்பாடில்லை. இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை வைத்து நான் என்ன செய்வது என்று கேட்ட அவர், தனக்கு வழங்கப்பட்ட சலுகையை அவர் மறுத்துவிட்டார்.

இவ்வாறு ஜன்ஸ்டீன், பெரல்மன் போன்றவர்களின் அடக்கம் என்னைத் தலை குனிய வைக்கிறது. என்னை நான் ஒரு திமிர்ப்பிடித்தவனாகவே பார்க்கிறேன். அவர்களின் தன்னடக்கமும், பணிவும் குறைந்ததொன்றல்ல. அது மிகப் பெரிய விடயம். நாங்கள் பணிவு மிக்கவர்களாக எம்மைச் சிறுமைப்படுத்திக்கொள்ளும் ஒவ்வொரு தருணத்திலும் மிகப்பெரிய வளர்ச்சியைக் காண்கிறோம்" என்றார்.

எங்களுடைய சமூகத்தில் ஐன்ஸ்டீன்களையும், பெரல்மன்களையும், ராவிட்டுகளையும் எப்போது காணப் போகிறோம்? ■

---

## நம்மவூர்ச் சுத்துமாத்து

செல்வநாயகம் - கோண்டாவில்

# கோவில்களில் வெளியேற்றப்படும் உள்ளூர் உபயகாரர்கள்

ஒருவர் ஒரு பெரிய கோவிலில் வருடாந்தத் திருவிழாவின் ஒரு நாளைத் தனதாக்கி அதற்கான செலவாக 3 ஆயிரம் ரூபாவைக் கொடுத்தார். தொடர்ந்து வருடா வருடம் ஏற்பட்ட செலவு அதிகரிப்பையும் ஏற்றுக்கொண்டு 18 ஆயிரம் ரூபா வரை செலுத்தி வந்தார். குறிப்பிட்ட நாளில் உபயகாரராக 20 வருடங்களுக்கு மேல் இருந்தார்.

இறுதியாக 18 ஆயிரம் ரூபா செலுத்தி உபயம் செய்திருக்கிறார். அடுத்த வருடத் திருவிழா விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட நாளுக்கான உபயகாரராக வேறு ஒருவரின் பெயர் போடப்பட்டது. அதைக் கண்டு அதிருப்தியடைந்த உபயகாரர் குருக்களிடம் விளக்கம் கேட்டார் (அது குருக்களுக்குச் சொந்தமான கோவில்) அதற்குக் குருக்கள் "ஏதோ பிழையாக அடித்திருக்கிறார்கள். நீர் உம்முடைய உபய நாளுக்கு வாரும்" என்றார்.

உரிய உபயகாரர் தனது குடும்பத்தாருடன் திருவிழா நாளில் கோவிலுக்குச் சென்றபோது அங்கு ஏற்கனவே புதிய இரண்டு உபயகாரர்கள் தெற்பை அணிந்து பூசைக்குத் தயாராக நின்றார்கள். குறிப்பிட்ட நபருக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. பின்னர் குருக்களிடம் விளக்கம் கேட்ட போது, "இனிவரும் காலத்தில் உபயத்துக்கான பணம் கூடிக்கொண்டு வருவதால் உங்களால் சமாளிக்க முடியாது. அதனாலை வெளிநாட்டுப் பாட்டிகளுக்கு மாற்றிக் குடுத்திருக்கிறன்" என்றார்.

அந்த வருடம் 18 ஆயிரம்படி 3 உபயகாரர்கள் ஒரே நாளில் நிறுத்தப்பட்டார்கள். வெளிநாடுகளில் வாழ்கின்ற பலர் இங்கிருந்து வெளியேறி 30 வருடங்களுக்கு மேலாகிவிட்டதால் தமது சொந்த ஊரில் அடையாளமிலல்லாது போய்விட்டனர். அந்த அடையாளத்தையும் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் தற்போது வாழும் வெளிநாடுகளில் அவர்களால் பெறமுடியவில்லை. அதேவேளை அவர்கள் வெளிநாடு சென்ற காலத்தில் கோவில் திருவிழா ஒன்றுக்கு உபயம் கொடுக்கும் அளவுக்குப் பண வசதியையும் கொண்டிருக்கவில்லை.

கோவில் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காகவும் வெளிநாட்டிலுள்ளவர்களின் உள்ளூர்ப் பெருமையை நிலைநாட்டுவதற்காகவும் உள்ளூரில் ஏற்கனவே பல வருடங்களாக இருந்த உபயகாரர்கள் தூக்கியெறியப்படுகின்றனர். இதனால் விரக்தியடையும் உள்ளூர் வாசிகள் தாம் நீண்ட காலம் வழிபட்டு வந்த கோவில்களுக்குப் போவதைத் தவிர்த்திருக்கிறார்கள். இதனால் கோவில்கள் பலவும் பணமுழைக்கும் மையங்களாக மாறி வருகின்றன. இது கடவுளின் சந்நிதானத்தில் நடக்கும் சுத்துமாத்தாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் நினைத்தால் எதையும் செய்வோம்...?

ரவீந்திரன்

தமிழ்ச் சமூகம் தற்போது எதிர் கொண்டுள்ள பிரச்சினைக ளுக்குப் படித்தவர்கள் என்று சொல் லிக்கொள்பவர்களே அதிக காரண மாகவுள்ளனர். இவர்களின் பொறுப் பற்ற தன்மையும் மற்றவர்களைப் பகடைக் காய்களாக அல்லது கறி வேப்பிலை போன்று பாவிப்பதுமே இதற்குக் காரணங்களாகும்.

தன்னைப் பொறியியலாளர் என் றும் மருத்துவரின் சகோதரன், நாடா ளுமன்ற உறுப்பினரின் முக்கியஸ்தர் என்றும் அரச தலைவருடன் நேரடி யாகத் தொடர்புபட்டவர் என்ற மறைமுகத் தோரணையிலும் நபர் ஒருவர் கண்டாவளைப் பிரதேசப் பெண் மருத்துவர் ஒருவருக்குத் தொலைபேசி மூலம் மிரட்டலைச் செய்து மூடன் மலத்தை மிதித்தால் மூன்றிடம் (கால், கை, மூக்கு) என் பதுபோலப் பொதுவெளியில் நாறிப்போயிருக்கிறார்.


அந்தப் பெண் மருத்துவர் திரா ணியுடன் "நீ யார் எனக்குக் கதைப் பதற்கு?" என்று மேற்கூறிய நபரின் கவச குண்டலங்கள் கழன்றுவிழும் அளவுக்குக் கேள்வி கேட்டிருந்தார். ஒரு மருத்துவரின் விடயத்தில் தமி ழ்ச் சினிமாப் பாணியில் கதைத்தவ ரைச் சமூக வலைத்தளங்கள் கடு மையாகப் பந்தாடின. குறிப்பிட்ட ஒலிவடிவத்தை அரச தலைவருக்கு அனுப்புங்கள் என்று அந்த உரையா டலை வெளிக்கொண்டு வந்தவரிடம் பலர் கேட்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு மருத்துவர் ஒருவர் சேவையாற்றச் செல்வதே பெரிய காரியம். மிகவும் பாதிக்கப்பட்ட சூழலில் வாழ்கின்ற மக்கள்தான் அவருடைய நோயா ளர்கள். போருக்கு முகம்கொடுத்து அந்த இழப்புகளில் இருந்து மீள முடியாமல் திண்டாடுபவர்கள். அன் றாடச் சீவியத்துக்குக்கூட அதிக கஸ்ரங்களை எதிர்கொள்பவர்கள். தமது நோய்க்கு அரச மருத்துவம னைகளையே நம்பியிருக்கிறார்கள்.

இந்த உரையாடலை மேற் கொண்ட நபர் தான் அரசியல்வாதி என்றும் கூறினார். சமூக அக்கறை யில்லாத அரசியல்வாதிகள், உயர் பதவி வகிப்பவர்கள், வியாபாரிகள் எனப்பலர் சாதாரண மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பல விடயங்களைக் கிடைக்கவிடாது குழப்பம் விளை விக்கின்றனர். இவ்வாறு போலி நபர்கள் எல்லா மட்டங்களிலும் தம்மை வலுக்கட்டாயமாகப் பிரபலப்படுத்த வும் மணல் வியாபாரம், மர விய பாரம், சட்டபூர்வமற்ற கட்டடங் களை நிறுவுதல், கைவிடப்பட்ட காணிகளுக்கு உறுதி முடித்தல், தனியார் மருத்துவமனைகளை உரு வாக்கிச் சிறிய நோய்களைப் பெரி தாக்கி மக்களிடம் பணம் பிடுங்குவது எனப் பல சமூக விரோதச் செயல்க ளைச் செய்து வருகிறார்கள். சாதா ரண மக்கள் அதைத் தட்டிக்கேட்க முடியாத சூழலில் ஒதுங்கிப் போகி றார்கள்.

அதேவேளை எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் தமது உள் ளூர்ப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும்போது அவர்களின் பின்ன ணியைத் தெரிந்து செயற்படாவிட் டால் குறிப்பிட்ட கட்சியும் அரசியல் வாதிகளும் அவரைச் சார்ந்தவர்க ளும் மக்களால் தூக்கிவீசப்படுவர்.

குறிப்பிட்ட தொலைபேசி உரை யாடலைச் செய்தவருக்கு இது முதல் குற்றமாக இருக்க வாய்ப் பில்லை. பெண் மருத்துவருக்கு விடப்பட்ட மிரட்டல் முதலையின் வாய்க்குள்


Provincial Department of Health Services
Through
The Regional Director of Health Services, Kilinochchi
Dr.A.Ketheeswaran
Provincial Director of Health Services, NP
Copies:
1. The Honourable Governor, Northern Province
2. The Chief Secretary, Northern Province
3. The Secretary, Ministry of Health, Colombo
4. The Secretary, Ministry of Health, Northern Province
5. The DGHS, Ministry of Health, Colombo

கைவிட்ட சம்பவம்போல ஆகி விட்டது. இது விடயத்தில் முதலில் பாராட்டப்படவேண்டியது அந்தப் பெண் மருத்துவரின் துணிவே. அதை வெளிக்கொணர்ந்த சமூக வலைத்தளங்களும் பாராட்டுக்கு ரியன. மக்களின் பிரச்சினைகளையும் மக்களுக்கு நன்மை செய்பவர்களை யும் கவனத்தில் கொள்ளவேண்டியது ஊடகங்களின் முதன்மைப் பணி யாகும். மிரட்டல் விடுத்த நபருக்குச் சார்பாக யாரும் களமிறங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. சாதார ணமாக ஒரு மருத்துவரைக் கடவு ளாக நினைக்கும்போது படித்தவர் கள் என்று கூறுபவர்கள் மருத்துவ ரைக் கரப்பான் பூச்சிபோல கையாள நினைத்ததன் விளைவே இங்கு நடந்தேறியுள்ளது.

2002 சமாதானச் சூழலின்போது கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஒன்றில் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கான அப் போதைய பிரதம செயலரும் விடு தலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல் வனும் கலந்துகொண்டார்கள். அப்போது அரச அதிபராக ராச நாயகம் இருந்தார். கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது ஒவ்வொரு துறைசார் விடயங்களும் ஆராயப் பட்டன. அதில் ஒரு துறைக்குப் பொறுப்பான பெண் அதிகாரி தனக்கு வாகனம் ஒன்றைப் பெற்றுத் தருமாறு பிரதம செயலரிடம் கேட் டார். தான் இந்தக் கூட்டத்துக்குக் கூடப் பல கிலோ மீற்றர் சைக்கிளில் தான் வந்தேன் எனத் தனது நிலை யைக் கூறினார். அதற்கு ரங்கராஜன் கூறிய பதில் நகைப்புக்குரியதாகவும் பாலியல் ரீதியான நக்கலாகவும் இருந்தது. சபையில் இருந்தவர்கள் சிரித்தார்கள். கூட்டம் முடிந்ததும் அரச அதிபரின் அறைக்குள் பிரதம செயலர் அழைக்கப்பட்டு தமிழ்ச் செல்வனால் எச்சரிக்கப்பட்டார். இவ்வாறான வார்த்தைப் பிரயோகங் களை எமது கட்டுப்பாட்டுப் பகுதி களில் வைத்துக்கொள்ள வேண்டாம் என்று கூறியதும் ரங்கராஜன் வியர்த் துப்போய் இறுகிய முகத்துடன் இருந்தார். இவ்வாறான சம்பவம் நடந்த கிளிநொச்சி மண்ணில் நடந் துள்ள இந்தச் சம்பவம் மிகவும் கண் டிக்கத்தக்கதே. ■

# ஏன்...? அப்படி...? 05

# மாட்டுக்குக் குறி வைக்கும் வழக்கம்

நட்சத்திரா

மாடுகளுக்கு இன்றைக்கும் மாடுவளர்ப்பாளர் கள் குறி சுடுகிறார்கள். மாட்டின் மேற்புறத் தோலில் சூடு வைப்பதன் மூலம் எரி காயம் ஏற்படுத்தப் பட்டு மேற் தோல் சிதைவடைகிறது. அந்தக் காயம் காலப்போக்கில் மாறிப்போகக் காயம் ஏற்படுத்திய தளும்பு மறையாமல் இருக் கும். பழங்காலத்தில் இருந்தே மாடுகளுக்குக் குறிசுடுவதை எம் முன்னோர்கள் சடங்குக்கு ஒப்பானதொரு செய லாக நிறைவேற்றி வந்திருக்கி றார்கள். கம்பியை நெருப்பில் காய்ச்சி - சூடாக்கி அதைக் கொண்டு தான் மாடுகளுக்குச் சூடுபோட்டுக் குறியிட்டி ருக்கிறார்கள். இந்தக் குறிகளை அவர்கள் ஏற் படுத்துவதற்குப் பல காரணங்கள் இருந்தன.

**காரணம் 1** - பழங்காலத்தில் மாட்டு வண்டில் களே போக்குவரத்து வாகனங்கள். மாடுகளே அதை இயக்கும் கருவிகள். மாடுகளின் தோளில் ஏற்றப்பட்ட வண்டிலை எஜமான் பிறப்பிக்கின்ற உத்தரவுகளுக்குப் பணிந்து இழுத்துச்செல்வதற்கு மாடுகள் பழக்கப்பட்டிருக்கும். நாணயக்கயிற்றால் அவற்றின் திசையைத் தீர்மானிப்பவராக எஜ மான் இருப்பார். இந்த வண்டில் மாடுகள் திட மானவையாகவும் முரட்டுத்தனமிக்கவையாகவும் இருப்பது இயல்பு. அதனால் அவற்றின் பின்பகு தியில் வீபூதிக் குறிபோல சமாந்தரமாக மூன்று குறிகளை நெருப்புக் கம்பியால் போடுவார்கள். அந்தக் காயம் காலப்போக்கில் மறைந்துபோக அது ஏற்படுத்திய வடு அப்படியே இருக்கும். அதாவது மேற்புறத் தடிப்பான தோல் நீங்கி உட் தசை காய்த்து மரத்துப்போனதாக வெளித்தெரியும்.

வண்டிலில் பொருத்தப்பட்ட மாடுகளின் பின் புறத்திலிருந்து அவற்றை ஓட்டும் எஜமான் அந்தந் நெருப்புத் தழும்புகள் உள்ள இடத்தில்தான் தனது தடியை வைத்திருப்பார். "மாட்டுக்கு அடித்தால்போல சூடு சொரணையில்லாமல் நிற் கிறான்" என்று உள்ளூரவர்கள் இப்போதும் சில மனிதர்களின் சுபாவத்தைச் சொல்வதுபோல மாடுகளின் தடினமான தோலில் அடிக்கும்போது அவற்றுக்கு அவ்வளவாக வலிப்பதில்லை என் பது உண்மைதான். அதன் காரணமாக அவை எஜமான் பிறப்பிக்கும் உத்தரவுகளுக்குக் கீழ்ப் பணியாமல் போகவும் வாய்ப்புண்டு. ஆனால் அவற்றின் பின்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட அந் தக் காயம் காய்ந்த தழும்பில் பிரம்புகொண்டு அடிக்கும்போது அவற்றுக்கு வலிக்கவே செய் யும். எஜமானின் சொற்பேச்சைக் கேட்க வேண் டிய கட்டாயம் ஏற்படும். இதுதான் அவற் றின் பின்புறத்தில் 3 தடித்த கோட்டுக் குறிகளுக்குப் பின்னால் ஒளிந்திருக்கின்ற இரகசியம்.

**காரணம் 2** - மாடுகள் செல்வங்களுக்கு ஒப் பானவை. மனிதர்களோடு நெருங்கிப் புழங்கும் பிராணிகள். அவற்றைப்போல எந்த மிருகமும் மனிதர்களோடு நேசம் கொள்வதில்லை. மனிதர்க ளுக்குச் சகல விதத்திலும் உதவுகின்ற அவை மனிதர்களிலேயே முற்றிலும் தங்கியுள்ளன. எனவே அவற்றைப் பாதுகாத்துப் பராமரிக்கவேண் டிய தேவை மனிதர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பாக இருக்கிறது. தொழில் நடவடிக்கைக ளுக்கு உதவுவது, பால், சாணம் போன்றவற்றை வழங்குவது என்பவற்றால் அவற்றை அதிகளவில் வளர்க்கவேண்டிய தேவையும் மனிதர்களுக்கு இருக்கிறது. பலரும் இவ்வாறு வளர்க்கத் தொடங் கும்போது நிறத்திலும் தோற்றத்திலும் ஒரே மாதிரி இருக்கின்ற மாடுகளை இனம்காண்பதில் உரிமையாளர்களுக்கு இடையே குழப்பம் ஏற் பட்டுவிடக்கூடாது என்பதற்காக அவற்றின் வயிறு, மற்றும் பின்புறங்களில் அடையாளங்களை இட்டார்கள். பெயர்களை, முதல் எழுத்துகளை குறிசுட்டு ஏற்படுத்தினார்கள்.

இவ்வாறுதான் மாடுகளுக்குக் குறிசுடும் பழக் கத்தின் பின்புலமும் காரணங்களும் இருந்தன. பசு, நாம்பன் என்ற பேதமில்லாமல் அந்தக் காலத்தில் அனைத்து மாடுகளுக்கும் இவ்வாறு குறிசுடும் பழக்கம் இருந்துள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளில்லா வானூர்திகளில் வேவு பார்த்தல்

கமலநாதன்

விங்கொமாண்டர் தியுத்த சொய்சா. இவர் அம்பலாங்கொடவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1989இல் படைத்தரப்பில் சேர்ந்தவர். தியத்தலாவ, கட்டுநாயக்கா, திருகோணமலைப் பகுதிகளில் பயிற்சி பெற்றவர். இவர் வான் படையைச் சேர்ந்த புலனாய்வு அதிகாரி. பின்னர் ஆளில்லாத வேவு வானூர்தி மூலம் தகவல்களைச் சேகரித்து படையினர் தாக்குதல்களை நடத்துவதற்குப் பக்கபலமாக இருந்தவர். தனது அனுபவங்களை வெனச வலைத்தளத்தில் பதிவு செய்திருந்தார்.



1989இல் படையில் சேர்ந்த நான் 1995 காலப் பகுதியில் ஓர் அதிகாரி நிலையை அடைந்தேன். வானத்திலிருந்து புலிகளின் நடமாட்டத்தைக் கவனித்துத் தாக்குதல் செய்வதில் ஆர்வத்துடன் இருந்தேன். 1995இல் புலிகள் இரணைமடுக்காட்டுப் பகுதியில் ஒரு வானூர்தி ஓடுபாதையை நிர்மாணிக்கின்றனர் என்று புலனாய்வுத் தகவல்கள் மூலம் அறிந்தேன். அது படையினருக்கு மிகவும் ஆபத்தானதாக எதிர்காலத்தில் மாறும் என்பதை விளங்கிக் கொண்டேன்.

எம்.ஐ. 17 உலங்குவானூர்தியின் வானோடி ஒருவர் தான் செல்லும் பயணத்தின்போது என்னையும் ஏற்றி இரணைமடுக்காட்டுப்பகுதியைச் சுற்றிக் காட்டுவார். அதை வைத்துச் சில அவதானிப்புகளைச் செய்தேன். 1995 ஏப்ரல் 25ஆம் திகதியின் பின்னர் நான் அவ்ரோ ரக வானூர்தியில் வானோடியாக இருந்தபோது பல தடவைகள் இரணைமடுப் பகுதியை அவதானிக்க முடிந்தது.

தொடக்கத்தில் படைப் பயிற்சிக்குச் சென்ற 170 பேரில் 18பேரை வானோடியாகப் பயிற்றுவித்தனர். அதில் நானும் ஒருவன். என்னுடன் சேர்த்து 14 பேரை இந்திய வான்படைப் பயிற்சிக்கு அனுப்பினார்கள். ஏனைய 4 பேர் மலேசியாவிலிருந்த தனியார் வானூர்திப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றார்கள். பயிற்சியின் பின்னர் எம்.ஐ.17 உலங்குவானூர்திச் சேவையையே நான் விரும்பியிருந்தேன். எனினும் எனக்கு வை 12 வானூர்தியே தரப்பட்டது. எம்.ஐ.17 உலங்கு வானூர்தி எனது நண்பரான டேமிம் சில்வாவுக்குக் கிடைத்தது. நான் வை 12 வானூர்தி மூலம் வவுனியா வான்படைத் தளத்திலிருந்து காயப்பட்ட சிப்பாய்களை அனுராதபுரம், ரத்மலானை வான் படைத் தளங்களுக்கு மாற்றுவது படையினருக்கு அவசியமான பொருள்களைப் பரிமாற்றம் செய்வது போன்ற பணிகளில் ஈடுபட்டேன். காயப்பட்ட 17 சிப்பாய்களை ஏற்றிச்செல்லக்கூடிய வசதியிருந்த அந்த வானூர்தியில் 20 பேரையாவது ஏற்றிச்செல்வேன். என்னால் முடிந்த அளவுக்குக் காயப்பட்ட சிப்பாய்களைக் காப்பாற்றினேன்.

### புலிகளின் கப்பல்களை வேவு பார்ப்பது

புலிகள் கப்பல் மூலம் ஆயுதங்களைக் கொண்டு வருவதால் 24 மணி நேரமும் கடற்பரப்பில் ஏதோ ஒரு வானூர்தி பறப்பில் இருக்கும். இரண்டு வானூர்திகள் மாறி மாறிப் பறப்பதால் ஒரு வானூர்தி புறப்பட்டு 4 மணிநேரம் கடற்பரப்பில் பறக்கும் (எரிபொருள் 4 மணிநேரம் பறப்பதற்கே போதுமானதாக இருந்தது) பிற்பகல் 2 மணி, மாலை 6 மணி, இரவு 10 மணி, அதிகாலை 2 மணி என்ற கால இடைவெளியில் இந்த வானூர்திகள் பறப்பில் ஈடுபடுவது வழக்கம். பலாலி முகாமில் ஒரு பெரிய அறையில் இரவில் படுப்போம். எங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் எழுந்து வானூர்தியை எடுத்துச் செல்வது வழக்கம்.

ஒருநாள் அதிகாலை 2 மணிக்கு எனக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதிகாலை 1.30 மணிக்குக் கடிகாரத்தில் அலாரம் வைத்திருந்தேன். அந்த மணி பெரிய சத்தமாக இருப்பதால் அநேகமாக அங்கு படுத்திருக்கும் அனைவருக்கும் நித்திரை குழம்பும். அன்று நான் அதிகாலை 1.30 மணிக்கு எழுந்தபோது சக வானோடியான பிரசன்ன வெத்தசிங்க என்பவர் இப்படிக் கூறினார். "இனி எனக்கு நித்திரை வராது இந்தப் பறப்புக்கு நான்போகிறேன். நீ எனது நேரத்துக்குப் போ" என்றுவிட்டு அவர் புறப்பட்டுச் சென்றார்.

இந்த வேவுப் பணிக்காக 70 கடல் மைல் தூரம் வரை பறப்பில் ஈடுபடுவோம். வெத்தசிங்க பறப்பில் ஈடுபட்டு 2 மணி நேரத்தில் அவரின் தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டது. கடலில் கப்பல் ஒன்று நிற்கிறது. அதன் பெயர் கொரியன் மும்பை என்றும் கடல் மட்டத்திலிருந்து 10 அடி உயரத்தில் பறந்து வெளிச்சம்போட்டு அந்தக் கப்பலின் பெயரைக் குறிப்பிடுவதாகவும் அவர் இறுதியாகக் கூறியிருக்கிறார். அதன் பின் அவரிடமிருந்து தொடர்பு ஏதும் கிடைக்கவில்லை. உயரத்தில் பறந்தால் கப்பலில் இருந்து தாக்குதல் நடத்த வாய்ப்புண்டு என்பதால் தாழ்வாகப் பறந்திருக்கிறார். அந்த வை 12 வானூர்தி அவரது உதவியாளர் என எல்லாமே மாயமாக மறைந்துவிட்டமை ஒரு விநோதம். இதுவரை அந்த வானூர்தியின் பாகங்களைக்கூடத் தேட முடியவில்லை.

பின்னர் நான் பறப்பில் ஈடுபட்டபோது கப்பலின் பக்கவாட்டில் கொரியன் மும்பை என்ற பெயர் இருப்பதை அவதானித்தேன். அவர் கூறிய இறுதித் தகவல் சரியானது என்பதை அதன் மூலம் உறுதிப்படுத்த முடிந்தது. அந்த வானூர்தி புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

### ஆளில்லா வானூர்திகளில் வேவு

அன்மான் ஏரியல் வெய்க்ஹிள் (ஆளில்லாத ஆகாய வானூர்தி) என அழைக்கப்படும் சிறு வானூர்திகளை வானில் பறக்கவிட்டு அதில் பொருத்தப்பட்டிருக்கும் கமராக்கள் மூலம் நிலத்திலும் கடலிலும் வேவு பார்ப்பதில் எனக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டது. 2 ஆயிரமாம் ஆண்டு இந்தப் படையணியில் சேர்ந்தேன். இதன் மூலம் போரை நேரில் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. புலிகள் பலாலி வான் நிலையத்துக்கும் அதை அண்மித்த பகுதிகளுக்கும் எறிகணை வீசுவதால் வானூர்திகளை இறக்கி ஏற்றுவதில் மிகவும் சிரமமிருந்தது.

வானூர்தி பலாலியில் இறங்கவிருக்கிறது என்று தகவல் கிடைத்ததும் எமது அணியினர் யு.ஏ.வி. எனப்படும் ஆளில்லாத வானூர்திகளை வானத்தில் பறக்கவிட்டு வேவு பார்ப்போம். ஓர் அறையில் இருந்துகொண்டு அதன் ஒளிப்படங்களை அவதானித்தேன்.

எமது வேவு வானூர்தி வானத்தில் பறப்பில் ஈடுபட்டிருக்கும்போது புலிகள் தமது ஆட்லறித் தளங்களில் இருந்து எறிகணை வீசமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் எங்கிருந்து ஏவுகிறார்கள் என்பதை ஆளில்லா வானூர்திகள் படம் பிடித்துவிடும் என்பதற்காக.

இந்த யுக்தியைப் பயன்படுத்தி வான்படை வானூர்திகள் தங்கு தடையின்றி இறங்கி ஏறின. புலிகள் இந்த விடயத்தைப் புரிந்துகொண்டபின் ஆளில்லா வானூர்தி பறப்பில் இருக்கும்போதே எறிகணைகளை ஏவினார்கள். இது எனக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. எனினும் வானூர்திகளுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை. வானூர்தி ஓடுபாதையை ஒழுங்குபடுத்தும் ரூவான் பாலசூரிய, குருகே ஆகியோர் ஓடுபாதைக்கு அருகில் பங்கர்களில் இருப்பார்கள். அவசியமான வேளையில் வானூர்திகளை இறக்குவதிலும் ஏற்றுவதிலும் துணிவுடன் செயற்பட்டார்கள்.

ஆளில்லா வானூர்தி பறக்கும்போது புலிகள் ஆட்லறி அடித்ததால் அவர்களது ஆட்லறித் தளத்துக்கு அருகில் முன்னரங்கப் பகுதிகளில் கடமையில் ஈடுபட்டிருக்கும் சிப்பாய்கள் புலிகளின் எறிகணை வெளியேறும் சத்தத்தைக்கேட்டவுடன் பலாலிக்கு அறிவிப்பார்கள். எறிகணை வெளியேறும்போது கேட்கும் சத்தத்தில் இருந்து 40 செக்கன்களின் பின்பே அந்தக் குண்டு விழுந்து வெடிக்கும். அதற்கிடையில் சிப்பாய்கள் பாதுகாப்பு பங்கருக்குள் நிலையெடுத்துவிடுவார்கள்.

ஒரு நாள் மட்டும் புலிகள் 80 எறிகணைக் குண்டுகளை ஏவினார்கள். ஆனால் ஒரு சிப்பாய் கூடக் காயப்படவில்லை. நான் பலாலியில் இருந்தபோது எனது நண்பரான துஷார சலுகாது உலங்குவானூர்தியுடன் பலாலிக்கு வந்தார். அப்போது தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. எங்கள் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ள முடியயாத நிலையிருந்தது. அதனால் சிறிய துண்டுகளில் கடிதங்களை எழுதிப் பலாலிக்கு வருகின்ற வானோடிகளிடம் கொடுத்து அனுப்புவோம். அந்த வசதிகூட வானூர்தி, வானோடிகளுடன் சம்பந்தப்பட்ட எமக்கு மாத்திரமே இருந்தது. துஷார என்னிடம் கூறினார்; "பலாலி முகாம் புலிகளால் கைப்பற்றப்பட வாய்ப்புண்டு அவ்வாறான சூழல் ஏற்பட்டால் நீ கடலில் குதித்து நீந்து நான் எப்படியும் உன்னைக் காப்பாற்றுவேன்" என்று. எனக்கு நீந்தத் தெரியும் என்பது அவருக்குத் தெரியும். அதேவேளை அவர் சொன்னால் சொன்னபடி செய்யும் ஒருவர் என்பது எனக்கும் தெரியும்.

(தொடரும்...)

## இளம்பெண்ணின் விறுவிறு சாதனை

வானூர்தியில் தனி ஒருவராக அமர்ந்துகொண்டு உலகை வலம் வர முடியுமா? முடியும் என்று நிரூபித்திருக்கிறார் பிரிட்டன் - பெல்ஜியம் என இரட்டைக் குடியுரிமைப் பெற்ற ஷாரா ரூதர்ஃபோர்டு என்கிற இளம்பெண். இதெப்படி சாத்தியமானது?

ஷாராவின் அப்பாவும் அம்மாவும் வானோடிகள் (பைலட்). பிறகென்ன? சிறு வயதிலேயே வானூர்திகளைச் செலுத்தக் கற்றுக்கொண்டார் ஷாரா. உலகைச் சுற்றி வர 375 கிலோ எடையுள்ள குட்டி விமானத்தை ஷாரா வடிவமைத்தார் என்பதுதான் இதில் முக்கியம்.

அந்த வானூர்தியில் வானோடியாக அமர்ந்து ஆவணி (ஓகஸ்ட்) மாதத்தில் பெல்ஜியத்திலிருந்து உலகப் பயணத்தைத் தொடங்கினார். 41 நாடுகள், 52 ஆயிரம் கிலோ மீற்றரைக் குட்டி வானூர்தியில் கடந்துவிட்டு மீண்டும் பெல்ஜியத்துக்குக் கடந்த வாரம் திரும்பினார் ஷாரா.

இதன்மூலம் மிகக் குறைந்த வயதில் தனியாக விமானத்தில் உலகைச் சுற்றிவந்த இளம்பெண் வானோடி என்கிற சாதனையையும் புரிந்திருக்கிறார் இவர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் [illegible] லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.02.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781